580

ஸ்ரீ நரஸிம்ஹ ப்ரியா

580
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 OCT 1955
MADRAS

ஸ்ரீ ஆசார்ய ஜயந்தி மலர்

சித்திர விளக்கம்:— P. K. ராமபத்ரன்.

நமது ஆசார்யோத்தமர்களுக்கு அருள் புரிந்தும், அவர்களது ஜ்ஞாநபக்திகளுக்குப் போக்குவீடாய், அவர்களது செவிக்கினிய செஞ்சொற்களாலான பாமாலைகளால் மங்களாசாஸனம் பண்ணப்பட்டவர்களுமான திவ்யதேசத்தெம்பெருமான்களை சித்திரப்பகுதியில் நமது வாசகமஹா:சயர்களிடம் ஸமர்ப்பிக்கிறோம். முகப்பில் 'கலௌ வேங்கடநாயக:' எனப்படும் ஏழு மலையப்பனும், உள்ளே வரிசையாகக் கோயில், திருமலை, பெருமாள்கோயிலெம்பெருமான்களும், அடுத்தாற்போல் வீக்ஷாரண்யவாஸரஸிகனும் நமது மஹாதேசிகர்களிடம் அளவற்ற அநுக்ரஹஸாலியான எவ்வுள்கிடந்தானும், அதற்கடுத்தபடி நடுநாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான செல்வத்திருக்கோவலூரில் முதலாழ்வார்களிடம் விசேஷகடாக்ஷத்தைப்பண்ணி, நம் ஸ்வாமி தேசிகனால் தேஹளீசஸ்துதியால் மங்களாசாஸனம்பண்ணப்பட்ட தேஹளீசனும், அதன் பிறகு பாண்டவதூதனாகி சோகம் தீரெனவுரைத்து கீதோபதேசம் செய்த அல்லிக்கேணியமர்ந்த பார்த்தஸாரதியும், அதற்கடுத்தபடி வில்லிபுத்தூர் ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தனகல்பவல்லியான ஆண்டாளும், அதற்கடுத்தபடி அடியவர்க்கு மெய்யனும், பரமவைராக்யநிதியான ஸ்வாமியும் நின்வடிவழகு மறவாதார் பிறவாதாரே என்று பாடும்படியான வடிவழகுபடைத்த தெய்வநாயகனும், அவனையநவரதமடிபணியும் வடிவழகார்ந்த வண் தூப்புல் வள்ளலும் காட்சியளிக்கின்றனர். இந்த ப்ளாக்குகளை நமக்குத் தந்து உதவிய திருமலை திருப்பதி, தேவஸ்தான அச்சக நிர்வாஹிகளுக்கும், சென்னை, பக்தன் பத்திரிகையின் நிர்வாஹ ஆசிரியர், ஸ்ரீ. அழகியசிங்காசார்யருக்கும், திருவஹிந்த்ரபுரம், ஸ்ரீ D. தேவநாதஐயங்காருக்கும் எங்களது க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கிறோம்.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	266
2. யாதவாப்யுதயம்	270
3. ஸ்ரீ தேசிகனின் அரிய உபதேசங்கள்	273
4. ஓரொன்றுதானே	277
5. நன்றி மறவாதீர்	280
6. தமிழ் வளர்த்த இரண்டு ஆசார்யர்கள்	282
7. தேசிகோத்தமனும் தேவாதிராஜனுகந்த கைங்கர்யமும்	287
8. ஸ்தோத்ரரத்னமும் ஸ்ரீ தேசிகனும்	289
9. தசாவதாரஸ்தோத்ரம்	293
10. ஆதிதேசிகனும் ஆதிவண்சடகோபதேசிகனும்	296
11. ஸ்ரீ சடகோபமாமுனிவன் வாழித்திருநாமம்	299
12. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	303
13. செய்திகள்	305

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } மன்மத ஹூ ஐப்பசி மீ { ஸஞ்சிகை 10

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீநரஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா |
ஸ்ரீநரஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீநரஸிம்ஹப்ரியாஹ்யேஷா நரஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

இந்நாளில் மாயனைப்போற்றி உகப்பதே முக்தியளிக்கும் என முதியோர் கூறுவதை நாம் கேட்டும்கூட, நம்மில் எல்லோரும் நல்வழிக்கு முயற்சிக்கிறோமல்லோம். சிலர் முயற்சிக்கிறார்கள்என்றாலும், பலர் முயற்சிக்கவில்லை என்றே சொல்லவேண்டி வருகிறது. புறமும் அகமும், இவ்வுலகும், மறுஉலகும், [வெளித்தோற்றமும், உண்மையும், என, இம்மாதிரியான இரட்டைச் சொற்கள் நம்மிடையே உபயோகத்தில் இருப்பதை நாம் அறிவோம். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று கூறும்பொழுது நமது உட்கருத்து நமது முகபாவத்தினால் வெளியாகிறது எனப் புலப்படுகிறது. முகபாவம் வெளித்தோற்றமாகிலும் அதற்குக் காரணம் உட்கருத்தேயாகும். சுத்த மனதை உடையவன் நற்காரியங்களில் ஈடுபடுவான். அதனால் அவன் நல்லவனாக உலகத்தாரால் கருதப்படுவான்.

நமக்கு நன்மை இருவிதங்களில் ஏற்படுகின்றன. இவ்வுலகில் ஏற்படும் நன்மைகள் மறு உலகில் ஏற்படும் நன்மைகள். இவ்வுலகே நிலையற்றதென்று நாம் அறிகிறபடியால் இவ்வுலகசுகமும் நிலையற்றதுதான். நம்மில் ஒவ்வொருவரும் குறித்தகாலந்தாண்டி நீடித்திருப்பதில்லையானபடியால், நம்முடைய இவ்வுலகும் அப்படித்தானே இருக்கமுடியும். ஆனால் நம்மிலுள்ள ஆத்மா- ஓர் அபூர்வ சக்தி- அழியாமல் இருப்பதால் அதைக்கொண்டு அழியாத ஓர் உலகமும் இருக்கத்தான் வேண்டும். இதைத்தான் மறு உலகம் என்கிறோம். இவ்வுலகில் நாம் ஜனித்ததுமுதல் மரிக்கும்வரைவாழ்ந்துவருவதற்கு சில முக்ய ஸாதனங்கள் வேண்டியிருக்கின்றன. இதேபோல் நம்மில் எல்லோருக்கும் இருப்பதால், நமக்கும் பொதுவான சில வழிகளை வகுத்துக்கொடுப்பதற்கு சில அதிகாரிகள் இருக்கவேண்டியது அவசியம். மாறுபட்ட வ்யாபாரங்களோடு கூடிய இவ்வுலகில் பலவ்யாபாரங்களுக்கும், பலவகைப்பட்ட மனிதர்களுக்கும், ஒற்றுமை உண்டாக்கி, நல்வழியை வகுத்து, இன்பத்தை ஸம்பாதித்துக்கொடுப்பதற்காகவே, இறைவன் உண்டானான். ஜனங்களுக்கு தகப்பனாரைப்போல நன்மைகளையே அரசன் செய்துவருவான். 'ராஜா ஹிதகரோ ந்ருணாம்' [ஜனங்களுக்கு ஹிதத்தையேசெய்வான் அரசன்] என்றபடி ஹிதத்தைச் செய்வதற்காகவே அவன் உண்டானான். அவனுக்கு ஓர் அபூர்வசக்தியும் வேண்டும். இம்மாதிரியான சக்தியை அவன் பகவானிடம் பெறுகிறான். அல்லது அரசனிடம் பகவதம்சம் பூர்ணமாகக் குடிகொண்டிருக்கிறது. அப்பொழுதுதான் அவன் நன்மைகளைச் செய்யமுடியும். அப்படி விஷ்ணுவின் அம்சத்தோடு கூடிய அரசன் செய்யும் உபசாரம்கூட நிலைத்திருப்பதில்லை. ஏனெனில் உலகமே நிலையில்லாததாயிற்றே. அவன் தானும் அநித்யனாயிற்றே.

இவ்வுலகில் நமது ஸுகத்தைக்கொடுக்கஅரசன் உண்டானது போல், நமக்கு மறு உலகில் ஸுகத்தைக் கொடுக்கவே ஆசார்யர்கள் உண்டானார்கள். அரசன் நமக்குச் செய்யும் உதவி நிலையற்றது. ஆசார்யன் செய்யும் உதவி அழிவில்லாதது. நமது மனதில் ஜ்ஞானமாகிய விளக்கை ஏற்றிவைத்து அஜ்ஞானம் நம்மை அணுகாதபடி செய்து, முடிவில் நம்மை பேரின்பம் அடையச் செய்கிறார்கள் ஆசார்யர்கள். ஆகவே அரசர்களுக்கும் ஆசார்யர்களுக்கும், உள்ள வித்யாஸம், மினி

மினிப்பூச்சிக்கும் நெருப்புக்கும் உள்ள வித்யாஸமேயாகும்.

இவ்வுலக ஸுகத்தில் ஈடுபட்டிருப்பதால் அரசர்களிடத்தும் மறு உலகத்தில் நம்பிக்கையுள்ளவர்களானபடியால் ஆசார்யர்களிடத்தும் நாம் கடமைப்பட்டவர்கள். முன்னாட்களில் ஆசார்யர்கள் செய்ய வேண்டிய கார்யங்களை அரசர்கள் அநுகூலித்து பூர்த்தி செய்தார்கள். ஆசார்யர்களும் அரசனுக்கு உதவினார்கள். அரசனுடைய செங்கோலும் ஆசார்யனுடைய உபதேசமும் சேர்ந்து இவ்வுலகை நிலைநிறுத்துகிறது என்று பண்டைகாலத்து ஸ்ம்ருதிகள் கூறுகின்றன. ஆனால் நாட்கள் செல்லச்செல்ல இவ்விரண்டு ஸ்தானங்களுக்கும் இடையே வேற்றுமை உண்டாயிற்று. இந்நாளில் பரலோகவிஷயமாக உபதேசிக்கும் ஆசார்யரை ஒத்துக்கொள்ளக் கூடிய அளவில்கூட அரசாங்கம் இல்லையெனக்கூட கூறலாம். நமது அரசாங்கம் மத சார்பற்ற அரசாங்கமல்லவா?

ஆனால் பண்டைநாட்களில்கூட அறிவில் தேர்ந்த ஆசார்யோத்தமர்கள், அழியக்கூடிய செல்வத்தை உடைய அரசர்களைக் கண்டு நடுங்காத ஸம்பவங்கள் உண்டு. ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனின் 'வைராக்ய பஞ்சகமே' அதற்குத்தகுந்த சான்று. 'நிரீஹாணாமீச: த்ருணமிவ திரஸ்கார விஷய:' என்று விசாகதத்தன் கூறுவது போல் பற்றற்றவர்களுக்கு யாரிடமும் பயமில்லை. 'நாமார்க்கும் குடியல்லோம்' 'நமனையஞ்சோம்' என்று கூறிய பெரியோர்கள் இந்நாட்டில் வஸித்தார்கள். பகவத்பக்தர்கள் யமனைக்கண்டு அஞ்சாது அழிவில்லா மோக்ஷத்தை அடைந்திருக்கிறார்கள் என்பது நமது பெரியோர் மொழி.

இம்மாதிரியாகவே நமது நன்மைக்காகவே பாடுபட்டவர்கள் ஆழ்வார்கள். அதன் பின் நாதமுனிகள் முதற்கொண்டு பல ஆசார்ய சிரேஷ்டர்கள் தோன்றினார்கள்.

ஸ்ரிய: பதியான ஸர்வேச்வரனால் நிர்மாணிக்கப்பட்ட வேதத்தைத் தமிழ் செய்தவன் மாறன் எனப்பட்ட சடகோபன். இவரைத்தான் நம்மாழ்வார் எனக்கூறுகிறோம். இவர் போல் மற்றைய ஆழ்வார்களும் வேதத்தின் உட்கருத்துக்களை ஆய்ந்தெடுத்து செந்தமிழால் அருளினார்கள்.

ஆசார்யர்களில் நமது ஸித்தாந்தத்திற்கு புத்துயிர் அளித்து புதிதாக நாமகரணம் செய்து ['ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தம்' என்று] உலகில் உள்ளவர்களுக்கு உதவியவர் ஸ்ரீபாஷ்யகாரர் எனப் பெயர் பெற்ற ஸ்ரீராமாநுஜரேயாவர். இவர் தமிழ் ப்ரபந்தங்களுக்கு ஸாதித்திருக்கும் அர்த்தங்களை தம்முடைய சிஷ்யரைக்கொண்டு வ்யாக்யானம் பண்ணும்படி செய்வித்தார். ஆனால் இவரிடமிருந்து தமிழ் ப்ரபந்தமே நமக்குக் கிடைக்கவில்லை. இந்தக்குறையை நிவ்ருத்தி செய்தவர்தான் ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன்.

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் பல ஸம்ஸ்க்ருதசாஸ்த்ர, நாடககாவ்ய, ஸ்தோத்ரங்களையும் செய்ததோடு நிற்காமல், மணிப்ரவாளத்தில் ரஹஸ்யக்ரந்தங்களையும், தமிழ் ப்ரபந்தங்களையும் செய்தருளினார். இம்மாதிரியான கார்யங்களிலிருந்து இம்மஹானுக்கு உபயவேதாந்த ப்ரவர்த்தகர் என்ற பிருது ஏற்பட்டது. 'தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு' என்ற பெயரும் ஸ்ரீஸ்வாமிக்கு மிகவும் பொருத்தமானதேயாகும்.

ஸ்ரீவேதாந்ததேசிகன் என்ற நாமாவில்கூட இக்கருத்து இருப்பதாகவே கொள்ளலாம். தேசிகன்என்றசொல்லுக்கே வேதாந்தவாசிரியன்எனப்பெயர். அப்படியிருக்க 'வேதாந்த, என்ற சொல் ஏன் அதிகப்படியாகப் பொருத்தவேண்டும்? ஆகவே இச்சொல் 'வடமொழி வேதத்தைக்' காட்டவும் 'தேசிகன்' என்ற சொல் 'தென்மொழி வேதத்தோடு சேர்ந்த, வேதாந்தவாசிரியன் எனப்புகட்டவும் ஏற்பட்டது எனக் கொள்ளலாம்.

இம்மஹானுக்குப்பிறகு உலகிலுள்ளவர்களை உஜ்ஜீவிப்பதற்காகவே தோன்றியவர் 'ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்'. இம்மஹான் ஸ்ரீமாலோலனின் அவதாரமானதால் அக்காலத்திலும், அதுமுதற்கொண்டு இன்றும்கூட நம்மை ரக்ஷிப்பதற்காகவே பல ஆசார்யச்ரேஷ்டர்களுக்குக் காரணமானவர். இம்மஹானுடைய கடாக்ஷவிசேஷத்தினால் இந்த ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருக்கும் எல்லா ஸ்ரீஅழகியசிங்கர்களும் ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹவிசேஷத்தினால் லோக க்ஷேமத்திற்காகப் பாடுபட்டு வருகிறார்கள்.

இம்மஹானுடைய திருநாமமே இக்கருத்தை நமக்கு நன்கு புகட்டுகிறது. ஆசார்யர்கள் பகவதம்சத்தோடு கூடியவர்கள் என்பதை ஏற்கனவே கூறியிருக்கிறோம். இதை நமக்குப் புகட்டவே ‘ஸ்ரீமதாதி’ என்ற சொல்முதலில் இணைக்கப்பட்டிருக்கிறது. [ஆதி என்றசொல் ஸ்ரீ ஆதிநாதனைக் குறிக்கிறது,] நமது ஸித்தாந்தத்தில் பிராட்டிக்கு விசேஷமான ஸ்தானம் உண்டாகையினால் ‘ஸ்ரீமத்’ என்றும் முதலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நமக்கு ஆழ்வார் பாசுரங்களாகிற த்ராவிட வேதங்களும் பகவத்ப்ரோக்தமான வடமொழியில் உள்ள வேதங்களும் முக்கியமானவைகளல்லவா. ஆகவே செந்தமிழ்வேதத்தை நமக்குநினைவுபடுத்த ‘வண்சடகோப’ என்ற சொற்கள் அமைந்திருக்கின்றன. ஆழ்வார்களின் காலம் முன்பும் ஸ்ரீபாஷ்யகாரருடைய காலம் பின்புமாதலால் ஸ்ரீபாஷ்யகாரருடைய மற்றொரு திருநாமமாகிய ‘யதீந்த்ர’ என்ற சொல் அடுத்தபடியாகக் காணப்படுகிறது. ஸ்ரீமாலோலன் ஆழ்வார் ஆசார்யர்களின் அபராவதாரமாகிய இம்மஹான் லோகாசார்யனென நமக்குப்புகட்டவே இறுதியில் ‘மஹாதேசிகன்’ என்றுமுடிவடைகிறது. இம்மாதிரிஸகலவிதத்திலும் உயர்ந்த ஓர் ஆசார்யச்ரேஷ்டரின் க்ருபாவிசேஷத்தினால் ஏற்பட்ட ஸ்ரீஸந்நிதி பரம்பரை ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாகவே நமது ஸமூஹத்தினரின் ஆத்மோஜ்ஜீவனத்திற்காக உழைத்து வந்திருப்பதையும் இப்பொழுதுங்கூட அல்லும் பகலும் சிஷ்யர்களின் ஆந்மீக வளர்ச்சிக்காக பாடுபட்டுவருவதையும் நாம் அறிவோம். இம்மாதிரியான ஆசார்யச்ரேஷ்டர்களை நமக்கு உதவியருளிய மஹானாகிய‘ ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனையும் அவ்வழியில் முன்னவதரித்த வேதாந்தவாசிரியனையும் நாம் போற்றி உகப்பது முக்கியம் என்பதை நாம் நன்கு உணருகிறோம். அம்மஹான்கள் காட்டிய நல்வழிகளை நாம் பின்பற்றி முடிவிலா இன்பம் அடைவோம்.

* * * * *

ஸம்ஸ்க்ருதத்தின் பெருமை

‘ஸம்ஸ்க்ருதம் நாம தைவீ வாக்’ என்று ஆலங்காரிகன் ‘தண்டி’ கூறினான். இக்கருத்து ஆதிகவிவால்மீகியினிடமிருந்து கிடைத்தது தான். ஹநுமான்வாயிலாக இதை ஆதிகவி வெளியிட்டார். இப்படியாக பெருமை வாய்ந்தது இம்மொழி. உலகிலுள்ள பிற நாட்டினர்கள் கூட இம்மொழியின் பெருமையைக் கண்டுகளித்து, படித்தறிந்து, நற்பலன்களை அடைந்திருக்கிறார்கள். இப்பொழுதும் படித்து வருகிறார்கள். இதன் பெருமை இம்மொழியைக் கற்றவர்களுக்கேதான் தெரியும்.

மலடி ப்ரஸவ வேதனையை எப்படி அறிய முடியும். சில தினங்களுக்கு முன்பு நம் ராஜ்ய சட்டசபை அங்கத்தினர் ஒருவர் இம்மொழியைப்பற்றி பரிசீலனை செய்யும் ஓர் ஸந்தர்ப்பத்தில் ‚தேவதைகளின் மொழி நமக்கு அவசியமில்லை மனிதர்களுடைய மொழிதான் நமக்குத் தேவை’ எனக்கூறியதாக பத்ரிகைகளின் வாயிலாக நாம் படிக்க நேர்ந்தது. அந்தோ! பரிதாபம்! தைவத்தை நம்பாதவன் கூட தைவஸம்பந்தம் பெற்றதென்ற காரணத்தினால் நல்ல கார்யங்களை விட்டுவிடுவதற்கில்லை. பகவத்ஸ்ருஷ்டியில் ஏற்பட்டவை தான்யங்கள் பல வ்ருக்ஷங்கள் முதலியன. இக்காரணத்தினால் இந்த நண்பர்உண்பதில்லையா? உடுப்பதில்லையா? பகவத்ஸ்ருஷ்டியினால் ஏற்பட்டதென்ற உண்மையை இந்த நண்பர் ஒப்புக்கொள்ளாமலிருக்கலாம். போகட்டும். பின், எதனால் ஏற்பட்டதாம். இயற்கையின் சாதனை என்பார். நமக்கும் உகப்பே. இந்த இயற்கையைத்தான் பகவான் என நாம் கூறுகிறோம். அதேபோல் இயற்கையிலேயே நற்குணங்களோடு கூடியதும் (அதாவது நல்லஒலிகளோடு கூடியதும்) உயர்ந்த கருத்துக்களைக் கொண்ட மற்றைய மொழிகளில் காணப்படாத, மறைக்க முடியாத தத்துவங்களைக் கொண்டதுமாகிய வடமொழியை ஏன் இவர் வெறுக்கவேண்டும். செந்தமிழ் மொழிவல்லுணர்கள் தமிழ்மொழி தெய்வமொழி என்கிறார்களே. அகத்திய முனிவர் மூலமாகக்கிடைத்தது எனவும் கூறுகிறார்களே. அவைகளை இந்த வடமொழி வெறுப்பாளர் கேட்டதில்லையா? மொழியில் ஒரு வெறுப்பைக் காட்டுவது அறிஞரின் அடையாளமில்லையே!

ஸமீபத்தில் மத்திய அரசாங்கம் ஸம்ஸ்க்ருத ஆசிரியர்களையும், ஸம்ஸ்க்ருத அபிமானிகளையும் ஒன்று கூட்டி இம்மொழியின் அபிவ்ருத்தியைக் குறித்து ஆலோசனை செய்தார்கள். பிள்ளைகளின் படிப்பில் பல பருவங்களிலும் ஸம்ஸ்க்ருதமொழியை எப்படி போதிப்பது எவ்வளவு அளவு போதிப்பது, அதற்குத் தகுந்த ஆசிரியர்களுக்கும் பயிற்சியளிப்பது இம்மொழியில் ஆராய்ச்சிகள் நடத்துவது போன்ற விஷயங்களைக்குறித்து பல கருத்துக்களை ஆராய்ந்தார்கள். இவைகளைப்பரிசீலிக்கத் தனித்தனி கமிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சீக்கிரத்தில் வேண்டியமுறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவார்கள் என்றும் நம்புகிறோம். ஸம்ஸ்க்ருதத்தின் பெருமையை மேனாட்டவர்கள் அடிக்கடி புகழ்வதாலாவது, இம்மாதிரியான பற்று நம் நாட்டில் தத்காலம் இருந்துவருவதைக் குறித்து நாம் ஸந்தோஷப்பட வேண்டியிருக்கிறது. ஸம்ஸ்க்ருதத்தை உண்மையாக அபிமானித்து வளர்த்து வருவது நாமா, அன்னியநாட்டினர்களா?

நமக்கு இனியும் ஒரு சோதனை வரப்போகிறது. மத்திய அரசாங்கத்தில் ஸம்ஸ்க்ருதபோதனைக்கு வேண்டிய சட்டதிட்டங்கள் செய்யலாம். ஆனால் அவைகளின் முழுப்பலனை நாம் அடையவேண்டுமே? நமது ஸமூகத்தினர், தங்கள் பிள்ளைகள் ஸம்ஸ்க்ருதம் படிப்பதினால் கௌரவமற்ற நிலையை அடைகிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பது மாறவேணுமே. இது ஏற்படுவதற்கு ஸ்ரீ மாலோலன் நற்புத்தியை நமக்கெல்லோருக்கும் அநுக்ரஹித்தருளவேணும்.

நம்மில் சிலராவது உண்மையை அறிந்தவர்களில்லையா? அவர்கள் மூலமாகவாவது நற்கார்யங்கள் நடந்துதானே வருகின்றன. அதேபோல் ஸம்ஸ்க்ருதமொழியும் பரிபாலிக்கப்பட்டுவரும் என்பதில் ஸந்தேஹமில்லை. ஆனால் ஒரு சிலர்மாத்திரம் ஸந்தோஷப்பட்டால் போதுமா? 'ஏகஸ்வாது ந புஞ்ஜீத' ஒருவராக இனிமையான பண்டத்தை சாப்பிடக்கூடாது என்பது போல், உயர்ந்த தத்துவங்களை அறிவதற்காவது இம்மொழியை நம் ஸமூஹத்தினர் எல்லோரும் கற்று அதன் முழுப்பலனையும் அடைய வேண்டும் என்பதே நமது விருப்பம்.

ஓர் செய்தி

வழக்கம்போல் இவ்வருஷமும் ஆசார்ய ஸார்வபௌமனான ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் மூன்று நாள் முன்னதாகவே வேத, ப்ரந்த, பாராயணங்களுடன் துடங்கி புரட்டாசித் திருவோத்தன்று (27-9-55) சாற்றுமுறை அதிவிமர்சையாக நடத்தப்பட்டது.

இச்சபையின் ஆதரவில் நம் இராமாநுஜ ஸம்ப்ரதாயத்தைப்பற்றிய உபந்யாஸங்களைச் செய்யும்படி இவ்விடம் எழுந்தருளபண்ணப்பட்ட ஸ்ரீ.உப. வித்வான், மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்யர் ஸ்வாமி அன்று விசிஷ்டாத்வைதம், என்கிறவிஷயம் பற்றியும், அதற்கு முதலிரண்டு நாட்கள் 'ரஹஸ்ய த்ரயஸாரம்' 'தேசிகனும், தேசிகப்ரபந்தங்களும்' என்கிற விஷயங்களைப்பற்றியும் மிக்க தெளிவாக எல்லோரும் புரிந்து கொண்டு களிக்கும்படி ப்ரமாணோபபத்திபுரஸ்ஸரமாக உபந்யாஸம் செய்தருளினர். அவ்வமயம் டில்லியில்வஸித்து வரும் பல ஆஸ்திகர்கள் ஸந்நிஹிதர்களாயிருந்தனர். உபந்யாஸம் முடிந்ததும் ஆஸ்திகர்களெல்லோரும் க்ருதக்ருத்யர்களாக எண்ணிக்கொண்டு தங்கள் தங்கள் இல்லம் சென்றனர். ஸ்ரீஸ்வாமியைக்கொண்டு வேதாந்த விஷயமான உபந்யாஸங்கள் மேலும் நடத்தப்பட்டு வருகின்றன. ஸத்ஸம்ப்ரதாயாகதமான ஸமீசீன சாஸ்த்ரார்த்தங்களை எடுத்து உபந்யஸிக்கும் இப்படிப்பட்ட மஹான்கள் ஷ ஸபையின் பிரார்த்தனைக் கிணங்கி டில்லிக்கு எழுந்தருளுவதும் டில்லி ஆஸ்திகர்கள் செய்த ஜந்மாந்தர தவப்பயனேயாம்.

பே. வ. ரங்கஸ்வாமி
கமிட்டி மெம்பர்
வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா டில்லி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:|

யாதவாப்யுதயம்

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

अग्राम्यमेव परिहासरसं वितेने नाश्लीलमाह न मृषा न च मर्मभेदी।
धर्माविरुद्धविभवोचितकामकामः स्त्रीणां वरेण बुभुजे वरदो वरस्त्रीः ॥ (86)

सहजबलसमेतश्शक्रपूर्वैरजय्यस्समुदितविषमास्त्रस्तादृशानन्दहेतुः ।
अविदितरचनेन स्वेन पार्थाय गीतस्स्वयमजनि स कामः कोऽपि धर्मा विरुद्धः ॥ (94)

யாதவாப்யுதயம் கடைசி 24-வது ஸர்கத்தில் பாரதயுத்தம் முடிந்த பிறகு அசுரர்கள், அசுராம்சமான ராஜாக்கள் முதலிய ஸாதுஹிம்ஸகராயும் பாபச்சுமையால் மிகக் கனத்தவராயும், பூமிபாரமாயுமிருந்தவரை நீக்கி அவதாரகார்யான பூபாராபநயநத்தைச் செய்துவிட்டு உலகத்தோருக்கு 'க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்' என்றபடிக்கு ஸநாதந தர்மாநுஷ்டாநத்திற்கு ஈஷத்தேனும் விரோதமன்னியில் அதற்கு ஏற்றமுறையில் ச்ருங்காரரஸ பூர்த்தியோடு கார்ஹஸ்த்யதர்மத்தை அநுஷ்டித்துக் காட்டிய க்ரமத்தை விஸ்தாரமாய் வர்ணித்திருக்கிறது. 'பாரதயுத்தம்' முடிந்ததும் ஸகல பூபாரங்களை நிவ்ருத்திக்க வேண்டிய தம்முடைய பாரத்தை பூர்ணமாய் நிர்வஹித்துவிட்டு கவலையற்று பகவான் ச்ருங்கார ஸாம்ராஜ்யத்தை பத்நிகளோடுகூட அநுபவித்த தர்மரஸமுறைகளை இந்த ஸர்கத்தில் வர்ணிக்கிறார்' என்று ஸ்ரீதீக்ஷிதரின் இந்த ஸர்கத்திற்கு அவதாரிகை. கீதை 7-வது அத்யாயத்தில் 'பலம் பலவதாம் சாஹம் காமராகவிவர்ஜிதம்| தர்மாவிருத்தோ பூதேஷு காமோऽஸ்மி பரதர்ஷப||' என்று பாடிய ச்லோகத்தின் பின் பாதியிலுள்ள 'காம' சப்தத்திற்கு நாயக நாயகிகளுக்குள்ள காமபாவம் என்றும் பொருளை மேலே கண்ட 86-ம் ச்லோகத்திலும், காமதேவனாகிய மன்மதன் என்கிற புதிதான ஓர்பொருள் 94-ம் ச்லோகத்திலும் அழகாகக்காட்டும் ரஸம் அநுபவிக்கத் தக்கது. 'ஸாக்ஷாந் மந்மத மந்மத:' என்று கண்ணனுக்கு பசு, பக்ஷி, வ்ருக்ஷம், கோபிகைகள், பத்நிகள் நிஸ்ஸங்கரான யதிகள் முதலிய சேதந வர்கமெல்லாம் அநுபவிக்கும்படியான ப்ரஸித்தி ஸர்வலோகவிதிதம். இந்தஸர்கத்தின் 83-வது ச்லோகத்தில், 'அயுதஸங்க்யரான மன்மதர்கள் ஒன்றுகூடிச் சேர்ந்து ஒரு புருஷனானாலும் எவருடைய காந்தி பிந்து லேசத்துக்குக்கூட ஒப்பாக முடியாதோ அப்படிக்கொத்த 'யத் பதி'யை ஸேவித்துத் திகைத்த ஸம்யமிகளும் தம்மனத்தால் ஸ்த்ரீபாவத்தையே அடைந்தனர் என வர்ணிக்கப்பட்டது. 'ஏதே மஹ்யமபோட மந்மத சரோந்மாதாய' என்கிற ஸ்ரீஸ்வாமி ச்லோகத்தில் 'அபோடமந்மத' என்பதால் மன்மதனை ஜயித்த லாவண்ய ஜலதியான பகவானென்றும் அந்த மந்மதமந்மதனுடைய காமபாணங்கள், நம் நெஞ்சையபஹரித்துத் துளைக்கவேண்டும், அவனிடத்தில் நமக்குபக்திபாவம்என்னும்பருங்கார பூமாபெருகவேண்டியதை ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகள் நமக்கு அநுக்ரஹிக்க வேண்டுமென்ற பொருளும் ரஸமாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

'அக்ராம்யமேவ பரிஹாஸ ரஸம் விதேநே' பரிஹாஸரஸம் ஸ்த்ரீபுமாங்களுக்குள் இருப்பது தாம்பத்யரஸவர்த்தகமே. அது இல்லாமலிருந்தால் ரஸபூர்த்தி யில்லை. ஆனால் அப்பரிஹாஸம் கொஞ்சமேனும் க்ராம்யத்தை அணுகக்கூடாது. 'அக்ராம்ய ஹாஸ்ய கோவிதை:' என்று பட்டபாணர் ஹாஸ்யம் க்ராம்யமில்லாத அபிஜாதமும் அத்யந்த உசிதமுமான முறையில் இருக்கவேண்டியதை ஸூசித்தார். 'விதேநே' இந்த ரஸத்தை

ஏராளமாய் பரப்பினர். 'நாச்லீலம் ஆஹ' அமங்களமான ஒரு சொல்லைக்கூட அவர் விளையாட்டாகக்கூட உச்சரித்தாரில்லை. அச்லீலத்தை கீர்த்தனம் செய்யக்கூடா தென்பது வைதிக தர்ம நியமம். இந்த தர்மஸேதுவை தர்மஸேதுவான இவர்மீறவே இல்லை. 'ந ம்ருஷா(ஆஹ)' 'ஸத்யஸ்ய ஸத்யம்' என்பது இவருக்கு ஔபநிஷதமான திருநாமம். பரிஹாஸத்தில் ஸாமான்யமாக அஸத்ய ஜல்பிதங்கள் ஸம்பவிக்கலாம். இவர் ஸத்யஸ்வரூபத்திற்கு ஏற்றபடி பொய்யுரை என்பதே இவர் வாக்கை அணுகுவதில்லை. 'ந ச மர்ம பேதீ' நெஞ்சை புண்படுத்தும்படி ரஹஸ்ய மர்மங்கள், குலதூஷணம் முதலிய சொற்களை அடியோடு அகற்றினர். 'அநுத்வேககரம் வாக்யம்' என்று கீதையில் இவர் உலகத்திற்கு அறுதியிட்ட ஸாத்விக வாக்ய லக்ஷணத்தை இவர் மீறுவதேயில்லை. 'தர்மா விருத்த விபவோசித காமகாம:' 'கதாகதம் காமகாமா லபந்தே ஸ சாந்திமாப்நோதி ந காமகாமீ' என்று நிந்திக்கப்படும் 'காமகாமம்' தர்மவிருத்தகாமகாம விஷயம். தர்மாவிருத்மான 'காமகாமம்' அத்யந்தம் ச்லாகநீயமே. அது மோக்ஷமார்கத்திற்குப் ப்ரதிகூலமல்ல, மேலும் அநுகூலமேயாகும். மேலே குறித்த விபூதிச்லோகத்தில் அப்படிக்கொத்த காமமும் தம்முடைய விபூதியே என்றும், தாமே என்றும், தம்முடைய தேஜோம்ச ஸம்பவ மென்றும் பாடினர். தாம் பாடிய முறையை இங்கே அநுஷ்டித்துக் காட்டுகிறார். 'வர ஸ்த்ரீ:' பத்நிகளும் உத்தம ஸ்த்ரீகள். ஸநாதனதர்ம மூர்த்தியாகிய பதிக்கு ஏற்ற தர்மபத்நிகள். 'ஸ்த்ரீணாம் வரேண வரதோ புபுஜே' பகு வல்லபரான இந்த நாயகன், 'பரச்சந்தாநுவர்த்தித்வம்' என்கிற உத்தம லக்ஷணமான தாக்ஷிண்ய குண பரிபூர்ணர். இவர் ஆத்மாதியாயும் அவாப்தகாமராயு மிருந்தாலும் இவருக்கு ஆச்ரித ப்ரியஜனங்களின் காம மனோரதங்களை பூர்த்தி செய்வது நித்யம் காம்யம். அதிலும் ஸ்த்ரீகளென்றால் அவர்கள் அபலையான பேதைகளென்று அவர்களிடம் அநுகம்பாஸ்நேஹாதிகள் அதிகம். 'ஸ்த்ரீ ப்ரணஷ்டேதி காருண்யாத் ஆச்ரிதேத்யாந்ருசம்ஸ்யத:। பத்நீ நஷ்டேதி சோகேந ப்ரியேதி மதநேந ச॥' என்ற ச்லோக ந்யாயப்படி ஸ்த்ரீஸாமான்யமா யிருப்பதையிட்டே இவர்கள் ஆசைப்படுவதற்கு இணங்க கட்டுப்பட்டவர் என்பதை 'ஸ்த்ரீணாம்' என்பதால் ஸூசிக்கிறார். ஒருஸ்த்ரீ ப்ரார்த்திக்கிறாளே என்று தட்டமாட்டாத இணக்கம். அவர்கள் வாணத்திற்கு இணங்கியேயல்லாது ப்ரதம ப்ரவ்ருத்தி இவருடையதல்ல. இவர் ஸ்வயம் மந்மத பாரவச்யத்தையடைந்து இவருடைய நித்ய வசித்வ குணத்திற்கு விரோதமாய் நடக்கவில்லை என்ற ரஸத்தை ஸ்ரீ தீக்ஷிதர் உரைத்தார். இவர் ஆச்ரிதர் கோரும் வரங்களை பூர்ணமாய் நிறைவேற்றும் பிருதமுடையவரதரானதால் அவர்கள் கோறுதல்களை பூர்த்திசெய்ய அவர்களுடன் ச்ருங்கார ரஸத்தையநுபவித்தார். அவர்களை ரமிக்கச்செய்து அவர்களின் ரமணத்தால் தானும் ரமித்தார். 'ஆத்மா ராமோऽப்யரீரமத்' என்பதை நினைக்கவேணும். 'யஸ்யேந்த்ரியம் விமதிதும் குஹகைர் ந சேகு:' என்று சுகர் திரும்பத்திரும்ப பல்லாயிரக்கணக்கான தேவிமாரும் தங்கள் மோகமயக்குளினால் எவருடைய இந்த்ரியத்தை சிறிதேனும் கலுஷமாக்க சாத்யப்படவில்லையோ' என்று ஆச்சர்யத்துடன் பாடுகிறார். 'வர' சப்தத்தை மூன்று தரம் ஆவ்ருத்தி செய்வதால் இந்த ச்ருங்கார ரஸ அநுபவத்தில் எல்லாம் வரம்' அவரமென்பதே கிடையாது என்று அழகாக ஸூசனம்.

94-ம் ச்லோகம்

இந்த ச்லோகத்தில் மந்மதனுக்கும் பகவானுக்கும் பொருந்தும்படி ச்லேடையான விசேஷணங்களை அமைத்து பகவானையே ஓர் விலக்ஷணமந்மதனாக ரூபணம் செய்கிறார். கீதையில் பார்த்தனுக்கு பாடப்பட்ட தர்மத்திற்கு விருத்தமல்லாத காமனும் இவரே என்று கொள்ளுவதும் பொருந்தலாமோ என்றும் ஸூசிக்கிறார்.

'ஸஹஜபல ஸமேத:' மன்மதனுடையபலம் ஸ்வபாவத்தாலேயே நிரதிசயமானது. கண்ணன் 'பலர்' என்னும் ஸஹோதரரோடு கூடியவர். 'சக்ரபூர்வை ரஜய்ய:' இந்த்ரன் ஸகலதேவர்களுக்கு அதிபதியாயினும் காமதேவனை அவன் வெல்ல அசக்தன். காமனுக்கு அவன் தாஸனே. இந்த்ரியசப்தத்

திற்கு இந்த்ரனுக்கு துர்ஜயமானது என்ற பொருளை பாணினிஸூத்ரம் ரஸமாக ஸூசனம் செய்தது. இந்தக்ருஷ்ணமன்மதனை இந்த்ரன் தன் பரிவாரங்களுடன் கூடி எதிர்த்தாலும் ஜயிக்கமுடியாதவன். கோகுலவிஹாரங்களில் எல்லாவற்றிலும் பெரிதும் கடைசியுமான ராஸவிஹாரத்தில் லக்ஷக்கணக்கான கோபிகைகளோடு அவர்களுக்கு த்விகுணித ஸங்கயர்களான க்ருஷ்ணரூபங்களோடு இவர் விஹரித்த ச்ருங்கார ஸாம்ராஜ்யத்திலும் இவர் மனதில் காம பரவச காலுஷ்ய லேசமுமில்லாததால் கந்தர்பதேவனுடைய தர்பத்தை தாம் அடியோடு அடக்கினவர் என்பதை உலகத்திற்குக் காட்டினாரென்று ஸ்ரீதராதி வ்யாக்யாதாக்கள் காட்டியுள்ளார். முன்பு வத்ஸாபஹார கோவர்த்தனோத்தரணாதிகளில் ப்ரம்ஹேந்த்ராதிகளின் அபிமானம் சமனம் செய்யப்பட்டது. முடிவாக அத்யந்தம் அஜேயன் என்கிற மன்மதனுடைய கர்வத்தையுமிவர் அடக்கி மன்மதமன்மதன் என்கிற திருநாமத்தை அவ்விதத்திலும் நிலை நாட்டிக்கொண்டார். 'ஸமுதிதவிஷமாஸ்த்ரா:' ஐந்து என்கிற ஒத்தைப்பட்ட எண்ணிக்கையாக பஞ்ச பாணங்களோடு கூடியவன் மன்மதன். இவரும் பஞ்சாயுதர். 'தாத்ருசாநந்த ஹேது:' உலகத்தார் மிகப் பேணுவதும் ஜ்ஞானிகளுக்கு அவாச்யமென்று ஹேயமாயுமுள்ள ரதி எனும் ஆனந்தத்திற்கு ஹேதுவானவன் மன்மதன். இவர் 'யதோ வாச:' என்று வசனாதீதமாக வர்ணிக்கப்பட்ட ப்ரஹ்மாநந்தத்திற்கு ஹேதுவானவர் கண்ணன். 'தத்தேது வ்யபதேசாச்ச' என்ற ஸூத்ரத்தில் தத் என்று ரஸமாய் ப்ரயோகிக்கப்பட்டதை ரஸிக்கவேணும். 'அவிதித ரசநேந ஸ்வேந பார்த்தாய கீத:' ஏகாந்தமாய் மற்ற ஒருவரும் அறியாமல் பார்த்தனுக்கு மட்டும் தேர்த்தட்டில் பாடியது கீதை. 'அதிகுஹ்யத்வாத் இதர ஜநாவிஜ்ஞாதம் கீதாக்ரதநம் அஸ்ய-தேந ஸ்வேந, பார்த்தாய — 'தர்மாவிருத்தோ பூதேஷு காமோஸ்மி பரதர்ஷப!' இதி கீத:' என்று இதற்கு தீக்ஷிதரின் உரை. 'இதம் து தே குஹ்யதமம்' 'ரஹஸ்யம் ஹ்யேததுத்தமம்' என்று பல்கால் அதிரஹஸ்யம் என்று பாடும் ரஹஸ்யத்தை ரஹஸ்யமாகவே உபதேசம் செய்தார். 'ஷட்கர்ணோ பித்யதே மந்த்ரா: சதுஷ்கர்ணோ ந பித்யதே' தானும் கருணாவிஷ்டராய் தன்னை அறியாமலும் தம்முடைய நிச்வஸிதமான ச்ருதிபோலவே தம்முடைய தாமரைத் திருமுகத்திலிருந்து இன்ப பரவசகானமாய் உலகக்ஷேமத்திற்காக அதன்பாக்யத்தால் வெளிவந்தது என்ற கருத்தும் கவிஹ்ருதயத்தில் உளதாகவும் கொள்ளலாம். 'பார்த்தாய' என்பதால் 'பார்த்தோ வத்ஸ:' என்ற கன்றுக்கு ஸ்வயம் சுரந்த ஜ்ஞானம் பால் ஆகும் கீதா துக்தாஸி. அநுகீதையாரம்பத்தில் தன்னையுமறியாமல் ஓர் அத்யந்தாத்புதமாக அந்த சேனை மத்யத்தில் அந்த சமயத்தில் கீதை தம் வாக்கிலிருந்து வெளிவந்தது. அதைப்போல் அந்த அத்புதமுறையில் தான் திரும்பவும் ஓர் கீதை பாட முடியாது என்று பகவானே கூறியுள்ளதை நினைக்கவேணும். 'ஜகத்திதார்த்தாய ஜகௌ தயாவாந் அந்யைரவிஜ்ஞேய மநந்ய தர்மம்' என்று 23-ம் ஸர்க்கம் 27-ம் ச்லோகத்தில் வர்ணித்தபடி இந்த கீதையில் மோக்ஷ தர்மோபதேசம் செய்துள்ளது பகவானையும் அவர்ஹ்ருதயத்தை முற்றுமறிந்த அவருடைய குருபரம்பரையில் வந்த ஆசிரியர்களையும்தவிர மற்ற ஒருவராலும் பொருளறியக்கூடாதது. இப்படி அதிகம்பீரமான ஹ்ருதயமுள்ள கீதையின் இந்தவசனத்திற்கு தர்மவிரோதமில்லாத மன்மதன் நான் என்று பகவான் கருதிய ஓர் பொருளுமாகக் கொள்ளத்தடை என்ன? என்று இந்த மன்மதரூபணத்திற்கு கீதையையே ஓர் ப்ரமாணமாக ஸூசிக்கிறார் என்று தீக்ஷிதரின் ஹ்ருதயம். 'ஸ்வயமஜநி ஸ காம: கோபி தர்மாவிருத்த:' இப்படிக்கு ஓர் விலக்ஷணமான மன்மதனாவார் கண்ணன். லோகப்ரஸித்த மன்மதன் சாஸ்த்ரவிருத்தமான காமத்திற்கும் மூலமாவான். இந்த காமம் தர்மமா அதர்மமா என்று அவன் பார்க்கவே மாட்டான். 'கோபி' என்பதால் இவர் ஓர் அத்புதமான லோகப்ரஸித்த மன்மத விலக்ஷணமான தர்மே வடிவான காமத்தின் மூர்த்தியாயும் கோடி மன்மத லாவண்யமுடையவராயுமுள்ள ஸாக்ஷாத் மன்மத மன்மதனே.

விடலரிய பெரியபெருமாள்

திருவேங்கடமுடையான்

கரிகிரிமேல் நின்றனைத்தும் காக்கும் கண்ணன்

திரு எவ்வுள்கிடந்தான்





தேஹளீசன்

மன்னவர்க்குத் தேர்ப்பாகனாகிய பெருமான்



பூங் கோதை



அருள்தரும் ஆரண தேசிகன்

அயிந்தைமாநகரமர்ந்தான்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

ஸ்ரீ தேசிகனின் அரிய உபதேசங்கள்

[ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

நாம் செய்யவேண்டிய காரியத்தையும் செய்யத்தகாத காரியத்தையும் அறிவிப்பதில்முதல் ப்ரமாணமான வேதம் அரசன்போல் சப்தத்தையே ப்ரதானமாகக் கொண்டது. இதைச் செய்ய வேண்டும்; அதைச் செய்யக் கூடாது, என்றுவாங்மாத்திரத்தினால்கட்டளையிடுகிறான் அரசன். வேதமும் 'ஸத்யம்வத,(உண்மையைப் பேசு) 'தர்மம்சர, (தர்மத்தைச்செய்) என்கிற விதி வாக்யத்தாலும் 'நாந்ருதம்வதேத், (பொய்பேசாதே) 'ந பரதாராங்கச்சேத்' (அயல்ஸ்த்ரீயை ஆசைப் படாதே) என்கிற நிஷேதவாக்யத்தினாலும் மனிதர்களுக்கு அந்தந்த விஷயங்களில் ப்ரவ்ருத்தியையும் நிவ்ருத்தியையும் உண்டுபண்ணுகிறது. தன் கட்டளையை மீறினால் அரசன் தண்டிப்பது போல், வேதமும் தான் சொன்ன காரியத்தை மீறுகிறவர்களுக்குப் ப்ரத்யவாயத்தை (பாபத்தை) உண்டாக்குகிறது. இப்படி வேதம் அறிவித்த விஷயங்களைமீறினால் பாபமும் நரக வாஸமும் ஸம்பவிக்குமேயென்கிற பயத்தினால் அநுஷ்டிப்பவர்கள் சிலர். வேறு சிலர் "ப்ராயோ நேதிச்ருதி விஷயதா விச்வ மாதுர்ய ஹேது:" (வேதத்தில் தடுக்கப்பட்ட விஷயங்களே உலகத்தில் ஸ்வரஸமாகப் ப்ரவ்ருத்திப்பதற்குக் காரணமாகிறது) என்கிற ரீதியில், 'செய்யக் கூடாது' என்று சொன்னதைத் தவறாமல் செய்வதும் செய்ய வேண்டியதைத் தவிர்ப்பதுமான இயல்பு உள்ளவர்களாக இருக்கின்றனர்.

புராணங்களோ; இப்படி வேதம் போல் இதைச் செய், அதைச் செய்யாதே' என்று விதிநிஷேதங்களை ஸாக்ஷாத்தாகச்செய்து ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை உண்டுபண்ணுவதில்லை. அந்த விதிநிஷேதங்களை மறைத்து பூர்வ புருஷர்களுடைய சரிதங்களின், ஸ்துதிமூலமாயும் நிந்தை வாயிலாகவும், நல்ல காரியங்களில் ஆசையையும், கெட்ட காரியங்களில் த்வேஷத்தையும் உண்டு பண்ணி, மித்திரன் போல் அநுநயம் செய்து, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்குக் காரணமாயிருக்கின்றன. இவைகளால் ஏற்படும் உபதேசமும், மித்திரனின் முக தாக்ஷிண்யத்திற்காக அந்த ஸமயத்தில் இசைவது போல் ச்ரவண காலமாத்திரத்தில் மனதில் உணர்ச்சியை உண்டு பண்ணுகிறதேயொழிய பிறகு பெரும்பாலும் அநுஷ்டாந பர்யவஸாயியாக ஆகிறதில்லை.

காவ்யங்கள் செய்யும் உபதேசம் மூன்றாவது. ஸமர்த்தையான காந்தாமணி 'என்னுடைய இஷ்டத்தைச் செய், இஷ்டமில்லாததைச் செய்யாதே, என்று சொல்லாமலேயே கடாக்ஷ வீக்ஷண ஸரஸ ஸல்லாபாதிகளால் புருஷனை வசீகரித்து தன்னிஷ்டத்தை ஸம்பாதித்துக் கொள்கிறாள். அது போல் காவ்யங்களும் 'சப்தம், அர்த்தம், இவைகளைப் ப்ரதானமாகக் கொண்டு அரசனுக்கும் ஸுஹ்ருத்துக்கும் ஒப்பான வேத புராணங்களைக் காட்டிலும் விலக்ஷணமாய் கேட்கிறவர்களுடைய மனத்திற்கு ஆநந்தத்தைக் கொடுக்கக் கூடிய (சப்தார்த்தங்களை அப்ரதானமாகக் கொண்ட) வ்யஞ்ஜனை என்கிற வ்யாபாரத்தினாலேயே 'ராமனைப் போலிருக்க வேண்டும்' என்று செய்ய வேண்டிய காரியத்தில் ப்ரவ்ருத்தியையும் 'ராவணாதிகள் போலிருக்கக் கூடாது' என்று தகாத விஷயங்களிலிருந்து நிவ்ருத்தியையும் செய்கின்றன, என்று அலங்கார சாஸ்த்ர நிபுணர்கள் கூறுகிறார்கள். நம் ஸ்ரீதேசிகனும் அதே ரீதியில் ஸ்ரீக்ருஷ்ணாவதார சரித்ர வர்ணநத்தைத் திருவுள்ளம் கொண்டு 'யாதவாப்யுதய' மஹாகாவ்யத்தின் மூலமாய் நம் சித்தாந்தத்தின் சிறந்த அர்த்தங்களை சிறியோர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி அழகாக உபதேசிக்கிறார். அவைகளில் சிலவற்றை இங்கு விஜ்ஞாபிக்கிறேன்.

"பயோமுசா லேகவதாம் ஸ்தலாநாம் வீருத்ப்ரரோஹா விவிதா பபூவு: । ஸமீக்ஷி

தாநாம் மதுஸூதநேந ச்ரத்ததயாத்யா இவ ஸத்குணௌகா: ||''

[யாதவா 5- வது ஸர் 40- வது ச்லோ]

இதில் வர்ஷ ருதுவில் நன்றாக மழை பெய்து பூமி செழுமையாகி செடி கொடிகள் முளைத் திருப்பதை வர்ணிக்கிறார். பிறக்கும் தருணத் தில் மதுஸூதனனால் கடாக்ஷிக்கப் பெற்ற வர்களுக்கு எப்படி ஆஸ்திக்ய புத்தி, தயை, பொறுமை, பக்தி, வைராக்யம் முதலிய நல்ல குணங்கள் உண்டாகின்றனவோ அப்படியே மேகத்தினால் நனைக்கப்பட்ட ஸ்தலங்களில் நாநாவித செடி கொடிகள் உண்டாகின்றன, என்கிறார். 'ஜாயமாநந்து புருஷம் யம் பச் யேந் மதுஸூதந: | ஸாத்விக: ஸ து விஜ் ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:' என்கிற வசநம் இங்கு நினைக்கத் தக்கது. ப்ரஸித்தமாய் நிர்ணயிக்கப்பட்ட விஷயத்தை யே கவிகள் உபமானமாகக் கொள்வது இயல் பு. ஆகையால் இங்கு பகவத்கடாக்ஷத்தை ஜாயமான தசையில் பெற்றவர்களுக்கு ஸத்கு ண விசேஷாவிர்பாவம் நிச்சயம் என்றும் இப் படிப்பட்ட குணங்களை எல்லாரும் அடைந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்றும் திருவுள்ளம்.

'அலக்ஷ்ய தீவ்ராதபமந்தரிக்ஷம் விதாஸிதை ரம்புதரைஸ்சகாசே | விவேகமாஸாதயதாமி வாதௌ சித்தம் விதர்கைரநிவர்த்தமாநை: ||'
(யாதவா ஸ. 5. ச்லோ. 50)

இதில் சரத்ருதுவின் ஆரம்பத்தை வர்ணிக் கிறார். சரத்ருதுவில் ஆகாயத்தில் உக்ரமான வெயில் காணப்படவில்லை. வர்ஷாகாலத்தின் முடிவான படியால் மேகங்கள் கொஞ்சம் கருத் தும் கொஞ்சம் வெளுத்துமாகத் திகழ்கின்றன. இப்படிப்பட்ட ஆகாயத்தை முதல் முதலாக வேதாந்த ச்ரவணம் பண்ணி விவேகத்தை அடைந்து கொண்டிருக்கிறவர் களுடைய சித்தத்திற்கு ஒப்பாகக் கூறுகிறார். வேதாந்தார்த்தங்களின் சிந்தநத்தினால் சரீ ராத்ம விவேகம் பிறக்கிறது. வேதாந்தங்க ளில் வெகுகாலம் பரிசயம் செய்து நன்றாக வி வேகம் நிலைத்த பிறகு ஒரு வித ஸந்தேஹ மும் எழாதாகையால் புதிதாக சரீராத்ம விவேகத்தையடையும்போது வாஸனை வசத்தி னால் வெகு காலமாக ஊன்றிப்போயிருக்கிற சரீராத்ம ப்ரமம் அடியோடு நிவ்ருத்தி யடை யாமல் இப்படியும் அப்படியும் ஊசலாடிக் கொண்டிருப்பது போல் கறுத்ததும் வெளுத் ததுமானமேகங்களிருக்கின்றன'வென்று மந்த விவேகியின் நிலையை வெகு அழகாக விளக் குகிறார். இதனால் இந்த நிலையோடு நின்று விடாமல் முற்றின விவேகத்தை அடைவதற்கு யத்தனித்து அதை அடைய வேண்டும் என்று ஸ்ரீ ஸ்வாமியின் அபிஸந்தி.

''ஸப்ஸ்காரபேதை: கலமாதிகாநாம் க்ர மேண லப்த்வாபசய ஸ்திதீநாம் | ஸமுந்நதி: ஸந்நதி ஹேது ராஸீத் தர்மம் நிஜம் ஸாதயி தும் க்ஷமாணாம்||'' [5- 56 ச்லோகம்]

இதில் சரத் காலத்தில் பயிர்கள் நன்றாக வளர்ந்து கதிர் வாங்கும் நிலையை வர்ணிக் கிறார். உசிதமான காலத்தில், விதை விதைத் தல், நடவு போடுதல், களை எடுத்தல், எருவு போடுதல் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்து அதன் மூலமாய் நன்றாய் வளர்ந்து கதிர்களை உண்டு பண்ணும் தன்னுடைய தர்மத்தை (ஸ்வபாவத்தை) ஸாதிப்பதற்கு யோக்யமான பயிர்களின் வளர்ச்சி, கடைசியில் (கதிர் வந்த வுடன்) வளைவதற்குக் காரணமாக ஆயிற்று, என்று ஸாதிக்கிறார். இதனால் உசிதமான காலங்களில் சாஸ்த்ரோக்தங்களான ஜாதகர்ம, நாமகரண, அந்நப்ராசந, சௌள, உபநயநாதி ஸம்ஸ்காரங்களை அடைந்து அதனால் வைதிக லக்ஷணத்தின் வளர்ச்சியைப் பெற்று இருப்ப வர்கள், வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டிப்பதற் குத் தகுந்தவர்களாக ஆகிறார்கள், என்றும் இப்படிப் பட்டவர்களுக்கு ஜ்ஞாநாநுஷ்டாநங் களால் ஏற்பட்ட ஒரு உயர்த்தி, விநயத்திற்குக் காரணமாயிருக்குமென்றும் அறிவிக்கிறார்.

''அதியஜேத நிஜாம் யதி தேவதாமுபயத ஶ்ச்யவதே ஜுஷதேப்யகம் | க்ஷிதிப்ருதேவ ஸதைவதகா வயம் வநவதாऽவதா கிமஹி த்ருஹா ||''

(யாதவா- ஸ. 6. ச்லோ 4.)

இதில் இந்திர பூஜையைச் செய்ய ஆரம்பித்த நந்தகோபர் முதலிய கோபாலர்க ளைக் குறித்து ஸ்ரீ க்ருஷ்ணன் 'இந்த்ரனைப் பூ ஜிக்க வேண்டாம், இந்த கோவர்த்தந கிரியைப் பூஜியுங்கள், என்று அருளிச் செய்ததை இந்த ச்லோகத்தால் உபபாதிக்கிறார். தன் குல தேவதையை விட்டு வேறு ஒரு தேவதையை பூஜிப்பவன் உபய ப்ரஷ்டனாகி ஆவதோடல் லாமல் பாபிஷ்டனாகவும் ஆகிறான். தன் தை வம் தன் பூஜையை நிறுத்தி விட்டதா லிவனை

17756

ரக்ஷிக்காமல் கை விடுகிறது. இப்போது இவனால் பூஜிக்க ஆரம்பிக்கப்பட்ட தேவதை யும் 'இவன் தன் குல க்ரமமாக வந்த தேவ தைக்கு த்ரோஹம் செய்தவன் என்றும், அதேமாதிரி நம்மையும் ஒரு காலத்தில் கைவி டக்கூடும்' என்றும் எண்ணி இவனை ரக்ஷிக்கா மல் உபேக்ஷித்து விடுகிறது. மேலும் தன் குலதேவதையின் பூஜையைவிட்டதினால் பாப மும் வந்து சேர்கிறது. ஆகையால், இந்த கோவர்த்தந பர்வதம் பசுக்களுக்கு வேண்டிய புல் பூண்டுகளடர்ந்த காடுகளாலும், (மலை) யருவிகளின் தண்ணீரினாலும் பசுக்களைக் காப் பாற்றி ஸம்ருத்தியை உண்டு பண்ணுவதால் இதுவே நமது குல தைவம். இதை விட்டு நம்மைக் காப்பாற்றாத (காப்பாற்ற முடியாத) இந்திரனைப் பூஜிப்பதால் நமக்கு ஒன்றும் பல னில்லை' என்று "யோ வைஸ்வாம் தேவதா மதி யஜதே ப்ரஸ்வாயை தேவதாயை ச்யவதே ந பராம் ப்ராப்னோதி பாபீயாந் பவதி" என்கிற ச்ருதியின் அர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றி அதே பதங்களை அழகா கப் ப்ரயோகித்து "தேவதாந்தர பூஜை கூடாது" என்கிற அர்த்தத்தை உபதேசிக் கும் பாணி, யாருடைய மனத்தைத் தான் கவராமலிருக்கும்.

"அதிரோதி ரஸௌ நிதி: ச்ருதேரநிமேஷ வ்ரததேசிநீ த்ருசோ: । ததுதே தநு ரீசதா- வகீ ஸ்மரணம் விஸ்மரணம் ச துஸ்ஸகம் ॥"

[9-வது ஸர்கம் 62-வது ச்லோகம்]

ஸ்ரீக்ருஷ்ணனை மதுரைக்கு எழுந்தரு ளப் பண்ணுவதற்காக வந்த அக்ரூரர் ஸ்ரீக்ரு ஷ்ணனை ஸ்தோத்ரம் செய்வதை அருளிச் செய்கிறார்- ஹே ஸர்வேச்வர! ஸாக்ஷாத்தாக் ஸேவிக்கப்பட்ட உம்முடைய திருமேனியை ஸ்மரிப்பதும் கஷ்டம் மறப்பதும் கஷ்டம். நேராக ஸேவிக்கப்பட்டிருந்த போதிலும், வேதத்தினால் நிதி (புதையல்) போல் மறைத் துப் ப்ரதிபாதிக்கப்படுகிறபடியால் அள விட முடியாததாயிருக்கிறது. ஆகையால் அதை ஸ்மரிப்பது கடினம். திருமேனியைப் ப்ரத்யக்ஷீகரித்தவர்களுக்குமறப்பதும் மிகவும் கஷ்டம். ரூபத்தின் உத்கர்ஷத்தினால் வைத்த கண்வாங்க முடியாமல் தன்னிடத்திலேயே ஈடு படுத்தி வைக்கும் ஸ்வபாவமுள்ளதாயிருக்கிற படியால் மறப்பதும் கஷ்டம் என்கிறார். இத னால் இந்த திருமேனியின் ரூப வைலக்ஷண்யத் தை "ஹிரண்ய ஸ்மச்ரு: ஹிரண்ய கேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண:' இத்யாதி களான ச்ருதிகளைக் கொண்டு நன்கறிந்து அதை த்யானித்து ஸாக்ஷாத்கரிக்கும் நிலையை ஆழ்வார்கள் போல் அடைந்து அநவரதம் மறக்காமலிருக்க வேண்டும், என்ற திருவுள் ளம் விசதமாகிறது.

"சதகோடிஸஹஸ்ரஸாரவாந் மதநம் ப்ராப் ஸ்யதி மாதுலஸ் த்வயா । வ்யஸநம் விபதப்ய- நேஹஸா விநிபாதஸ்ச நகஸ்ய கர்மண: ॥"

(யாத- ஸர். 9. ச்லோ. 74.)

கர்மவச்யனா யிருப்பவனுக்குத் தகாத விஷயத்தில் முயற்சி செய்வது கால க்ரமத்தில் ஆபத்தையும் மரணத்தையும் விளைவிக்கும் என்கிறார்.

அக்ரூரர் வசநம்_ க்ருஷ்ண! ஆயிரம் வஜ்ரா யுதங்களின் பலம் பொருந்தியவனும் உனக்கு மாதுலனு (அம்மானு) மான கம்ஸன் சீக்கி ரத்தில் உன்னால் நாச மடையப் போகிறான். இவ்வளவு பலசாலிக்கு நாசம் எப்படி ஸம்ப விக்கும்? அதுவும் மாதுலனை நாசம் செய்வது எப்படி யுக்தமாகும்? என்றால், அடாத காரி யத்தில் வீண் முயற்சி செய்பவன் எவ்வளவு தான் பலவானாயிருந்தபோதிலும் கர்மகதி யினால் காலக்ரமத்தில் பாபகர்மத்தின் பல னாக ஆபத்தையும் பிறகு மரணத்தையும் அடைவது இயல்பு. கம்ஸனோ உனக்கு பதே பதே த்ரோஹத்தைச் செய்து வருகி றான். அதன் மூலமாக கர்ம பரிபாக தசை யில் மரணத்தை அடைவது நிச்சயம், என்கிறார்.

'சிரஸங்கடிதோऽபி ந: க்ஷணாத் அநுரா- கோ பலபத்ரக்ருஷ்ணயோ: ॥ அபயாத மஹா நதீத்வயோ பவிதா சோண இவைஷ நிஷ்பல: ॥"

[9-வது ஸர்க்கம் 85- ச்லோகம்]

இதில் ஸ்ரீக்ருஷ்ணனும் பலராமனும் மது ரைக்குப் போகும் போது கோபிகளின் வார்த்தையை யருளிச் செய்கிறார். ஸ்ரீக்ருஷ்

ணனிடமும் பல்ராமனிடமும் நம்முடைய அநுராகம் வெகு காலமாய் ஸம்பாதிக்கப் பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட க்ருஷ்ணனும் பலராமனும் இப்போது மதுரைக்குச் செல்கின்றனர். மதுரைமா நகரில் சிறந்த எழிலையுடைய ஸ்த்ரீகளின் தரிசனத்தினால் நம்மை அநாதரிப்பது நிச்சயமாகையால் இத்தனை நாளாய் சேர்த்து வைத்த நம் அநுராகம் முற்றும் வீணாகப் போகிறது. கங்கை யமுனை என்ற மஹா நதிகளை விட்டு விலகின 'சோணம்' என்கிற நதத்தின் ஜலம் எப்படி வீணோ அதே மாதிரி அநுராகமும் வீண் என்று அருளிச் செய்கிறார். இதனால் "கங்காதோ நிஸ்ருதம் தோயம் புநர் கங்காம் ந யாதி சேத்| அபேயம் தத் விஜாநீயாத் பீத்வா சாந்த்ராயணம் சரேத்||" (கங்கையிலிருந்து வெளிக்கிளம்பின ஜலம் மறுபடியும் கங்கையை யடையாமல் போனால் பானம் பண்ணத் தகாதது. பானம் பண்ணினால் சாந்த்ராயணம் என்கிற வ்ரதத்தை ப்ராயச்சித்தமாக அநுஷ்டிக்கவேண்டும்) என்கிற தர்ம சாஸ்த்ரார்த்தத்தை இங்குப் ப்ரகாசிப்பிக்கிறார்.

"விஜஹாதி ஸ ஏஷ கோகுலம்மதுரா மாத்ரியதே மநோரமாம்| பவிதவ்யதயா சுபா சுபே தநிஹவம் பரிவர்த்திதாஸ்பதே||" இத்தனை காலம் நம்மிடம் ஆசைவைத்திருந்த ஸ்ரீக்ருஷ்ணன் கோகுலத்தை விடுகிறான், அழகான மதுரையை இப்பொழுது ஆதரிக்கிறான். இனி கோகுலத்தைத் திரும்பிக்கூட பார்க்கமாட்டான். ஆகையினால் கோகுலத்திற்கு இத்தனைநாளாக இருந்த ஸ்ரீ க்ருஷ்ணனின் ஆதரவால் உண்டான சுபம் தெய்வவசத்தினால் மதுரைக்கும், மதுரைக்கு இத்தனை நாளாக ஸ்ரீ க்ருஷ்ணனில்லாமையினால் உண்டான அசுபம் கோகுலத்திற்கும் மாற்றப்படுகிறது என்கிறார். இதனால் சுபாசுபங்கள் தெய்வவசத்தினால் மாறிக்கொண்டேயிருக்குமென்கிற அர்த்தத்தை வெளியிடுகிறார். "தேஜோ த்வயஸ்ய யுகபத் வ்யஸநோ தயாப்யாம் லோகோநியம்யத இவாத்ம தசாந்தரேஷு" என்கிறகாளிதாஸனின் வாக்யத்தை இங்கு நினைவூட்டுகிறார்.

ஸஞ்சிதஸ்ய தநௌகஸ்ய ஸ்தாந ஸஞ்சாரணேந ஸ:| தடாகஸ்யேவ பூர்ணஸ்ய பரீவாஹமகல்பயத்||" இதில் உக்ரஸேன மஹாராஜனுடைய ராஜ்ய பார ரீதியை வர்ணிக்கிறார். ஏரியில் நிறைந்துள்ள ஜலத்தை மதகுகளின் மூலமாயும் கலங்கலின் மூலமாயும் அடுத்த ஏரிகளுக்கும், வீட்டு வயல்களுக்கும் பாய்ச்சுவதனால் ஏரிக்கு ரக்ஷணமும் ஜலத்திற்கு பலனும் எப்படி ஏற்படுகிறதோ அப்படியே, தான் சேர்த்து வைத்த தனத்திற்கு தகுந்த பாத்திரங்களில் (ஜ்ஞாநா நுஷ்டானங்கள் நிறைந்தவர்களிடத்தில்) தானம் செய்வதால் திருடர்களினால் ஆபத்து வாராமல் பாதுகாத்தும் நல்ல உபயோகத்தையும் உக்ரஸேன மஹாராஜன் செய்தான் என்று அருளிச் செய்கிறார். இதனால் தனம் ஸம்பாதித்து வைத்திருப்பவர்கள் தகுந்தவர்களுக்கு தானம் செய்து தனத்துக்கு ரக்ஷணத்தையும் ஸாபல்யத்தையும் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும், என்றும் உபதேசிக்கப் பட்டதாகிறது.

இப்படி ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிக னுபதேசித்த அரிய அர்த்தங்களை அநவரதம் மனதில் சிந்தித்து அதன்படி நடக்க முயல்வோமாக.

ஜாயமானதசையில் பகவத்கடாக்ஷம் பெற்றவர் சிறந்த ஸத்குணங்களைப் பெற்று மோக்ஷாந்தமான ஐச்வர்யத்திற்கு அர்ஹராகிறார் என்பது முதலிய மேற் கூறியவைகளுக்கு முக்யோதாஹரணமாக விளங்குபவர் நம் அபரதேசிகனான ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகன். இவருடைய எண்ணிக்கையற்ற ஸத்குணங்களில் முக்யமாகக் குறிப்பிடவேண்டிய குணம் வைராக்யம். இந்த ஸ்வாமியோ இருபது வயதிலேயே ப்ரம்ஹசர்யாச்ரமத்திலிருந்தே விரக்தசிகாமணியாய் ஸ்ரீந்ருஸிம்ஹனின் விசேஷ கடாக்ஷத்தினால் துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்து ஸம்ஸார தாபத்ரய பீதர்களுக்கு தஞ்சமாக விளங்கினார். "சரணம் பவ பீதாநாம்" என்கிற விசேஷணம் இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட ஆசார்ய ரத்னங்களைப் பெற்ற நாம் 'நமக்கார் நாநிலத்தே' என்று ஸாத்விகாஹங்காரங் கொண்டு அவர்களின் திருநாமங்களை ஸர்வதா அநுஸந்திப்போம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:।

ஓரொன்றுதானே (6)

[ஸ்ரீ. உப. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, B.A.,B.L., அட்வோகேட், சென்னை.]

"அபிமுகபாவஸம்பதபிஸம்பவிநாம் பவிநாம்
க்வசிதுபலக்ஷிதா க்வசிதபங்குராகூட கதி:।
விமலரஸாவஹா வ்ருஷகிரீச தயே பவதீ
ஸபதி ஸரஸ்வதீவ சமத்யகமப்ரதிகம் ॥"

[தயாசதகம்- 52.]

'ப்ரபதநஸுலப:' என்ற எம்பெருமானுடைய குணமானது திருவாய்மொழியில் 6-ம் பத்தில் நம்மாழ்வாரால் அநுபவிக்கப்படுகிறது என்பது ஸ்வாமி தேசிகனது திருவுள்ளம். திருவாய்மொழியின் பத்துப் பத்துக்களிலும் அநுபவிக்கப்படும் குணவிசேஷங்களை தயா சதகத்தின் பத்து தசகங்களிலேயும் அடைவே அமைத்து தயாவிஷயமாக அவைகளை அந்வயித்து வெகு அத்புதமாக இந்த தயாசதகத்தைப் பாடியருளினர் ஸ்வாமி தேசிகன். அந்தக்ரமத்தில் தயாசதகத்தில் ஆறுவது தசகத்தின் இரண்டாவது ச்லோகமாக இந்த ச்லோகம்ப்ரகாசிக்கிறது. இத்தசகத்தின்முதல் ச்லோகம் 'அதிக்ருபணோபி' என்று ஆரம்பிப்பதை கவனிக்கவேண்டும். அத்யந்தாகிஞ்சநர்களுக்கே ப்ரபத்திக்கு அதிகாரமுண்டாகையால் ப்ரபத்திபரமான இந்த தசகம் அதிமாத்திரம் அகிஞ்சநர்களைச்சொல்லியே ஆரம்பிக்கிறது. இதெல்லாம் தேசிக சித்திரங்களின் வைசித்ரியம். எழுத்தெண்ணிப் படித்தின்புறவேண்டிய விஷயம். இரண்டாவது ச்லோகம் ஆபிமுக்யத்திலாரம்பிக்கிறது. இதுவும் சரணாகதிசாஸ்த்ரநுட்பங்களை வெளியிடுவதற்காகஸ்வாமியால் ப்ரயோகிக்கப்பட்டுள்ளது. அபிமுகபாவம் அதாவது- ஆபிமுக்யம்- அதாகிற ஸம்பத்து, அந்த ஸம்பத்தைக் கைப்பற்றினமை 'அபிமுகபாவஸம்பதபிஸம்பவம்' அப்படிப்பட்ட பாக்யத்தைக் கைப்பற்றினவர்கள் விஷயத்தில் தயாதேவி செய்தருளும் அநுக்ரஹம் ச்லோகத்தில் பேசப்படுகிறது.

இந்த ச்லோகத்தின் திரண்ட பொருள் வருமாறு:-- வ்ருஷகிரீசனது தயையே! உன்னை அணுகி ஆச்ரயிக்கும் ஸம்ஸாரிகள்விஷயத்தில் நீ ஸரஸ்வதி (என்றுபெயருள்ள நதி) யைப் போலே, சிலவிடங்களில் வெளிப்படையாய்த் தெரிந்தும், சிலவிடங்களில் மறைவாய்க் காரியம் செய்தும், எப்பொழுதும் கலக்கமில்லாத தெளிந்த நன்னீரைப் பெருக்கிக்கொண்டே அவர்களுடைய தீராத வினையனைத்தையும் தீர்த்துவைக்கிறாய்.' 'ஸரஸ்வதீவ' என்ற பத ப்ரயோகத்தால் ஸரஸ்வதீ நதிக்கும் தயைக்கும் ஒரு உபமான உபமேய மேற்படுத்தி இருவருக்கும் பொருந்தும்படியான சொற்களைக் கொண்டு விஷயத்தை விளங்கவைக்கிறார் என்பது தெரிகிறது. கங்கை யமுனை என்கிற ப்ரஸித்த நதிகளுடன் த்ரிவேணீ ஸங்கமாகக் கலக்கும் நதிக்கு ஸரஸ்வதியெனப் பெயரென்றும், அது ஒரு அந்தர்வாஹிநீ (பூமிக்குள்ளே ஓடும் நதி) யென்றும் புராணங்களால் தெரிகிறது. [இந்த சதகத்தில் இம் மூன்று நதிகளையும் ப்ரஸ்தாபித்து மூன்று நதிகளுக்கும் தயாதேவிக்கும் ஒற்றுமை கற்பிக்கிறார். 55-வது ச்லோகம் கங்கையையும் 54-வது யமுனையையும் குறித்துப் பாடப்பெற்றுள்ளது. மேலெழுந்தபடி பார்த்தால் 54-வது ச்லோகமும் கங்கையைச் சொல்லுவதுபோல் தோன்றும். ஆனால் அது யமுனா நதி விஷயம். சப்தங்களை ஊன்றிப்பார்த்தால் விளங்கும்.] அந்த ஸரஸ்வதிநதியோடு தயையை ஒப்பிடுகிறார் இந்த 52-வது ச்லோகத்தில். சிலவிடங்களில் சில

ஸமயங்களில் அந்நதியின் ப்ரவாஹம் கண்ணுக்குத் தெரியும்; மற்றவிடங்களிலும் மற்ற ஸமயங்களிலும் கண்ணுக்குத் தெரியாவிடினும் எப்போதும் தடையில்லாத பெருக்கையுடையதாகவேயிருக்கும். கலக்கம், சேறு இவை போன்ற தோஷமற்ற ரஸத்தை (நீரை) எப்போதும் உடையது. அந்நதியை மனதால் ஸ்மரித்து அதில் நீராடவேண்டும் என்கிற மனோபாவத்தை யடைந்தவரது கொடிய பாபங்களைப் போக்குவிக்கும் மிகுந்த மஹிமையுடையது. இவையனைத்தும் ஸரஸ்வதி நதி விஷயம்.

தயாதேவியும் அவ்வாறே அவள்விஷயத்தில் ஆபிமுக்யத்தை வஹிக்கும் ஸம்ஸாரிகள் திறத்து (க்வசிதுபலக்ஷிதா) சிலகாலங்களில் வெளிப்படையாயும், (க்வசிதபங்குரகூடகதி:) சிலஸமயம் இது தயாகார்யம் என்று பிறர் அறியமாட்டாதநிலையில் காரியம் செய்தும், (விமல ரஸாவஹா) எக்காலத்திலும் சிறிதும் தோஷமற்ற நிலையைப் பெருக்கிக்கொண்டு, மற்ற உபாயங்களால் (பக்தியோகாதிகளால்) (அப்ரதிகம் அகம்) போக்கமுடியாத கொடிய வல்வினைகளையெல்லாம், (சமயதி) சமனம் செய்துவைக்கிறாள். க்வசிதுபலக்ஷிதா; பார்க்கப்பட்டநிலையில் தயாதேவி காரியம் செய்வதை 'நிஷாதாநாம் நேதா' என்ற 65.ம் ச்லோகத்திலும், 'க்வசிதபங்குரகூடகதி:' என்பதை அதற்கு முன் ச்லோகமான (64-வது) 'அபாம் பத்யு: சத்ருந்' என்ற ச்லோகத்திலும் ஸ்வாமியே அமைத்துவைத்துப் பாடுகிறார் பின்னால். ரக்ஷணந்தான் தயாகார்யம்; சிக்ஷணம் தயாகார்யமன்று என்பார் சிலர் மந்தமதிகளுண்டு. அவர்களைத் திருத்திவைக்கிறார் 64ம் ச்லோகத்தில். சிக்ஷையென்ற தண்டனைகூடதயை அதில் ஸம்பந்தப்பட்டால் ரக்ஷணமாகவே முடிந்துவிடும். தண்டனகதியை ஸுகதியாக மாற்றிவைக்கும் வல்லமை தயைக்குண்டு. அப்போது தண்டனை என்றபெயரால் அந்த ரக்ஷணம் மறைக்கப்பட்டுப் போகிறது. அது தான் தயாதேவியின் (கூடகதி:) மறைவான போக்கு. ஆனால் அதுவும் (அபங்குரகதியே) தடையற்ற போக்கே. குகப்பெருமாள், மஹாராஜர், ஒப்பற்ற சபரி, குசேலர், அங்ச (சந்தனம் கொடுத்த) கூனி, கோகுல யுவதிகள் இவர்கள்விஷயத்தில் எல்லோராலும் எளிதில் அறியப்பட்ட தயாப்ரவாஹம்: ஸமுத்ரராஜன், பரசுராமர், காகாஸுரன், இவர்கள் விஷயத்தில் தண்டனை என்ற திரைக்குள் மறைந்திருந்து வேலைசெய்திருக்கிறது. அதைக்கொண்டு 'கூடகதி:' என்று அனுபவிக்கிறார். இதுவும் ஒரு அந்தர்வாஹிநியேயன்றோ!

இந்தச்லோகத்தில் வெகு அழகான ரஸமொன்றைக் கண்டு அடியோங்களுக்கு அதை அறியச்சொன்னார், சென்ற விஜயவாண்டில் நாமிழந்த தேசிகதர்சந ரத்நதீபம் ஸ்வாமி. 1946-ம் வருஷம் டிஸம்பர்மாதத்தில் (விய வாண்டு மார்கழியில்) அந்த மஹாபுருஷனோடு ஸ்ரீ. உப. புதுக்கோட்டை ஸ்ரீநிவாஸராகவாசார்யஸ்வாமியும், அடியேனும், இன்னும்சிலரும் திருவேங்கடயாத்ரையாகச் சென்றோம். திருப்பதியில் தேவஸ்தான ஸத்திரத்தின் மாடியில் திருமலையின் தாழ்வரைகளை ஸேவித்துக்கொண்டே தயாசதகத்துச்குப் பொருள் பார்த்துக்கொண்டிருந்தோம் அனைவருமாக. இந்த ச்லோகம் வந்தவாறே இதற்கு ப்ராசீன வ்யாக்யானங்களையெல்லாம் ஸேவித்துப் பொருளை ஒருவாறாக உணர்ந்த பிறகு, மந்தஹாஸத்துடன் அடியோங்களை நோக்கி ச்லோகத்தில் என்னரஸம் புலனாகிறது என்று கேட்டார். ஸரஸ்வதிக்கும் தயைக்கும் உபமானம் அழகாக அமைந்திருக்கிறதுதான் தெரிகிறது என்றோம். அதுதான் தெரிகிறதே. எந்த ஸரஸ்வதி? தேசிகன் தம் திருவாக்கால் பாராட்டும் ஸரஸ்வதி யெதுவாகவிருக்கும்? என்றார். உடனே 'யதீச்வரஸரஸ்வதியா' என்று கேட்டோம். ஆம்; அந்த ஸரஸ்வதிக்கும் தயைக்குந்தான் இந்த ச்லோகத்தில் உபமான அலங்காரம் அனுபவிக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டு திருக்கண்களில் நீர் துளிக்க 'விமலரஸாவஹா' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீஸூக்திகளைத் தவிர நம் தேசிகர்பெருமான் வேறு எதை அனுபவித்துப் பேசுவர் என்று கேட்டருளினர். அப்படியே நாங்கள் ப்ரமித்துப் போய்விட்டோம். ஸ்ரீ தேசிகன் திருவாக்கிலிருந் தவதரிக்கும் ச்லோகங்களுக்கு தேசிகன் திருவுள்ளத்தைக்கொண்டு பொருள் கூறுவது தானே ஸரியான முறை. உடனே கடல்மடை திறந்ததுபோல் அடியோங்களது உள்ளங்களில்

இன்ப உணர்ச்சி பொங்கவும் ச்லோகத்தில் வரும் ஒவ்வொரு சப்தத்தையும் ஸ்ரீ பாஷ்ய காரரது ஸ்ரீஸூக்திகளுக்குச் சேர அமைத்துப் பொருள் பார்த்தோம். பொருத்தம் மிகமிக அழகியதாயிருந்தது. அதுவும் யதிராஜசப்ததி ச்லோகங்கள் சிலவற்ரேடு ஒத்துப் பார்க்கும்போது இது இப்படித்தான் என்று நிர்ணயம் சொல்லாம்படி யிருந்தது.

1. க்வசிதுபலக்ஷிதா, க்வசித் கூடகதி:— லக்ஷ்யாலக்ஷை: பாதி தாத்பர்ய ரத்நை:,

2. விமலரஸாவஹா— ஸிதஜலதிவத்- ஶ்ருத் தாஸ்வாதம்

3. சமயத்யக மப்ரதிகம்— சமித துரித கந்தா: இவை போன்ற பல ஸூக்திகளின் ஐகரஸ்யம் உணரப்பட்ட போது இந்த ஸாஸ்வதி யதீச்வர ஸாஸ்வதியே யாதல் வேண்டுமெனத் தோன்றியது. ஸ்ரீ, வீ. வீ. ஸ்வாமியின் தேசிகபக்திக்கும் ராஸிக்யத்திற்கும் மீண்டும் ஒரு சான்று கிடைத்தது.

க்வசிதுபலக்ஷிதா; க்வசிதபங்குர கூடகதி: ஸ்ரீ பாஷ்யபங்திகளுக்கு இந்த அடைமொழிகள் எவ்வளவு அழகாகப் பொருந்துகின்றன! சிலபங்திகளுக்கு வெகுஎளிதில் பொருள்விளங்கிவிட்டதுபோல் தோன்றுகிறது. சிலபங்க்திகளுக்கோ அவைகள் ஸம்பந்தமாக எத்தனை ச்ருதப்ரகாசிகைகளும் பாவப்ரகாசிகைளுமவதரித்திருப்பினும் முழுப்பொருள்நமக் ககப்படாமல் மறைந்தே கிடக்கிறது. இதையேதான் லக்ஷ்யாலக்ஷ்யை: என்று ஸப்ததியில் அநுபவிக்கிறார். லக்ஷ்யாலக்ஷ்யை: என்றபதம் வேறுஒரு தன்மையையும் காட்டுகிறது. பார்க்கப்பட்டதாக நாம் நினைக்கச்செய்தேயும் உண்மையில் முழுவதும் பார்க்கப்பட்டதாக ஆகிறதில்லை. 'பரிசிதகஹநா, என்று இதை வேறிடத்தில் ஸப்ததியில் வர்ணிக்கிறார். ஆழ்ந்து பார்க்கப் பார்க்கஇன்னும் ஆழத்தில் எத்தனை பொருள்கள் மறைந்து கிடக்கின்றனவோ என்றே எண்ணம் உண்டாகிறது. அவைகளையெண்ணியே 'தாத்பர்யரத்நை: என்று ரத்தினங்களாக அருளிச்செய்கிறார்போலும். அபங்குர கதி:-இது அடிக்கடி தேசிகன் அனுபவத்திற்கு விஷயமாகும் அம்சம். யதிப்ரவரபாரதியானது ரஸிகரஸநாலாஸ்யலீலாநிதாநம், ச்ரோத்ர திவ்யௌஷதம், ரஸிகர்களுகுடைய் நாவின் நர்த்தனத்திற்குக் காரணம்; கேட்பவர் செவிகளுக்கு உயர்ந்த இனிய ஔஷதம். பொருள் தெரியாத பேர்களும் ஸ்ரீபாஷ்யத்தை ஸேவித்தும் ஸேவிக்கக்கேட்டும் இன்புறுவதை இன்றளவும் காண்கிறோம்.

எம்பெருமானுடைய திவ்யஸூக்திகளுக்கு ஒப்பாக எம்பெருமானுடைய தயையை வர்ணிக்கதேசிகன் ஒருவருக்குத்தான்தோன்றும் ராமாநுஜன் திறத்தில் அத்துணை ஆசார்ய பக்தி நிகமாந்தமஹாதேசிகனுக்கு. அதை இந்த தசகத்தில் வைத்துக்காட்டுவதில் ஒரு அபூர்வமான பொருத்தமுண்டு. சரணாகதி விஷயமாகச் செய்தே இந்த தசகத்தில் ஸ்ரீபாஷ்யகாரருடையவும் அவருடைய அத்புத ஸ்ரீஸூக்திகளுடையவும் ப்ரஸ்தாபம் அத்யாவச்யகம். 59 வது ச்லோகத்தில் யதிபதி ப்ரஸ்தாபம் வ்யக்தம். யதிராஜஸப்ததியிலேயே முதலில் ஸ்ரீஸூக்தி ப்ரஸ்தாபம் வந்து பிறகே உபவீதிகம் என்று பாஷ்யகாரர் அநுபவம் ஏற்பட்டது. அதற்குச்சேர இங்கே 52 வது ச்லோகத்தில் யதிஸார்வபௌமனுடைய திருவாக்கின் ப்ரஸ்தாபமும் இருந்தால்தான் ஸ்வாமி திருவுள்ளப்பான்மைக்கு அநுரூபமாகவிருக்கும். ஏனென்றால் ப்ரபத்திமார்கத்தை உலகில் நிலைநிறுத்தியவை உடையவரது அருளிச்செயல்களே. அதைக்கொண்டுதான் 'சுத்தாசேஷ வசம்வதீக்ருத யதிக்ஷோணீசவாணீசதா ப்ரத்யாதிஷ்டபஹிர்கதி:, நமக்கெல்லாம் ஏற்பட்டது-ஆறுகவெண்ணும்அரும் கருமம் ஞானம்காதல்கொண்டு வேறாகநிற்கும் விரகறியாது தவிக்கும் நமக்கெல்லாம் இதரகதிகளைத்தவிர்ந்துநிற்கவும், சரணாகதியே கதியென்று தேறியிருக்கவும் மார்க்கமேற்பட்டது. இதற்குப்பகவான் தயையும், பாஷ்யகாரரது ஸூக்திகளுமே ப்ரமாணம். ஆக அவ்விரண்டையும் சேர்த்து ஒரு ச்லோகத்தில் அனுபவித்திருப்பதாகக் கொள்வது சாலப்பொருந்தும். தத்வஹிதபுருஷார்த்த விசதீகரணமாக இவ் வொரு ச்லோகமே அமையாதோ நம் வாழ்வுக்கு?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

"நன்றி மறவாதீர்"

[ஸ்ரீ. உப. வித்வான், வேதாந்தவாவதூக, வில்லிவலம், நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

நன்றிகெட்டவனை நாயினும் கடையனாகப் பெரியயோர்கள் பேசுவர். 'ப்ரஹ்மஹத்யைக்கும் பரிஹாரம் உண்டு; மது அருந்தினவனும் திருந்திவிடலாம்; கள்வனுக்கும் கரை சேர வழிபிறக்கும்; ஆயினும் செய் நன்றி கொன்றவன் எவ்வித சுத்திச்சடங்காலும் தன் பாபம் தொலையப்பெறான்' என்பது சாஸ்த்ரத்தின் கட்டளை. செய்நன்றி மறப்பது அவ்வளவு மா பாதகமாகும். சில தர்மகார்யங்கள் தனமுடையவர்கட்கே தகுவன. ஆலயம் எடுப்பித்தல், வேள்வி செய்தல் முதலியன அவை. மற்றும் சிலதர்மங்களைத் தாம் செய்யப் புகுமுன் மிகுந்த மனவுறுதிபெற்றிருத்தலும் தேவைப்படுவதுண்டு. தமக்குப் பொருட்சேதம் நேரிடினும், ஸதாகாலமும் ஸத்யமே பேசவும், கொடியப்ராணிகளுள்பட எப்ப்ராணிகளிடமும் அஹிம்ஸையையநுஷ்டிக்கவும், மிக்கதொரு மனப்பண்பற்ற மனிதனால் முடியாதல்லவா? வேறு சிலவகை தர்மங்களும் உள்ளன. கேடு உற்றவரைக் கண்டு கழிவிரக்கங் கொள்வது, பகவானிடம் பக்திபூண்டொழுகுவது முதலியன. இவைகளும் எல்லோர்க்கும் அமைந்துவிடுவனவல்ல. நெஞ்சில் ஈரமும், ரஸாநுபவ உணர்ச்சியும் பெற்றவர்களுக்கே இவைகள் கைவரப்பெற்று இருக்கும்.

இவ்வாறின்றி நன்றிசெலுத்தல் என்னும் பரம தர்மம் மேற்சொன்ன எவ்வித அருமைப்பாடும் அற்றதாய், வெகு எளிதாய், யார்க்கும் அப்பொழுதே அநுஷ்டிக்கமுடியுமாய் இருக்கும். 'ஸதஸி கதநம் சாப்யுபக்ருதே:' என்றவாறு பிறர் செய்த உதவியைப் பலாறியப் பேசிடல் ஆகாதகார்யமாமோ? பேச்சுக்கும் பஞ்சம்வந்ததோ? 'வாகஸ்திவசவர்த்திநீ' என்றபடி நான்முகன், நாட்டில் உள்ளவர்களுக்கு 'நாவு' என்னும் நற்சாதனத்தைப் படைத்து வழங்கியிருக்கிறான் அல்லவா? அதற்கு வேறு என்னதான் வேலை. அதனால்தான் செய்நன்றி கொன்றவன் சடலத்தை காக்கையும் கழுகுங் கூட கண்ணெடுத்தும் பாரா என்று சாஸ்த்ரங்கள் முழங்குகின்றன. ஆக ஏனையவற்றைவிட இப்பாபத்தின் கொடுமை இவ்வாறு விஞ்சியிருக்கும் என்று யாவரும் அறிந்த விஷயமே. ஆயினும் இங்கு ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஓர் அத்புதம் காட்டியுள்ளார். அதைச் சிறிது ஆராய்வதே இச்சிறிய எழுத்து எழுதப்படக் காரணமாய் உள்ளது. இப்பாவச் செயலில் முப்பிரிவுகள் உண்டெனவும், அவைகளில் ஒன்றைவிட ஒன்று கனத்திருக்கும் எனவும் வெகு அழகாக நிரூபிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தில் விவேக மஹாராஜன், ஸுமதி தேவிக்கு, அறிவாளிகளும் அறியவரிதான, ஸூக்ஷ்ம விஷயத்தை உபதேசிப்பதாக ஒரு ஸந்தர்பம் அமைக்கப்பட்டுள்ளது.

ப்ரதி(ह)தம் பாதகிவர்க்கம், க்ருதக்ந (घ्न) ஏகோ ஹி க்ருத்ஸநமிதிசேத் ॥ தமபி க்ரியமாணக்ந:(घ्न) தமபி து(दु)ராத்மா கரிஷ்யமாணக்ந: (घ्न) ॥ என்று. எப்பாவத்தையும் அப்பொழுதே துலைத்து விழுங்கக்கூடிய ஆற்றல் பெற்றது, நிவ்ருத்தி தர்மம் – மோக்ஷம் பெற நினைத்துச் செய்யும் உயர்ந்த தர்மம். இத்தருமத்தையும் இல்லைசெய்யும் சக்தி பெற்றது பாகவதாபசாரம். ஆகவே இது மிகவும் கொடிய பாபராஜாவாகும். இதற்கு ஸ்வாமி காட்டியருளும் உதாஹரணமே இங்கு மிகவும் கூர்ந்து கவனிக்கத்தக்கது. பாபிகளின் திரளில் "க்ருதக்நன்" -முன்னாள் செய்த உதவியைக் கொன்றவன் மிகக் கொடியவன். அவனிலும் "க்ரியமாணக்நன்" –இப்பொழுது செய்யப்படும் உதவியைக் கொன்றவன்,

அவனைவிடவும் "கரிஷ்யமாணக்நன்" —மேல் செய்யப்போகும் உதவியைக் கொன்றவன்— எனமேன் மேலும் மிகுந்திருக்கும் இப்பாபிகளின் வரிசை. இது போல் பாகவதாபசாரமும் பாப வரிசையின் சிகரமாகும் என்று.

இங்கு ஒரு ஆக்ஷேபம் செய்யப்படுவதுண்டு. "க்ருதக்நன்" என்னும் ஸம்ஸ்க்ருதபதத்தின் பொருளே "செய்நன்றி கொன்றவன்" என்னும் தமிழ்ச்சொல்லாலும் குறிக்கப்படுகிறது. இவ்விரண்டு பதங்களிலும் கடைப்பகுதியால் சொல்லப்படுவது ஹிம்ஸை என்ற கொலைப் பொருள். ஆக பிறர் உதவியைக் கொலை செய்வது என்பதே இப்பதங்களில் தேரி நிற்கும் பொருள். பிறர் உதவியைக் கொலை புரிவது என்பதற்கு, "யாது கருத்து" என்று நாம் இங்கு சிறிது பராமர்சிக்க வேணும். கொலை என்பது "உயிரைப் போக்கும் செய்கை" என உலகப்ரஸித்தமாயினும் இங்கு அது கொள்ளத்தக்கதல்ல. பின்பு வேறு எப்பொருள் கொள்ளத்தக்கது? இங்கு சிலர் கூறுவர்:— பிறர் உதவியை நாம் மறத்தலே அதைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும். "செய்நன்றி மறந்தவன்" என்றும் இவனை நாம் சில விடங்களில் குறிப்பிடுகிறோம் அல்லவா என்று. இங்ஙனேயாகில் ஸ்வாமி தேசிகன் "செய்யப்படும் உதவி கொன்றவன்" "செய்யப்போகும் உதவி கொன்றவன்" எனவெல்லாம் வேறு இருவகைகளைப்பிரித்து ஸாதித்தது எப்படி ஸரியாகும்? மறதி என்பது கீழ்நடந்தவற்றுக்கேயன்றி இப்பொழுது நடக்குமவற்றுக்கும், மேல்நடக்கப்போகுமவற்றுக்கும், அல்லவே. 'நடக்கப்போவதை மறந்தான்' என்னும் சொல் பிழைபட்டதல்லவா?

ஆகவே மற்றபொருள்கள் பொருந்தாதபோது, பிறரின் உபகாரத்திற்குத் தாம் பதில் உபகாரம் செய்யாததுடன் நில்லாது, அபகாரமும் சிலர் செய்வதுண்டல்லவா? இம்மனப்பான்மையையே 'நன்றியின் கொலை' எனவழங்குகிறார்கள் எனக்கொண்டால் யாதொருவிரோதமுமில்லை. எதைச்செய்யினும், செய்யாதொழியினும் பிறர் உதவியைப்புகழ்ந்துரைக்கவாவது வேண்டும். இதுவே அசக்தர்களியன்றவளவு பிறர்க்குச்செய்யும் பதிலுதவி. அங்ஙனல்லது பிறர் செய்தஉதவியை நாம் ஒருபொழுதும் பழிக்கலாகாது. இவ்விதம் பொருளானபொழுது 'க்ருதக்நன்' 'க்ரியமாணக்நன்' 'கரிஷ்யமாணக்நன்' என்ற பிரிவுகளுக்கு முறையே 'முன்செய்த உதவியைப்பழிப்பவன், இப்பொழுது செய்யப்படும் உதவியைப்பழிப்பவன், மேல்செய்யப்போகும் உதவியைப் பழிப்பவன், என்று பொருள்பட்டு நிற்கும். இவ்விஷயத்தை ஸ்ரீஸ்வாமி ஸுபாஷிதநீவியில் 'ஸர்வம் ஹத:க்ருதம் யௌ ஸக்ருத் உபகாரா பகாராப்யாம் என்றவளவால் உணர்த்தியருளினர். இந்நிலையிலும் இவர்கள் ஒருவரை ஒருவர் விஞ்சிநிற்கை எவ்வாறு? அதில் என்ன பொருத்தம்? என்று பார்க்கவேண்டும்.

பிறர் உதவியை ஒருவன் பழிக்கவேண்டுமாயின் அதற்குக்காரணம் என்ன? அவ்வுதவியை உபகாரமாக்கருதினால் அவன் பழிப்பானா? ஆகையால் அவன் அதை உபகாரமாகக்கருதவில்லை. தன்னுடைய மூர்க்கத்தனத்தினாலும் மௌட்யத்தாலும் அதை அபகாரமாகஎண்ணினான். பழித்தான் என்பதே அதன் தாத்பர்யம். இவ்விதமானபோது ஒருவன் முன்னாளில் பிறர் செய்த உதவியை அபகாரமாக மருண்டு பழித்தானெனில் அது அவ்வளவு குற்றமன்று. முன்னாள் நடந்ததை ஸரிவரப் புரிந்துகொள்ள சிலரால்தான் முடியும். பெரும்பாலோர் அதில்மருள்கொள்வது இயல்பே. ஆகையால்தான் 'க்ருதக்நன்' பாவத்தில்முதல் படியிலுள்ளவன். கண்ணெதிரில் பிறர் தனக்குச்செய்துவரும் உபகாரத்தை, தன்னுடைய குற்றமுள்ள நெஞ்சால் அபகாரமாகக்கருதி அவரைத்தூற்றினான் என்றால் அது முன்னிலும் கொடியதல்லவா? ஆகையாலே 'க்ரியமாணக்நனை' பாவத்தின் இரண்டாம்படியில் வைத்திருக்கிறோம். இனி 'கரிஷ்யமாணக்நன்' மிகமிகக் கொடியவன் என்பதைக்சொல்லுவோம்.

ஒருவரை ஒருவன் பலவாறு பழித்தான். நடுவிலுள்ளவர் அவனை நெருங்கி 'ஏன் அவரை வைகிறாய்' என்று கேட்டபொழுது 'அவர் எனக்கு முன்னாள் அபகாரம் செய்தார், அல்லது செய்துகொண்டிருக்கிறார்' என பதில் பகர்வானாகில் அதை ஒருவிதத்தில் ஒத்துக் கொள்ளலாம். அங்ஙனமின்றி அவர் இவனுக்கு மேல்செய்யப்போகும் பேருதவியை ஊன்றிகவனியாதே, மேல்மிதப்பாக தன்னுடைய கூனுள்ளகருத்தால் அபகாரமாகக் கருதி 'அவர் அபகாரம் செய்யப்போகிறார் அதனால்தான் நிந்தித்தேன், என்று அவன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: |

தமிழ் வளர்த்த இரண்டு ஆசார்யர்கள்

[ஸ்ரீ. உப. திருப்பூந்துருத்தி, வ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், தமிழ்வித்துவான், மாம்பலம்.]

திருவேங்கடமுடையானுக்கு மிகவும் உகப்பான மாதம் என்று புரட்டாசி மாதத்தைச் சொல்லுவார்கள். திருவேங்கடமுடையான் அவதரித்தருளிய மாதம் இது. இவ்வெம்பெருமானுக்கு பிரஹ்மதேவன் மிகவும் அழகாகப் பிரம்மோத்ஸவங்கள் கண்டருளப்பண்ணி மகிழ்ந்த மாஸமும் இது. இத்தகைய சிறந்த மாதத்தில் இவ்வெம்பெருமானுக்கு மிகவும் ப்ரீதிக்குகந்தவர்களாய், இவருடைய அநுக்ரஹத்தினாலும், நம்முடைய இந்தப் பாரதபூமி பண்ணிய நற்றவத்தினாலும் அவதரித்தவர்கள் இருமூர்த்திகள். இவர்களில் ஒருவர் முத்தி தரும் நகரேழினில் முக்கியமான கச்சிப்பதியின் நகரோபகண்டமான திருத்தண்காவில், தூப்புல் குலத்தில் அவதரித்து, ஸ்ரீவேங்கடேசனுடைய அவதாரம் என்றும், அவருடைய கண்டையின் அவதாரம் என்றும், ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதாரம் என்றும் பலபடியாக உலகம் போற்றுமாறு விளங்கி, ஸ்ரீராமாநுஜ தர்சனத்திற்குறை கூறிய வாதிகளை வாதங்களில் வென்றும், தமக்கு ஸகல சாஸ்த்ரங்களிலுமுள்ள ப்ரவீணதையைப் பலபடியாகக் காட்டியும், தமது ஸரள ஸந்தர்ப்பங்களோடு கூடிய பலகவிதாரசனைகளால் வடமொழி, தமிழ் மொழியாகிய இருமொழிகளையும் வளம் பெறச்செய்தும், வேதங்களையும் வேதாந்தங்களையும் வேதாநுஸாரிகளான மற்றைய சாஸ்த்ரங்களையும் தமிழ் வேதங்களையும் தழைக்கச் செய்தும், வைணவ ஸம்ப்ரதாயத்தைப் பரவச் செய்தும், நூற்றுக்கு மேலான உயர்ந்த காவியம், சாஸ்த்ரம் முதலிய நூல்களை இயற்றியும், ஸ்ரீரங்கநாதனால் வேதாந்தாசாரியர் என்றும், ஸ்ரீரங்கநாச்சியாரால் ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்றும் பெரியோர்களால் கவிதார்கிகஸிம்ஹம் என்றும் பிருதளிக்கப் பெற்றும், விரக்தர்களில் அக்ரகண்யராயும், பெரியோர்களால் திசை நோக்கித் தொழப் பெற்றவராயும் விளங்கி, வேதநூல் பிராயமான நூறு திருநக்ஷத்ரங்கள் இந்தப் பூமியை விபவ ரூபத்தில் புனிதமாக்கி இப்போது தமது கீர்த்தியாகிய சரீரத்தினால் பின்னானார் வணங்குஞ்சோதியாக விளங்கும் ஸ்ரீமத்வேதாந்த தேசிகனாவார். மற்றவர் தமிழ்மொழிக்கு மேட்டுமடை என்று கருதப் பெறுவதும், ஆனால் எம்பெருமானுக்கு அத்யந்தம் ப்ரீதிக்குப் பாத்திரமானதும், கருடாழ்வானால் அப்ராக்ருதமான வைரமுடி சாற்றித் தொழப் பெற்றவரும், எம்பெருமானார்க்கு செல்வப் பிள்ளையுமான திருநாராயணன் நித்யவாஸம் பண்ணி மகிழ்வதுமான மேல் கோட்டையென்னும் திருநாராயணபுரத்தில், ஓராணொருவழியாக தமிழ் வேதங்களைப் பிரவசனம் செய்துவந்த திருவம்

பதிலிருந்தால் அது பெரும்பிசகல்லவா? ஆற்றின் கீழ்புறத்தில் நின்று தண்ணீர் குடித்த ஆட்டுக்குட்டியை ஆற்றின் மேல்புறம் தண்ணீரருந்த இறங்கிய ஓநாய் 'நீ நீரைக்கலக்கினாய்' என்று பழிசுமத்திக்கொன்ற கதையோடொக்குமல்லவா இது. ஆகையால் தான் 'கரிஷ்யமாணக்நனை' பாவத்தின் சிகரத்தில் எற்றிவைத்தார் ஸ்வாமிதேசிகன். இங்ஙனம் பொருள் கொண்டால் உள்ளபொருத்தத்தை பெரியோர்கள் திருவுள்ளத்தில் கொள்ளவேணும்.

சத்தில் திருவேங்கடமுடையானுடைய அநுக்ரஹத்தினுல் அவதரித்து, ஸ்ரீ கிடாம்பி ஸ்ரீனிவாஸாசாரியர் என்ற திருநாமம் பெற்று, மிகவும் சிறு பிராயத்திலேயே சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லாத அறநெறியாவும் அறிந்து, ஸ்ரீமத் கடிகாசதம் அம்மாள் திருவடியில் ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் அனைத்தையும் அதிகரித்து, ஸ்ரீமதஹோபிலேசனுல் தமது திருவாராதனத்துக்கு மிகவும் தகுதியுடையவர் என்று வரித்து அழைக்கப்பட்டு, அவரால் ஸ்வயமாக ப்ரேஷமந்த்ரம் உபதேசிக்கப் பெற்று, பின்பு ஸந்யாஸ ஆச்ரமம் ஸ்வீகரித்து அந்த எம்பெருமானுடைய திருவாராதனத்தையும் அவருடைய திவ்ய தேச நிர்வாஹத்தையும் ஏற்று ஏராளமான ஜனத்திரளின் நடுவில் அஹோபிலத்தில் விளங்கும் ஒன்பது நரசிங்க பேரங்களில் ஒருவரான ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுல் ஒரு செல்வக் குழந்தை தனது தாயார் கையில் குதித்து விளையாடுவதுபோல் விளையாடி அநுக்ரஹம் பண்ணப்பட்டு, அந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு க்ராமைகராத்ரமாக ஸஞ்சாரம் செய்து, ஆழ்வார் திருநகரியில் மலைச்சுனைக்குள் பாஷண்டிகளால் எறியப்பட்டிருந்த ஆழ்வாரை தமது பக்திப்ரகர்ஷத்தால் கரைக்கு எழுந்தருளப்பண்ணி அவருக்கு முன்போல் ப்ரதிஷ்டை செய்வித்து, ஸ்ரீ ஆதிப்பிரானுல் அநுக்ரஹிக்கப்பட்டு வண்சடகோபஜீயர் என்ற திருநாமத்தையும், ஆழ்வாரால் ஸ்ரீ ஆதிப்பிரானுடைய திருநாமமாகிய 'ஆதி'யென்னும் சொல்லோடு கூடிய ஸ்ரீமதாதிவண்சடகோப ஜீயரென்று ப்ரஸித்தமான திருநாமத்தையும் பெற்று, ஆழ்வாரால் ஹம்ஸமுத்ரையையும், "ஸ்ரீசடகோபஸ்ரீ:" என்று திருநாமமிட்டுக்கொள்ளும் பெருமையையும் பெற்று, பின்பு திவ்ய தேசத்து எம்பெருமான்களையெல்லாம் திருவடி தொழுது, ஸ்ரீராமாநுஜ மதத்தை தூஷித்த வாதிகளையெல்லாம் வாதில் வென்று, முகுந்த தேவராயன் என்னும் அரசனுக்கு நஷ்டமான ராஜ்யத்தை மீட்டுக் கொடுத்து, பலபல மடங்களை நிர்மாணம் பண்ணி, ஸ்ரீ வைஷ்ணவ தரிசனத்தை நிஸ்ஸமாப்யதிகமாக விளங்குமாறு செய்தருளி, தமது சிஷ்யரான வைதிக ஸார்வபௌமரைக் கொண்டு பல க்ரந்த நிர்மாணங்களைச் செய்து, இன்னும் இவர் ஸாக்ஷாத் லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய விபவாவதாரமேதான் என்று எல்லாராலும் கொண்டாடப் பட்டு, ஸ்ரீ அழகிய சிங்கர் என்று தமக்கும், தமக்குப் பின்பு வரும் ஆசார்யர்களுக்கும் பெரும்புகழை ஸம்பாதித்துக்கொண்ட ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்.

இவ்விரண்டு திருநாமங்களும் புரட்டாசித் திருக்கேட்டையிலும் திருவோணத்திலுமாக நெருங்கிய திருநாள்களில் அவதரித்ததனுலும் மிகவும் ப்ரஸித்தியோடு தர்சனப்ரவசனம் செய்ததனுலும், இன்றளவும் தினந்தோறும் வளரும் வண்ணம் தமது புகழுடம்பை நிலைநிறுத்தியதாலும் ஒற்றுமை பெற்று விளங்குகிறுர்கள். இதைக்காட்டிலும் பெரிய ஒற்றுமையொன்று இவர்களிடையே விளங்குகிறது.

ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் தமிழ் வேதங்களை ப்ரவசனம் செய்து வந்து புகழ் பெற்ற ஒரு வம்சத்தில் அவதரித்து, தமிழ் வேதங்களில் தாமும் மிகவும் ஆர்வங்கொண்டு, தமது திருவடிகளை ஆச்ரயித்த சிஷ்யர்களையும் ஆர்வங்கொள்ளுமாறு செய்தருளினர். இந்த ஆர்வத்தின் பரீவாஹம் தான் இவரை ஸ்ரீமத் ஆழ்வாரைத் திருவடி தொழுமாறு தூண்டி, அவரைப் பர்வத மடுவிலிருந்து ஸ்ரீமதாதிப்பிரான் ஸந்நிதியில் ப்ரதிஷ்டை செய்யக் காரணமாக இருந்தது. இதனுல்தான் அநிதரஸாதாரணமான 'சடகோபஸ்ரீ:' என்னும் பெயரிட்டுக் கொள்ளும் பெருமையும், "ஸ்ரீசடகோபஜீயர்" என்ற தாஸ்ய நாமமும் கிடைத்தன. ஆகவே தமிழ் மறையை வளர்க்க இவர் செய்தருளிய தொண்டை நாம் மறக்கக்கூடாது; மறக்கமுடியாது; மறந்தால் பாபம்.

இவ்வாறு இம்மஹாதேசிகன் தமிழ் மறையை வளர்த்தருள, ஸ்ரீமத் வேதாந்த

தேசிகனே இன்னும் ஒருபடிமேல் போனார். ஒவ்வொரு ப்ராஹ்மணனும் தன்னை 'ஸாமசாகாத்யாயீ'' அல்லது ''யஜுஸ்ஸாகாத்யாயீ'' என்று வ்யவஹரித்துக்கொள்வதுபோல் தாம் தம்மை ''சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு'' என்று வ்யவஹரித்துக்கொள்கிறார். ''பொய்கை முனி.... என்றிவர்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே'' என்று ஸ்ரீமத் ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்கள் வேதங்களின் ஸூக்ஷ்மமான அர்த்தங்களை விளக்கும் பெருமையை எடுத்துரைத்தார். நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு நிகமபரிமளம் என்று ஒரு வியாக்கியான மிட்டருளினார். இந்த ஆழ்வாருடைய திருவிருத்தம் முதலிய நான்கு பிரபந்தங்களையும் அடியொற்றி மும்மணிக்கோவை, நவரத்தினமாலை என்னும் பிரபந்தங்களையும் ஆழ்வார்களுடைய பிரபந்தங்களைப் பொதுவாக அனுஸரிக்கும் ஸ்ரீதேசிகப் பிரபந்தங்களையும் அருளிச் செய்தார். இன்னும் இவர் அருளிய மதுரகவிஹ்ருதயம், முனிவாஹன போகம் என்னும் நூல்களும், த்ரமிடோபநிஷத்ஸாரம், த்ரமிடோபநிஷத்தாத்பரிய ரத்னாவலி என்னும் நூல்களும், ப்ரபந்தஸாரம் என்னும் ப்ரபந்தமும் இவருக்கு ஆழ்வார்களிடம் உள்ள பக்தியின் பெருமையை விளக்கும் சான்றுகளாகும்.

ஆகவே, ஸம்ப்ரதாயத் தமிழை வளர்த்த இவ்விரு ஆசார்யரத்னங்களால் மிகவும் போற்றிக் கொண்டாடப்பட்ட ஸ்ரீமத் ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்களை அர்த்தங்களோடு நாம் அநுஸந்தித்து நமது க்ருதஜ்ஞதையைக் காட்டாவிடில் அது செய்ந்நன்றி கொன்ற ஒரு பாபமாகும். இந்த ஆசார்யர்களுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இவர்களுக்கு மிகவும் ப்ரீதிக்குகந்த உபய வேதாந்த ப்ரவசனமும், சிறப்பாக தமிழ்வேதப்பரவசனமும் இருக்க வேண்டுவது மிகவும் அவசியம். இதை ஒவ்வொரு சிஷ்யனும் கவனிக்கவேண்டும்.

இது ஒரு புறமிருக்க, இன்னும் மிகவும் முக்கியமான விஷயமும் ஒன்று உண்டு. இது ஸ்ரீ தேசிகனுடைய ப்ரபந்தங்களிலிருந்து நமக்கு த்வனியினாலும் குறிப்பினாலும் உணர்த்தப்படும் விஷயம். ஸ்ரீ தேசிகனுடைய முதல் தமிழ் ப்ரபந்தம் மும்மணிக்கோவை என்னும் நூல். அதற்கு அடுத்த பிரபந்தங்கள் இப்போது லுப்தமாகிவிட்ட பந்துப்பா, கழற்பா, அம்மானைப்பா, ஊசற்பா, ஏசற்பா என்பவைகளும் நவரத்னமாலையும் ஆகும். இவைகள் தமிழில் 96 வகைப் பிரபந்தங்கள் என்று இலக்கணம் கூறப்பட்ட பிரபந்த வகைகளைச் சார்ந்தவை. மிகவும் இனிமையானவை. ஸ்ரீ தேவநாதனைவிஷயமாகக்கொண்டவை. மும்மணிக்கோவையையும் நவரத்ன மாலையையும் ஸேவிப்பவர்கள் பந்துப்பா முதலிய 5 பிரபந்தங்கள்மறைந்ததற்குக் கண்ணீர்வடிக்கிறார்கள். இப் பிரபந்தங்களின் ரஸங்களையும் இனிமையையும் அநுபவிக்க நமக்குக் கொடுத்து வைக்கவில்லையேயென்று. இவை மறையக் காரணம் நமது துரதிரிஷ்டமல்லவா?

இனி தேசிகன் தமது மும்மணிக்கோவைக்கும் நவரத்ன மாலைக்கும் அடியவர்க்கு மெய்யன் துதி என்றோ வேறு விதமாகவோ பெயர் வைக்காமல் ''செந்தமிழ் மும்மணிக்கோவை'' என்றும், ''பாவும் நவமணிமாலை'' என்றும் தமிழ் இலக்கண நூலார் கூறும் பெயர்களை வைக்கக் காரணமென்னவென்று நாம் பராமர்சிக்கவேண்டும்.

இதர மதஸ்தர்களுடைய நூல் தொகுதிகளை நோக்கும்போது அவற்றில் மும்மணிக்கோவை முதலிய நூல்கள் விளங்குகின்றன. அவற்றைப் போலவே இலக்கணங்கூறப்பட்ட 96 வகைப் பிரபந்த வகைகளில் இன்னும் பலவேறு பிரபந்த வகைகளிலும் நூல்கள் அத்தொகுதிகளில் இருக்கின்றன. இது ஸ்ரீ தேசிகன் திருவுள்ளத்துக்கு மிகவும் நன்றாக விதிதமான விஷயம்.

எனவே தமிழ் மொழியில் இயற்றப்படும் நூல்கள் தமிழில் விளங்கும் 96 வகைப் பிரபந்தங்களில் ஒரொன்றின் உருவத்திலும், ஆழ்

வார்களுடைய ஸ்ரீ ஸூக்திகளின் ஸாரங்களா கவும், ஸ்ரீ வைஷ்ணவ தர்சன நூல்களுடைய ஸாரங்களாகவும் விளங்கவேண்டும் என்னும் பேரவா தூண்டியதனால்தான் ஸ்ரீ தேசிகன் இத்தகைய ப்ரபந்தங்களைச் செய்து அவை களுக்கு மும்மணிக்கோவை, நவரத்னமாலை முதலிய பெயர்களைச் சாற்றினார். அவர் நமக்கு வழி காட்டினார். அவர் காட்டிய அந்த வழி யில் நாம் நடக்கக் கடமைப் பட்டுள்ளோம். மிக வும் ப்ரஸித்தி பெற்ற ப்ரபந்த வகைகளில் சில ப்ரபந்தங்களைச் செய்து நமக்கு அருளியது இது மாதிரி காவியங்கள் ஏராளமாக வெளிவர வேண்டும் என்று காட்டுவதற்காகத்தான். ஆகையால் தமிழ் மொழியில் காவியமியற்றும் சக்தியுடையவர்கள் எல்லாரும் நமது வைஷ் ணவ ஸம்ப்ரதாயத்துக்குப் பொருந்தியவை களாகவும், திருமால் எழுந்தருளியுள்ள திவ்ய தேசங்கள் விஷயமாகவும் கவிதைகளை அள்ளி வர்ஷிக்க வேண்டும். இலக்கணங் கூறப்பட் டுள்ள பிரபந்த வகைகளிலெல்லாம் காவியங்கள் இயற்ற வேண்டும். அவற்றைப் பாடி மகிழ வேண்டும். ப்ரவசனம் செய்ய வேண்டும். நமது சிறு குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும். அவற்றில் அவர்கள் ருசி கொள்ளுமாறு செய்ய வேண்டும் நமது பெண்களுக்கு அவைகளை இராகத்தோடு பாடக் கற்றுக் கொடுக்கவேண் டும். அவர்கள் பாடுவதைக் கேட்டு "திருமா லைப் பாடக்கேட்டு வளர்த்ததனால் பயன் பெற் றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்று திருமங்கை மன்னன் அருளிச் செய்தபடி நமது முயற்சி ஸபலமா யிற்று என்று ஆனந்தமடையவேண்டும்.

இந்த அரிய தொண்டினை கம்பராமாயணம் என்னும் வைணவப்பெருங்காவியம் பாடிய கம்பநாடர்செய்துள்ளார். கம்பராமாயணத்தை நோக்கும்போது ஒவ்வொருவர் உள்ளத்திலும் பெருமிதமும் பெருமகிழ்ச்சியும் தோன்றுகி றது. அஷ்டப்ரபந்தம் பாடியருளிய திவ்ய கவி பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் இத் தொண்டை மேற்கொண்டு நமக்கு வழிகாட்டி யுள்ளார். பக்திச்சுவையும் நவரஸமும் ததும் பும் கலம்பகம், மாலைகள், அந்தாதிகளாகிய எட்டுப்பிரபந்தங்களை இவர் ஸ்ரீரங்கநாதன், திருவேங்கடமுடையான், அழகர் முதலிய எம்பெருமான்கள் விஷயமாகப் பலவேறு யாப் புக்களில் பாடி அம்ருதவர்ஷம்போல் வர்ஷிக்கி றார் ஸ்ரீஐயங்கார். ஆயினும் இந்த நூல்களை நம்மவர்கள் அதிகமாகப் பயில்வதைக்காணோம். இந்நிலைமை மாறவேண்டும். இனி இதைதவிர அழகர்விஷயமாக ஒருகலம்பகமும், திருவேங் கடமுடையான்விஷயமாக ஒருஉலாப்பிரபந்த மும் கலம்பகமும் உள்ளன. வேறுசில எம் பெருமான்கள்விஷயமாகவும் ஒருசிலப்ரபந்தங் கள் இருக்கலாம். ஆனால் இதரமதத்தினர்க ளுடைய நூல்களில் உள்ளதுபோல் அநேகமாக ஒவ்வொரு தேவாலயவிஷயமாகவும் அநேக ப்ர பந்தங்கள் நமது வைணவத்தில் இல்லையென் பதை மறுக்கமுடியாது. இத்தகைய இலக்கி யக்குறைவுக்குக் காரணம் நம்மவர்களின் சக்திக் குறைவல்ல; சிரத்தைக் குறைவுதான். சக் தியுள்ளவர்களைத்தூண்டி முயற்சியெடுக்குமாறு செய்பவர்களும் முன்வரவில்லை.

இனி இந்த நிலைமை மாறவேண்டும். இத்த கைய காவியங்கள் நமது எம்பெருமான்கள் விஷயமாகவும் நமது ஆசார்யர்கள் விஷயமாக வும் ஏராளமாக இயற்றப்படவேண்டும். தமிழ் மொழிக்குப் புத்துணர்ச்சிவந்துள்ள இந்தக்கா லத்தில்கூட இத்தகைய ப்ரபந்தங்கள் உண்டா கவில்லையென்றால் அவைஇனி எப்போதுதான் உண்டாகும்?

மேலே குறித்தகருத்துக்கள் அடியேனுக்கு நெடுநாட்களாகவுண்டு. ஆசை உண்டு. சக்தி தானில்லை. இருந்தாலும் முயன்றுபார்ப் போம் என்றுநினைத்து ஸுமார் 12, 13 வரு ஷங்களுக்குமுன்பு நமது அஹோபிலத்து ஸ்ரீந்ருஸிம்ஹன்விஷயமாக பிள்ளைத்தமிழ் என்று மிகவும் புன்சொல்லால் ஒருபத்துப் பாட்டுக்கள் எழுதி அப்போது ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் ஸம்பாதகராக இருந்த ஸ்ரீ. உ. வாஸுதேவாசார்யஸ்வாமிக்கு அடியேன் அனுப்பியிருந்தேன். அவை வெளிவருவதை அடியேன் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில்

அவற்றின் இழிவு அடியேனுக்கு மிகவும் நன்ருகத்தெரிந்ததுதான். ஆயினும் சீக்கிரத்தில் ஒருஆச்சர்யம் அடியேனை இன்பக்கடலில் ஆழ்த்தியது. அந்தப்பாசுரங்கள் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் வெளிவந்தன. அதோடு ஸ்ரீவாஸுதேவாசார்யஸ்வாமியின் கைப்படி ஒரு ஸ்ரீமுகம் கிடைத்தது. அடியேனுடைய முயற்சியைக் கொண்டாடியிருந்தார் அந்த மஹான். அவர் செய்தருளிய அந்தக்கௌரவத்தை அடியேன்வாழ்நாள் முழுவதும் மறவேன்.

இத்தகைய உத்ஸாஹமூட்டும் ஸமிஜ்ஞைகளால் விவான்களைத் தூண்டி நம் ஸ்ரீ ந்ருஸிம்ஹன்விஷயமாகப் பல கலம்பகங்களும், பிள்ளைத்தமிழ்களும், கோவைகளும், உலா நூல்களும், தூதுகளும், நக்ஷத்ரமாலைகளும், தசாங்கங்களும், மும்மணிக்கோவைகளும், நான்மணிமாலைகளும், நவமணிமாலைகளும், அந்தாதிகளும், ஊசல் பிரபந்தங்களும், க்ஷேத்திர மாஹாத்மியங்களும், பெருங்காப்பியங்களும், சிறுகாப்பியங்களும்- இன்னும் பற்பல நூல்களும் வருமாறு செய்யவேண்டும்.

இன்னும் குறவஞ்சி நாடகங்களும், கீர்த்தனைகளும், திருப்புகழ்களும், சிந்துப்பாடல்களும் வரவேண்டும்.

இவைகளையெல்லாம் நமதுகாலத்திலேயே அச்சிடச்செய்து ஸேவித்து மகிழவேண்டும்.

'செவிக்குணவில்லாதபோது வயிற்றுக்கு மீயப்படும்' என்ருர் ஒரு பெரியார். வயிற்றுக்கு உணவளிக்கும் ததியாராதனத்தைக் காட்டிலும் செவிக்குணவளிக்கும் ததியாராதனம் சாலச் சிறப்புடைத்து என்று இவர் காட்டுகிருர். இதற்குச் சிறப்பு எனெனில், முந்தியததியாராதன மனுபவிப்பவர்களுக்கு ஒருநாளைக்குத் திருப்தியளிக்கும். ஆனல் பிந்தியது ஸேவிக்கும்போதெல்லாம்- சிந்திக்கும்போதெல்லாம்- கேட்கும்போதெல்லாம் இன்பம் பயக்கவல்லது. இத்தகைய சிறந்த ததியாராதனத்தை அன்பரீட்டத்துக்கு அளிக்குமாறு கவிஞர்களையும் வித்துவான்களையும் வேண்டுவது நமது தமிழ்வேதத்தை வளர்த்துக் காத்துத்தந்த நம்மிரண்டு சிறந்த ஆசார்யர்களாகிய ஸ்ரீ தூப்புல்வள்ளலும், ஸ்ரீ அஹோபிலமடத்தைநிறுமித்துத்தந்த வள்ளலுமாகிய இவர்களுடைய அவதாரதினமஹோத்ஸவத்தைக் கொண்டாடும் திருநாட்களில் நமது முக்கியமான கைங்கர்யமாக விளங்கட்டும். வித்துவான்களும், பண்டிதர்களும், கவிஞர்களும் உத்ஸாஹத்தோடு இத்தொண்டினைச் செய்ய முன்வரவும் வேண்டும்.

'தே வந்த்யா: தே மஹாத்மாந: தேஷாம் லோகே ஸ்திரம் யச:। யைர்நிபத்தாநி காவ்யாநி யே வா காவ்யேஷு கீர்த்திதா:॥' என்றபடி நிலைபெற்று விளங்கும் காவ்யங்களைச் செய்த பெரும் பெருமையை எற்றுக்கொள்ள அவர்கள் முன்வருவார்களா?

சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும்
வேதாந்தகுரு மொழிந்தப் பிரபந்த சாரம்
சிந்தையினு லனுதினமும் சிந்திப்போர்க்குச்
சேமமதாந் திருமாறன் கருணையாலே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

தேசிகோத்தமனும் தேவாதிராஜனுகந்த கைங்கர்யமும்

[ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்யஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

இன்றைக்கு 600- வருஷங்களுக்கு முன் இப்புண்ணிய பூமியில் அவதரித்த மஹானுகிய ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தின் உஜ்ஜீவநத்தையும் பகவத் ராமாநுஜ தர்சன ஸ்தாபனத்தையும் செய்து கொண்டு வெகு காலம் இவ்வுலகில் எழுந்தருளி யிருந்தார். அஹோபில லக்ஷ்மீந்ருஸிம்ஹனின் நியமனத்தினுல் அவனையே அநவரதம் ஆராதித்து வந்த இந்தஸ்வாமி ஒருஸமயம் திவ்யதேச யாத்ரா க்ரமத்தினுல் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினர். அங்கு பெருந்தேவித் தாயாரையும் தேவாதிராஜனையும் பக்தி விசேஷத்துடன் மங்களாசாஸனம் செய்து புளகிதராய் ஆநந்த பாஷ்பத்துடனும் அஞ்ஜலிபுடனும் எம்பெருமான் திருவடி முன்னர் நம் தேசிகோத்தமர் நின்று கொண்டிருக்க ஸர்வேச்வானும் இந்த ஸ்வாமியிடம் விசேஷாநுக்ரஹம் செய்யத் திருவுள்ளங் கொண்டு சடகோப ஜீயரே! நீர் திவ்யதம்பதிகளாகிய எங்களுடைய நவராத்ரோத்ஸவாதிகளுக்கு ஏற்ப அழகிய நூற்றுக்கால் மண்டபத்தை நிர்மாணிப்பீராக என்று அர்ச்சக முகமாக நியமித்தருளினன். உடனே தங்யோஸ்மி என்று அங்கியமனத்தை சிரஸா வஹித்து ஆதிவண்சடகோப ஜீயரும் தமது ப்ரிய சிஷ்யனுன ஓர் மஹா தனிகன் மூலமாக அநேக வித விசித்ர சிலாசித்ரங்கள் பொருந்திய நூற்றுக்கால் மண்டபத்தை நிர்மாணித்து பேரருளாளனும் பெருந்தேவித் தாயாரும் நவராத்ரோத்ஸவ காலத்தில் ஊஞ்சல் விளையாட்டை பெருமிதத்துடன் அம்மண்டபத்தில் செய்தருளும்படி செய்து இம்மண்டப நிர்மாண கைங்கர்யத்தினுல் தேவாதிராஜ தம்பதிகளின் உகப்புக்கு பாத்ரரானுர். 'விமானவிசேஷமும் ஆயிரக்கால் மணி மண்டபமும் கொண்ட ஸ்ரீவைகுண்ட திவ்யதேசத்தில் நித்ய ஸூரிகளுக்கும் முக்தர்களுக்கும் நியந்தாவாக ஸ்ரிய: பதி எழுந்தருளியிருக்கிருன்' என்ற பொருளை யுணர்த்துகின்ற 'ஸஹஸ்ரஸ்தூணே விமிதே த்ருட உக்ரோ யத்ர தேவாநாம் அதிதேவ ஆஸ்தே' என்கிற ச்ருதியும் நம் ஸ்வாமி செய்த மண்டப நிர்மாண கைங்கர்யத்தினுல் வேறொரு ரஸவத்தான அர்த்தத்தை யுணர்த்தும் பெருமையைப் பெற்று விட்டது. அதெப்படி எனில்:- ஸஹஸ்ரஸ்தூணே— அநேகம் தூண்கள்கொண்ட மண்டபமுள்ளதும், விமிதே— புண்யகோடி விமானமுள்ளதும், த்ருடே—பலம் பொருந்தியதுமான, யத்ர—யாதொரு காஞ்சி திவ்ய தேசத்தில் உக்ர:— ந்ருஸிம்ஹரூபியாகவும், தேவாநாம் அதி தேவ:— தேவாதிராஜனுகவும், ஆஸ்தே— எம்பெருமான் அடியார்களின் நலத்துக்காக நித்யவாஸம் செய்கிருனே, என்று பொருள் கொள்ளலாமல்லவா? இப்படிப் பட்ட பொருள் கொள்வதற்கு நம் ஸ்வாமி செய்த நூற்றுக்கால் மண்டப நிர்மாணம் காரணம் என்பது ரஸிகர்களுக்கு எளிதில் புலப்படும். உக்ர பதம் ந்ருஸிம்ஹன் திருநாமமாக மந்த்ரராஜனிலிருப்பதைக் காணவும். இனி இந்த மண்டபத்தை நம் ஸ்வாமிதான் நிர்மாணித்தார் என்பதற்குச் சில சான்றுகளைக் கீழே விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். ஆழ்வார்திருநகரி, ஸ்ரீரங்கம், திருவேங்கடம் அஹோபிலம்முதலியவிடங்களில்தாம்செய்தருளிய அரிய பெரிய கைங்கர்யங்களுக்கு அடை

யாளமாகநம்தேசிகோத்தமன் ஆங்காங்குலக்ஷ்மீ
ந்ருஸிம்மனையும் அவனை ஸேவிக்கும் யதிராஜ
னான தம்மையும் ப்ரதிமா ரூபமாக நிர்மா
ணித்திருக்கிறார். இவற்றை நாம் இன்றும்
ஸேவித்தின்புறுகிறோம். அதே அடையா
ளத்தை இந்த நூற்றுக்கால் மண்டபத்திலும்
கிழக்கு மேற்குப் புறத் தூண்களில் ந்ருஸிம்ஹ
யதிராஜ ப்ரதிமாரூபமாகக் காண்கிறோம். நம்
ஸ்வாமிக்கு ஆராத்யனான ஸ்ரீந்ருஸிம்ஹனின்
ப்ரதிமைகளும் இம்மண்டபத்தில் பலவிடங்
களில் காணப்படுகின்றன. மேலும் ‘ஹஸ்தீச
ஸ்தவம்’ என்கிற நூலிலுள்ள கீழ்கண்ட
ச்லோகமும் நம் ஆசார்யனே இம்மண்டபத்
தை நிர்மாணித்தருளினார் என்பதை ஸ்பஷ்
டமாக விளக்குகிறது. அந்த ச்லோகம் வரு
மாறு— “ஸ்ரீமாந் ஸ்ரீவண்சடாரி வ்ரதி கலித
சத ஸ்தம்பவந் மண்டபாந்தர் டோலா டோ
லாயிதாத்மா மணிமயமகுடஜ்யோதி ருத்-
பாஸிதாச: | ராஜா ராஜாதிராஜப்ரமுக திவி
ஷதாம் ஹஸ்திசைலேச்வராக்யோ தேவோ
தேவோ முதேவோ பவது மம ஜநாஸ் ஸ்மேர
வக்த்ராரவிந்த: ‖ என்று. இதன் பொருள்—
குபேரன் முதலிய தேவர்களுக்கு ராஜாவும்
தமக்கு நியந்தா இல்லாதவனும், ஹஸ்தி
சைலேச்வரன் என்ற திருநாமம் பூண்டவனு
மான தேவாதிராஜன் தான் அணிந்த கிரீ
டத்தின் ரத்ன காந்தியினால் எண்டிசையும்
ப்ரகாச முறச் செய்து கொண்டு பெருந்தேவி
பிராட்டியுடன் மந்த ஸ்மித விகஸித முகார
விந்தனாய் நமது ஆதிவண்சடகோப யதீந்த்ர
மஹா தேசிகன் நிர்மாணித்த நூற்றுக்கால்
மண்டபத்தில் ஊஞ்சலில் அமர்ந்திருந்து
விளையாடி ஜநங்களை, உங்கட்கும் எனக்கும்
பேரானந்தம் அளிப்பானாக என்று. இந்த
ஹஸ்தீசஸ்தவம் இற்றைக்கு 200- வருஷங்க
ளுக்கு முன்னர் அவதரித்தது. இதன் அவ
தாரம் வருமாறு- ஸ்ரீமத் அஹோபில மடத்
தில் 27-வது பட்டத்தில் மூர்த்தாபிஷேகம்
பெற்ற ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவ
வேதாந்த யதீந்த்ர மஹாதேசிகன் இந்நூலைச்
செய்தருளினார். இந்த அழகியசிங்கர் இந்த
ஆஸ்தானத்தில் நான்கு வருஷங்கள் எழுந்த
ருளியிருந்து யாத்ரா க்ரமத்தில் கிருஷ்ண
தீரத்தில் பரமபதமடைந்தார். இவர் எழுந்
தருளியிருந்த 4 வருஷத்தில் முதல் வருஷத்
திய சாதுர் மாஸ்யம் ஸ்ரீரங்கத்திலும் இரண்
டாவது சாதுர் மாஸ்யம் பெருமாள் கோயிலி
லும் மூன்றாவது சாதுர்மாஸ்யம் சிங்கவேள்
குன்றமென்னும் அஹோபிலத்திலும் நான்
காவது சாதுர் மாஸ்யம் கிருஷ்ண தீரத்தி
லும் நடந்ததாகப் பெரியோர் கூறுவர். இந்த
அழகியசிங்கரும் தாம் செய்த இந்நூலில்,
‘முதல் சாதுர்மாஸ்யம், ஸ்ரீரங்கத்திலும்,
இரண்டாவது சாதுர்மாஸ்யம் கச்சி நகரிலும்
பகவத் க்ருபையால் நன்கு நடந்தேறியது
என்பதை “சாதுர்மாஸ்யம் ஸமக்ரம் வ்ரதம்
இஹ ரசிதம் த்வத் க்ருபா வைபவேந ஸ்ரீமந்
ஹஸ்தீச்வராத் யம் வ்ரதமநுரசிதம் நிஸ்துலே
ரங்கதாம்நி” என்ற பூர்வார்த்தத்தினால் ஸா
தித்திருக்கிறார். கவி ஸார்வ பௌமனும்
ஜகத் விக்யாத பாண்டித்யவானுமாகிய இந்த
ஸ்வாமி காஞ்சி நகரில் இரண்டாவது சாதுர்
மாஸ்ய வ்ரதத்தைப் பேரருளாளன் க்ருபை
யினால் பூர்த்தி செய்து தம் மடத்தில் ஓர்
இரவு சயனித்திருக்கும்போது இந்த ஸ்வாமி
மூலமாகவும் தமது ப்ரபாவத்தை உலகுக்கு
பரப்ப விரும்பிய பேரருளாளன் பரம க்ரு
பையுடன் ஸ்வப்நத்தில் தோன்றி இந்த
ஸ்வாமியை எழுப்பி “அஸ்மாந் ரக்ஷது ஹஸ்தி
சைல சிகரஸ் தே மா புமாந் ஆதிம:” என்ற
ஓர் பத்ய பாதத்தை உபதேசித்தருளினான்.
விஸ்மிதரான நம் ஸ்வாமியும் எழுந்திருந்து
பேரருளாளன் திருவருளை வியந்து ‘ஹஸ்தீச
ஸ்தவம்’ என்ற அத்புதமான இந்நூலையியற்றி
பகவந் நியமநத்தைத் தலைக் கட்டியருளினார்.
இவ்விஷயத்தை ‘அஸ்மாந் ரக்ஷது ஹஸ்தி
சைல சிகரேத்யேவம் துரீயம் புந: பாதம் கஞ்
சந ஹஸ்திராடுபதிசந் ஸ்வப்நேவ போத்யைவ
மாம்’ என்கிற ச்லோகபாகத்தினால் இவ்வழ
கியசிங்கரே விளக்கியிருக்கிறார். நூற்றுக்கால்
மண்டபத்தை ஸ்ரீமத் ஆதிவண்சடகோபஜீயர்
நிர்மாணித்ததாகக் கூறுமிவ் வழகியசிங்கரின்
ஸ்ரீமான் ஸ்ரீவண்சடாரி என்கிற ச்லோகம்
பேரருளாளனின் கட்டிய பதங்களான ராஜாதி

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

ஸ்தோத்ர ரத்நமும் ஸ்ரீதேசிகனும்

[ஸ்ரீ. உப. வித்வான், அத்தி க்ருஷ்ணமாசார்யஸ்வாமி, ந்யாயாத்யாபகர்,
ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]

'த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞைஸ்த்ரேதாயாம் த்வாபரேऽர்ச்சயந்। யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம்' என்கிற பாராசரமஹரிஷியின்வசனம் க்ருதயுகத்தில் எம்பெருமானை த்யானிப்பது சிறந்ததென்றும், த்ரேதாயுகத்தில் யாகங்கள் செய்வது சிறந்ததென்றும், த்வாபரயுகத்தில்அர்ச்சனைகள்செய்வது சிறந்ததென்றும், கலியுகத்தில்பகவந்நாமஸங்கீர்த்தனம்செய்வது சிறந்ததெனவும் கூறுகிறது. இக்காலத்தில் இக்கர்மபூமியிலுள்ள நம்போலியர்க்கு எம்பெருமானுடைய முகமலர்ச்சியை ஸம்பாதிக்க ஸ்தவ்யனும் ஸ்தவப்ரியனுமான எம்பெருமானை ஸ்துதி செய்வதே சிறந்த உபாயமாக அறுதியிடப்பட்டிருக்கிறது. நாமாகவே சிலச்லோகங்களை அல்லது வாக்கியங்களை அமைத்து ஸ்தோத்ரம் செய்வதைக்காட்டிலும் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளால் எம்பெருமானை ஸ்தோத்ரம்செய்வதே அவன் திருவுள்ளம் உவப்படைய சிறந்த உபாயமென்று பெரியோர்களின் கொள்கை.

மற்றவர்கள் செய்திருக்கும் ஸ்தோத்ரங்களைக்காட்டிலும் ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ரம் பக்தியை வளர்ப்பதுமன்றி சித்தரஞ்சகமாகவும் எல்லோரும் அப்யஸிக்கக்கூடியதாயும் அமைந்திருக்கிறது என்பதை திருவுள்ளம்பற்றி பெரியோர்கள் இதை 'ஸ்தோத்ரரத்நம், என்று வ்யவஹரித்துவருகிறார்கள். இதன் பெருமையை உணர்ந்தே ஸ்ரீஸ்வாமிதேசிகன் பரமக்ருபையால் இதற்கு பாஷ்யம் அருளிச்செய்திருக்கிறார். அதில் அநேக சாஸ்த்ரார்த்தங்களை பொழிந்திருக்கின்றார். அதற்குச்சான்றாக ஓரிரண்டிடங்களைக் காட்டுகிறேன். ஸ்ரீஆளவந்தார் சதுச்லோகியை அருளிச்செய்த பிறகே ஸ்தோத்ரரத்நத்தை அருளிச்செய்தாரென்பதை சதுச்லோகியின் பாஷ்யத்தின் கடைசியிலுள்ள 'ஸ்தோத்ரே ஸந்தர்சயிஷ்யதி' என்கிற பாகத்தால் அறிகிறோம். 'கத்யம்' போல இந்த ஸ்தோத்ரமும் ஸ்ரீஆளவந்தாருடைய த்வயானுஸந்தானத்தின் பரீவாஹமே. இதுக்கு 'ப்ராப்ய ப்ராபக' என்கிற ச்லோகத்திலுள்ள 'த்வயாநுஸந்தாநஸிந்துபரீவாஹ:' என்கிற ஸ்ரீஸ்வாமியின் ஸ்ரீஸூக்தியே போதியச் சான்றாகும்.

இதில் ஒன்றுமுதல் மூன்று ச்லோகங்கள் (க்ரமமாக) ஸ்ரீமந்நாதமுனிகளை விஷயமாகக்கொண்டதுகள். முடிவிலும் ஸ்ரீமந்நாதமுனி விஷயமாக ஓர் ச்லோகம் காணப்படுகிறது. மற்றவை ஓரிரண்டுச்லோகங்கள் தவிர மற்றவைகள் எம்பெருமானைப்பற்றினதே. இங்கே

ராஜ, தேவதேவ, என்கிற பதங்களமைப்பைப் பெற்றிருப்பதால் இதைப் படிக்கும் தோறும் தேவாதிராஜன் எழுந்தருளுகின்ற காட்சியும், ஆதிவண்சடகோப ஸ்வாமி ஆயிரக்கால் மண்டபம் நிர்மாணித்தாரென்ற உறுதிப்பாடும் நம் போல்வாரின் மனக்கண்ணில் தோன்றிப் பேரின்பம் பயக்கின்றன.

ஸ்ரீபதி: சடகோப ஸம்யமி ஸார்வபௌமக்ருதம் சத ஸ்தூணமண்டபமேத்ய கல்பிதடோளிகோபரி கேளிக: । ஹஸ்திசைல பதி: கிரீடருசா விபாஸிததிக்தடோ ராஜராஜ முகாகிலாமரநாயகோஸ்து ஜகந்முதே ॥

எம்பெருமானை ஸ்துதிசெய்யவேண்டிய இடத்தில் ஆசார்யனையும் ஸ்துதிசெய்யவேண்டிய தின் ஆவச்யகதையை ‚பகவத்வந்தனம் ஸ்வாத்யம் குருவந்தனபூர்வகம்' என்கிற ப்ரமாணபுரஸ்ஸரமாக எடுத்துக்காட்டியதுமில்லாமல் ஓர் அத்புதமான ரூபணம் செய்திருக்கிறார். ஒரு ரத்நத்தைக் காப்பாற்றிவைப்பதற்கு ஸம்புடம் வைத்துக்கொள்வது உலக இயல்பு. அதை திருவுள்ளம்பற்றி எம்பெருமானைப்பற்றிய ஸ்தோத்ரத்திற்கு ஆசார்யனைப்பற்றின முன்பின்னுள்ள ஸ்தோத்ரங்கள் ஸம்புடம்போல் அமைந்திருக்கின்றன என்பதே ஸ்வாமியின் ரூபணம்.

'ஸ்தோத்ரரத்நமிதம் ந்யஸ்தமாசார்ய ஸ்துதிஸம்புடே' என்கிற ஸ்ரீஸூக்தியே போதியசான்று. இந்தஸ்தோத்ரத்தில் ஒன்றுமுதல்மூன்றுச்லோகங்களும்நாதமுனிவிஷயங்களாதலால் ஒருச்லோகமே போதாதோஎன்கிற சங்கையைப் போக்கும் ரீதியே ஸ்வாமி ஸூக்தியில் வெகுஅழகு. இவ்விடத்தில் மூன்றுகேள்விகள் தோன்றுகின்றன. 1. தன் ஸாக்ஷாத் ஆசார்யனைப்பற்றி ஓர்ச்லோகம் கூட அருளிச்செய்யாமல் ப்ராசார்யனான ஸ்ரீமந்நாதமுனிகளைப்பற்றி அருளிச்செய்ய காரணம் யாது? 2 ஒருச்லோகமே போதியதாக இருக்க மூன்று ச்லோகமருளிச்செய்ததின் மர்மம் யாது? 3 மூன்று ச்லோகங்களிலும் தத்வஜ்ஞானபதத்தை நிவேசனம்செய்ததிருவுள்ளம் யாது? இதற்கு ஸ்ரீஸ்வாமி அருளிச்செய்திருக்கும் ஸமாதானத்தின் அழகைக் காணீர். 'ஆசார்ய ப்ராசார்ய ஸந்நிபாதே ப்ராசார்யாயோபஸங்க்ருஹ்ய' (ஆசார்யனும் ப்ராசார்யனும் ஒரே ஸமயத்தில் ஸேவை ஸாதிக்கும் பக்ஷத்தில் யாரை முதலில்தொழுவதென்கிற கேள்வி தோன்றுதல் உலக இயல்பாதலால் அதை சாஸ்த்ரபூர்வகமாக ப்ராசார்யனையே முதலில் தொழவேண்டும். பிறகே ஆசார்யனைத் தொழவேண்டும்) என்கிற சாஸ்த்ரார்த்தத்தை உலகிற்குத் தெரிவிக்கக்கருதி ப்ராசார்யனை ஸ்துதி செய்தபடி.

இரண்டாவதாக ஸ்ரீமந்நாதமுனிகளுக்கு பகவானிடத்திலுள்ள பக்தியைப்பற்றின ஒரு ச்லோகமும், அவருக்கு பகவான்பக்கலிலுள்ள ஸ்நேகத்தைக்காட்ட ஒருச்லோகமும், ஸ்ரீமந்நாதமுனிகள் உலகத்திற்குச் செய்த உபகாரத்தை தெரிவிக்க ஒரு ச்லோகமும், ஆக மூன்று ச்லோகங்கள் அருளிச்செய்தபடி. மேல்கூறிய அர்த்தங்களை முதல்ச்லோகத்திலுள்ள 'பகவத்பக்திஸிந்தவே' என்கிற பதத்தினாலும், இரண்டாவது ச்லோகத்திலுள்ள 'அநுராகமஹிமாதிசயாந்தஸீம்நே' என்கிற பதத்தாலும், மூன்றாவது ச்லோகத்திலுள்ள 'சுபைர்வசோபி:' என்கிற அம்சத்தினாலும் முறையே காட்டினார்.

மூன்றாவதாக வைராக்யமென்ன பரபக்தி என்ன இவைகளுக்கு தத்வஜ்ஞானம் முக்கிய காரணம் என்பதை தெரியப்படுத்த மூன்று ச்லோகங்களிலும் தத்வஜ்ஞானபதத்தை நிவேசனம் செய்தபடி. மேற்கூறிய அர்த்தங்கள் ஸ்வாமிதேசிகன் ஸ்ரீஸூக்திகளாலேதான் அறியமுடிகிறது.

'நமோऽசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞானவைராக்யராசயே | நாதாய முநயேऽகாத பகவத்பக்திஸிந்தவே|| என்பதுஸ்தோத்ரரத்நத்தின்முதல் ச்லோகம். இதன்பொருள்:– இப்படிப்பட்டதென்று நினைக்கமுடியாததாயும், ஆச்சர்யமானதாயும், கஷ்டமில்லாமல் கிடைத்ததால் ஜ்ஞானத்தினுடையவும், வைராக்யத்தினுடையவும், ஸமூஹம்போலிருப்பவராயும் ஆழ்ந்த பகவத்பக்திக்கு கடலாயுமிருக்கிற நாதமுனிகளின்பொருட்டு நமஸ்காரம் செய்கிறேன். இவ்விடத்தில் ஸ்ரீஸ்வாமிதேசிகன் உலகத்தில் ஸஹஜமாக தோன்றக்கூடிய அர்த்தங்களை முதலில் அருளிச்செய்து 'அதவா' என்று தனக்கே அஸாதாரணமான ப்ரதிபாவிலாஸத்தினால் 'ஜ்ஞானவைராக்யராசயே' என்கிற விடத்திலும் 'பகவத்பக்திஸிந்தவே' என்கிற இடத்திலும் வ்யாக்யானம் செய்திருக்கிறார். ஜ்ஞானவைராக்யங்களுக்கு நிதிபோன்றவர் என்பது எல்லோருக்கும் தோன்றக்கூடிய அர்த்தம். 'அதவா' என்பதால் ஸ்ரீஸ்வாமி அநுக்ரஹித்திருக்குமர்த்தம் ஜ்ஞானவைராக்யங்களுடைய கும்பலை உடையவர். (பஹுவ்ரீஹி) ஸமாஸத்தை திருவுள்ளம்பற்றி அருளிச்செய்தபடி. ஸ்ரீமந்நாதமுனிகள்

ஜ்ஞாநவைராக்யங்களுக்கு ஆச்ரயமாக இருப்பவர் என்பதைக் காட்டிலும், ஜ்ஞாநவைராக்யங்களுடைய கும்பலுக்கு ஆச்ரயராக இருப்பவர் என்பதில் ரஸம் அதிகமாக தோன்றுகிறதல்லவா? இதுபோல் பகவத்பக்திஸிந்தவே என்கிறவிடத்திலும் பகவத்பக்திக்கு கடல் போன்றவர் என்பதைக் காட்டிலும் பகவத்பக்தியாகிற கடலைஉடையவர் [பக்தியைக்கடலாக ரூபணம் செய்து] என்று வ்யாக்யானம் செய்தபடி. [காதல் கடலில் மிகப்பெரிது,என்கிறபடி கடலைக்காட்டிலும் நாதமுனிகளுடைய பக்தி பெரிது என்பது ரஸம்] ஜ்ஞானமோ வைராக்யமோ, இரண்டும் தனித்தனியே ஒவ்வொரு வஸ்துவாயிருக்க ஜ்ஞாநவைராக்யராசயே என்பதுஎப்படிபொருந்தும்என்றுசிலர் ஸந்தேஹிக்கக்கூடும். எம்பெருமானுடைய ரூபம் குணம் விபூதி முதலிய பலவிஷயங்கள் உள்ளனவாகையால் விஷயபேதத்தையிட்டு ராசயே என்றருளிச்செய்தபடி என்பது ஸ்ரீஸ்வாமியின் வ்யாக்யானம். இதுபோல் வைராக்யத்திற்கும் விஷயமான வஸ்துக்கள். தாய், தந்தை, தனயன், முதலியவைகள் உண்டாதலால் அங்கும் இச்சமாதானம் கொள்ள வேண்டும். இங்கு மற்ற வ்யாக்யானங்களிலில்லாத ஸ்வாரஸ்யமுள்ள அர்த்தத்தை ஸ்வாமியினுடைய ஸ்ரீஸூக்தியில் புதைந்திருப்பதை மற்றொரு இடத்தில் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். 'வேதாபஹார' என்கிற பதிமூன்றாவது ச்லோகத்தில் ,கஸ்ய பாதோதகேந ஸ சிவ: ஸ்வசிரோத்ருதேந' என்கிற நான்காம்பாதத்திற்கு வ்யாக்யாநம் செய்யும் வ்யாஜத்தில் ஆச்சர்யமாயும் சாஸ்த்ரஸம்மதமாயுமுள்ள அர்த்தத்தை அருளிச்செய்திருக்குமழகைப்பாரீர். பகவானுடைய திருவடியில் உண்டானதாயும் ஸ்வத: பவித்ரமாயும் உள்ள கங்கை சிவன் ஸம்பந்தத்தால்தான் சுத்தமுள்ளதாயிற்று, என்று சிலர் கூறுகின்றனர். அதற்கு ப்ரமாணமாக ஸ்ரீமத்ராமாயணத்திலுள்ள 'பவாங்கபதிதம் தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருசு:' என்கிற ச்லோகத்தை சிவன் சரீரத்தில் விழுந்ததென்கிற காரணத்தினால் சுத்தமான கங்காஜலத்தில் தேவர்கள் ஸ்நானம் செய்தார்களென்று ப்ரமாணமாகக் கூறுகிறார்கள். அந்த அர்த்தங்களை நிரஸிக்கத் திருவுள்ளம்பற்றி ஸ்ரீஆளவந்தார் 'கஸ்ய பாதோதகேந ஸ சிவ: ஸ்வசிரோத்ருதேந' [சிவன் தன் தலையால் தரிக்கப்பட்ட எந்த எம்பெருமானுடைய திருவடி தீர்த்தத்தால் சுத்தனாக ஆனான்] என்று அருளிச்செய்தார். இப்படிக்கு அருளிச்செய்வற்குக் காரணம் ஸ்ரீபாகவதத்திலுள்ள 'யச்சௌச நிஸ்ருத ஸரித்ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந சிவஸ்சிவோऽபூத்' [பெருமாளுடைய திருவடிகளில் அபிஷேகம் செய்த தீர்த்தத்தை [கங்கையை] சிவன் தனக்கு சுத்தி உண்டாவதற்காக தலையில் தரித்து சுத்தனானான் என்று பொருள்,] ச்லோகமே. இதுபோல் 'பவநார்த்தம் ஜடாமத்யே' இது முதலிய அநேகப்ரமாணங்கள் இவ்விஷயத்தில் ஒரேவித அபிப்ராயம் கொண்டுள்ளன. இப்படி வ்யாக்யானம் செய்தால் பவாங்கபதிதம் என்கிற ஸ்ரீமத்ராமாயண ச்லோகம் விரோதியாதோவென்னில் நம் ஸ்வாமி வெகுஅழகாக ஸ்ரீமத்ராமாயணச்லோகத்திற்கு அர்த்தமருளிச்செய்து விரோத பரிஹாரம் பண்ணியருளினது வெகுரஸம். ஸ்வத: பவித்ரமான கங்கைக்கு பவாங்கபதிதத்வம் சிவன் சரீரத்தில் விழுந்ததென்கிற காரணம் ஞாபனத்திற்குக் காரணமேயொழிய சுத்தியை உண்டுபண்ணுவதற்குக் காரணமல்ல.

'பவேந சிரஸா த்ருத்வா பவித்ரமிதி பஸ்ப்ருசு:' என்பது ஸ்வாமி பாஷ்யம். இதன் பொருள் சிவனே தனக்கு சுத்யாபாதகமாக தலையால் கங்கையை தரித்தபடியால் சிவனைக்காட்டிலும் குறைந்தவர்களான நாமும் இந்தகங்கையில்சுத்தர்களாக ஆவதற்காக ஸ்நானம் செய்யவேண்டும் என்று. இப்படி வ்யாக்யானம் செய்வதால் கங்கைக்கு ஸ்வத: சுத்தியைக்கூறுகிற ப்ரமாணங்களுக்கும் ஸ்ரீமத்ராமாயண ச்லோகங்களுக்கும் ஒற்றுமை உண்டாகிறது. இப்படிப்பட்ட இடங்களே ஸ்வாமிபாஷ்யத்தில் அநேகமாகக் காண்கின்றன.

புரட்டாசி மாதமே மிக உயர்ந்ததென்று பெரியோர்களின் கொள்கை. அதற்குக் காரணம் திருவேங்கடமுடையான், ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன், ஆதிவண்சடகோபஸ்வாமி இம்மூன்று மஹாசார்யர்கள் அவதரித்ததே. ஸ்ரீநிவாஸனே தேசிகனாகவும் தேசிகனே ஆதிவண்சடகோபஸ்வாமியாகவும் அவதரித்ததாக சான்றோர்களின் கொள்கை. 'செல்வமுடைய வேங்கடவன் அறந்திகழு மாமணியினவதாரமாங்குருவே நிறைந்திங்கே இம்முனியாய் நிற்கின்றது' என்பதே போதியப்ரமாணமாகும். ஸ்ரீ ஆதிவண்சடகோப ஸ்வாமி ஸ்ரீதேசிகனுக்குப் பின்பு அவதரித்தபடியால் தேசிகனாலேயே விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குவேண்டிய க்ரந்தங்களை எல்லாம் அருளிச்செய்துவிட்டதால் மிகுந்த தர்மசாஸ்த்ர க்ரந்தங்களை எம்பெருமானார் பகவத்விஷயத்தை திருக்குருகைப்பிரான்பிள்ளானைக் கொண்டு ப்ரவர்த்திப்பித்தாப்போலே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் இதர ஆசார்யர்கள் செய்யாத தர்மசாஸ்த்ரக்ரந்தங்களை தம் சிஷ்யரானதோழப்பரைக்கொண்டுப்ரவர்த்திப்பித்தருளினார். இவ்விஷயத்திற்கு 'யச்சிஷ்யாக்ரியோ வைதிகாநாம் ஸார்வபௌமத்வமேத்ய ச। ரத்நாகராதீந் க்ருதவாந் தம்முநேர் மங்களம் ஸதா॥ [எந்த ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் சிஷ்யர்களில் முதல்வரான தோழப்பர் வைதிக ஸார்வபௌமர் என்கிற பிருதுவை அடைந்து ஸ்ம்ருதிரத்நாகரம் முதலிய க்ரந்தங்களை அருளிச்செய்தாரோ அப்படிப்பட்ட ஆதிவண்சடகோபஸ்வாமிக்கு மங்களம் எப்பொழுதும் உண்டாகட்டும்] என்கிற ச்லோகமே போதிய சான்றாகும்.

அல்லிக்கேணியில் ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

தசாவதார ஸ்தோத்ரம்

[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம் திருமலைதாதாசார்ய ஸ்வாமி, M.O.L., திருப்பதி.]

ஸ்வாமி தேசிகன் செய்தருளிய தசாவதார ஸ்தோத்ரத்தைப் பற்றிய சில விசேஷங்கள் இங்குக் குறிப்பிடப்படுகின்றன. அனேகமாக எல்லா அவதாரங்களிலும் ப்ரபல சத்ரு நிரஸநம் செய்யவேண்டி யிருந்தபடியால் எம்பெருமான் தனது பல பராக்ரமங்களை ப்ரகாசப் படுத்துவது அவச்யமாயிற்று. அதற்கேற்ப இந்த ஸ்தோத்ரத்தில் சார்தூலவிக்ரீடிதம் என்கிற நீண்ட வ்ருத்தத்தைக் கையாண்டிருக்கின்றார் நம் கவிதார்க்கிககேஸரி. சார்தூலவிக்ரீடிதம் என்றால் 'புலியின் விசேஷவிளையாட்டு' என்பது பொருள்.

இந்த ஸ்தோத்ரத்தில் உள்ளவை பதின் மூன்று ச்லோகங்கள். அவற்றில் முதல் ச்லோகத்தில் பொதுவாக அவதாரங்கள் பத்து என்பதோடு 'பகவான் ஒரு நடன்; பிராட்டி அவனுக்கேற்ற நடிகை. அவளோடு அவன் பல வேஷங்கள் போட்டு நாடகம் காட்டுகின்றான். அதைக்கண்டு ஸ்ரீரங்கமாகிற நாடகசாலையிலுள்ள மஹாரஸிகர்கள் களிக்கின்றார்கள்' என்பதும் கூறப்படுகின்றது. பகவத்கீதையில் அவதாரரஹஸ்ய ப்ரகரணத்தில் உபதேசித்திருக்கின்றபடி 'தன் இச்சையால் எம்பெருமான் இங்கு வந்து பிறக்கின்றான். அன்றி நம்மைப்போல் கர்மவச்யனாய்ப் பிறக்கின்றானல்லன். அதன் முக்ய ப்ரயோஜனம் ஸாதுக்களை மகிழ்விப்பதே' என்பது இங்கே கருதப்பட்டது.

பனிரண்டாவது ச்லோகத்தில் பத்து அவதாரங்களும் ஸம்போதன விபக்தியில் தனித் தனியே கூறப்பட்டு சேர்த்து அநுஸந்தானம் செய்யப்படுகின்றன. மேலும் இந்த அவதார வைபவங்களை தினந்தோறும் அநுஸந்திக்க வேண்டுமென்றும் அப்படி அநுஸந்திப்பவர்கள் பெரும் புண்யாத்மாக்களென்றும் அவர்களை ஸேவித்து உலகம் வாழ்வுபெறுமென்றும் இங்குக் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு ச்லோகங்களின் நடுவேயுள்ள பத்து ச்லோகங்களில் ஒவ்வொன்று ஒவ்வோரவதாரத்தைப் பற்றியது. மத்ஸ்யாவதாரத்தின் அநுபவம் இரண்டுவிதம். ஒன்று ஸமுத்ரஜலத்திற்குள். மற்றொன்று அதற்குமேல். வேதங்களை அபஹரித்துப்போய் ஒளிந்திருக்கும் அஸுரனைத் தேடி எம்பெருமான் ஜலத்திற்குள் தனது பார்வையை நான்கு பக்கங்களிலும் செலுத்துகின்றான். அப்போது அவனுடைய செந்தாமரைக் கண்களின் அழகிய காந்தி பரவி எங்கும் தாமரைக்காடுகளின் தோற்றத்தை உண்டாக்குகின்றது. இப்படி மீன் வடிவிலும் புண்டரீகாக்ஷனாய் விளங்கும் தன்மை ஜலத்திற்குள் அநுபவிக்கப்படுகின்றது. ரகுவீரகத்யத்திலே மிதிலையில் தனுர்பங்கமான பிறகு

चण्डकरकिरणमण्डलबोधितपुण्डरीकवनरुचि लुण्टाकलोचन

என்று ஸ்வாமி ஸ்ரீராகவனை வர்ணித்தார். சிவ தனுஸ்ஸை யார் எடுத்து நாண் ஏற்றப் போகிறார்கள்? எப்போது ஸீதைக்குக் கல்யாணம் ஆகப்போகிறது என்று மிகவும் கலங்கியிருந்தார் ஜனகர். அதையறிந்த ஸ்ரீராகவன் தனுஸ்ஸை வெகு எளிதாக எடுத்து நாண் ஏற்றி முறித்துவிட்டு 'இனி உன் துயரம் தீர்ந்தது' என்பவர்போல் பூர்ணமாய் மலர்ந்த தனது இருகண்களாலும் ஜனகமஹாராஜனைப் பார்த்தருளினார். இதைக்குறிப்பாகக் காட்டுவதற்காக இந்த வர்ணநம் இங்கு செய்யப்பட்டிருக்கின்றது. அதனாலேயே இதற்கடுத்தபடி

मोचितजनकहृदयशङ्कातङ्क

என்று ஜனகருடைய ஆதங்கம் தொலைந்தது என்பது கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் தனுர்பங்கம் ஆனவுடனே அங்கிருந்தவர் யாவரும் 'ராமன் ஸாமான்ய மனிதனல்லன். பரமபுருஷனான ஸாக்ஷாத் புண்டரீகாக்ஷனே' என்று ஊஹித்தார்கள். இதைக் குறிப்பது இவ்வர்ணநத்தின் நோக்கு. ஒரு தாமரை

யையோ அதன் ஓர் இதழையோ எம்பெருமானுடைய திருக்கண்ணுக்கு உபமானமாகச் சொல்வது வழக்கம். ஆயினு மது பற்றாது. வானத்தில் மேகத்தின் மறைவு சிறிதுமின்றி ஜ்வலிக்கும் ஸூர்யனுடைய கிரணங்கள் பூர்ணமாகப் பட்டு நன்றாக விகஸிக்கும்படி செய்யப்பெற்ற தாமரைக் காடுதான் எம்பெருமானுடைய திருக்கண்களுக்கு ஒருவாறு உபமானமாகக் கூடும் என்பது இங்கு கருத்து. இதை விவரித்துக் காட்டுகின்றது ப்ரக்ருத மத்ஸ்யாவதார ச்லோகத்திலுள்ள உத்ப்ரேக்ஷை. எம்பெருமானுடைய அழகிய திருக்கண்களின் சிவப்பு ஸமுத்ர ஜலத்திற்குள் எம்பெருமான் எங்கு எங்கு பார்க்கின்றானோ அங்கு அங்கு தாமரைக் காடுகளைத் தோற்றுவிக்கின்றது போலும் என்பதால் அதன் சிறப்புப் புலனாகின்றது. இச் சிறப்பு வாய்ந்த திருக்கண்களுக்கு ஒரு தாமரை உபமானமாகாது என்றதாகின்றது.

அஸுரனைத் தேடிப் பிடித்துக் கொன்று வேதங்களை மீட்டு ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தவுடன் அவதார ப்ரயோஜனம் பூர்த்தியாகின்றது, ஆயினும் எம்பெருமான் அடியார்கள் கண்டு மகிழும்படி அந்த உருவத்துடன் ஜலத்தின்மேல் ஓர் அலை எழும்போது அதனுடன் தானும் மேல் சென்று, அது தாழ்ந்தபோது தானும் தாழவந்து, பிறகு அதன் எதிரில் மற்றோர் அலை எழும்போது அதனுடன் சென்று, இப்படி ஊஞ்சல் விளையாட்டு விளையாடுகின்றான்.

கூர்மமூர்த்தி சுழன்றுகொண்டிருக்கும் மந்தர பர்வதத்தின் கீழ் ஸேவை ஸாதிக்கின்றான். எல்லாத்தேவர்களும் ஒருபக்கத்திலும் எல்லா அஸுரர்களும் மற்றொரு பக்கத்திலும் நின்று இழுக்கவேண்டும்படி அவ்வளவு பெரிய பர்வதத்தைத் தாங்குவதில் அந்தக் கூர்மத்திற்கு ச்ரமம் கொஞ்சமாவது உண்டோ? இல்லை. இப்படியும் அப்படியும் அம்மலை மாறி சுழல்வது அதன்முதுகில் தினவடங்கச்சொறிவதுபோல் இருந்தது. அதனால் அதற்கு நல்ல தூக்கம் உண்டாயிற்று. தடை ஒன்றுமின்றி மூச்சுக் காற்று அலை அலையாக வெளிக்கிளம்பிற்று. அம்மூச்சுக் காற்று ப்ரபலமானது. அதனால் ஸமுத்ரஜலம் முழுவதும் கொந்தளித்தது. இதுகாரணமாக க்ஷீராப்தி சாயியான எம்பெருமானுடைய பர்யங்கம் (கட்டில்) ஊசலாடிற்று. எம்பெருமான் அந்த ஸுகத்தினால் அதை விட்டு இறங்காமல் அதன் மேலேயே இருந்து பிராட்டியோடு விளையாடிக் கொண்டிருக்கின்றான். இப்படி இங்குமிரண்டுவித அநுபவம். ஆனாலிங்குஇரண்டாவது அப்ரதானம்.

இந்த ச்லோகத்தில் **यद्विक्षेपणसंस्कृतोदधिपयः** என்கிறவிதற்கு கூர்மமூர்த்தியின் மூச்சுக் காற்றின் அலைகள் தூக்கி எறிவதினால் ஸம்ஸ்க்ருதமான, கொந்தளித்த, ஸமுத்ரஜலம்...... என்று பொருள்கொள்ளப்படுகின்றது. இங்கு **यद्विक्षेपविसंस्थुलो दधिपयः** என்பது காஞ்சீபுரம் ஸ்ரீபட்டப்பா ஸ்வாமி தமது ஸுபாஷிதநீவி வ்யாக்யானத்தில் உதாஹரித்த பாடம். முன் பாடத்தைவிட இது மிகச் சிறந்ததென்பதை ஸஹ்ருதயர் அறிவர்.

ஸ்ரீவாராஹ ரூபத்தில் 'குர் குர்' என்ற சப்தம், கோரைப்பல், இவ்விரண்டும் அனுபவிக்கப்படுகின்றன. இந்த ச்லோகத்தில் **पवित्रीकृतब्रह्माण्डप्रलयोर्मि......** என்று ஸமஸ்தமாய் சிலர் படிப்பதுண்டு. ஆனால் ....**ब्रह्माण्डः** என்று தனிப்பதமாக படிப்பதே மேல்.

கீழ்ச்சொன்ன மூன்று அவதாரங்களிலும் மனுஷ்யாம்சம் கலவாத ரூபம். அது கலந்தது நான்காவது அவதாரம். மேலும் அவற்றில் அவதரித்த இடம் ஒன்றும் குறிக்கப்படவில்லை. இதிலேயே அதைக் குறிப்பிட ஆரம்பம். இதில் பகவான் தூணிலிருந்து தோன்றுகின்றார். மேல் அவதார ரூபங்கள் யாவும் மாதாபிதாக்களிடமிருந்து தோன்றியவை.

மத்ஸ்யம் முதலிய ரூபங்கள் ஆயுதமெடுக்கத் தகுதியற்றவை. ந்ருஸிம்ஹ ரூபத்தில் தகுதியிருந்தும் ஆயுதங்களை நிராகரித்து நகங்களை அவற்றின் ஸ்தானத்தில் உபயோகிப்பட்டன.

த்ரிவிக்ரமாவதாரத்தில் மூன்றடி வைத்ததே மிக ப்ரதானம். அதுவே முக்யமாக வர்ணிக்கப்படுகின்றது. சாஸ்த்ரோக்த யஜ்ஞாதிகளைச் செய்து வீர்ய சௌர்யாதிகளைப் பெற்ற பலி சக்ரவர்த்தி தேவராஜ்யத்தை அபஹரித்ததன்றி எவருக்கும் எவ்வித ஹிம்ஸையும் செய்தவனல்லன். பரம தார்மிகனாகவும் பரமோதாரனாகவுமிருந்தான். இக் காரணத்தினால் பகவானவனை ராஜ்யத்திலிருந்து

அப்புறப்படுத்த மாத்ரம் கருதினரே யன்றி அவனுக்கு எவ்வித ஹிம்ஸையும் செய்ய ஸங்கல்பிக்கவில்லை. நேர் மாருக பூர்ண அநுக்ரஹமே செய்ய எண்ணினன். சிறு உருவத்தில் மூன்றடி கேட்டுப் பிறகு வளர்ந்து அளந்தது முழுவதும் வெறும் விளையாட்டு. பலி சக்ரவர்த்தியின் உத்தம சில வ்ருத்தங்களாலே மிகவும் ப்ரீதனுய் வெறும் பரிஹாஸமாகவே அப்படிச் செய்தான். பகவானுடைய திருவடியை தலைமேல் வைக்கப் பெறுவதைக் காட்டிலும் உத்தமமான பேறு உலகங்களில் எதுவுமில்லை. இப்பேற்றை அந்த தார்மிக அஸுரனுக்கு அளிக்கக்கோலி பகவான் ஒரு வழியைக் கையாண்டான். ஸாக்ஷாத் புருஷோத்தமன் வந்து தன்னிடத்தில் அத்யல்பமான மூன்றடி மண்ணைத்தானு பெற்றுப்போவது என்று மிகவும் வெட்கிப்போனன் பலி சக்ரவர்த்தி. லோகாதீதமான இந்த ஒளதார்யத்தைக்கண்டுகளித்த எம்பெருமான் அவனுடைய கீர்த்தி சாச்வதமாய் உலகத்தில்விளங்கவேண்டுமென்று கருதி அப்போது ருத்ரன் சிரஸ்ஸுக்கும் ஸர்வ உலகத்திற்கும் சுத்தியைத் தருவதான கங்கையைத் தோற்றுவித்தான் என்றநுபவிக்கின்ருர் தேசிகன்.

பரசுராமாவதாரத்தில் க்ஷத்ரியர்களைக் கொன்றது மேல் தோற்றத்தில் ஹிம்ஸையாகப் புலப்படுமாயினும் உண்மையில் அது ரக்ஷணமே யென்றும் பூமி முழுவதையும் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டுத் தான் புதியதோர் இடம் ஸம்பாதித்து அதில் வஸித்த படியால் க்ஷத்ரியவதம் பிறர் நன்மைக்காகவே என்பது ஸ்பஷ்டமென்றும் காட்டப் படுகின்றது.

யுத்தவீரன் தயாவீரன் தர்மவீரன் தாநவீரன் என்று வீரத்தன்மையை அறிஞர்கள் பலவாறு வகுத்திருக்கின்ருர்கள். அவ்வீரத்தன்மைகள் எல்லாம் ஸ்ரீராகவனிடத்தில் சேர்ந்து அமைந்திருந்திருக்கின்றன என்று இங்கு ஸ்வாமி குறிப்பிடுகின்ருர்.

தசாவதார வர்ணநம் செய்யப் புகுந்த கவிகளில் நைஷதகாரனன ஸ்ரீஹர்ஷன் போன்ற சிலர் புத்தாவதாரத்தை அவற்றில் ஒன்ருகக் கொண்டிருக்கின்றனர். அது 'பரித்ராணய ஸாதூநாம்' 'தர்மஸம்ஸ்தாபநார்த்தாய' என்ற அநுக்ரஹார்த்த அவதார ரக்ஷணத்திற்குச் சேராமையாலே அதை நம் ஸம்ப்ரதாயத்தில் ஆதரிப்பதில்லை. ஆகவே பலராமனைச் சேர்த்தே நமக்கு தசாவதாரம். பலராமன் எப்போதும் ஸ்ரீக்ருஷ்ணனேடு சேர்ந்தே இருப்பவராதலின் பாலுக்குச் சக்கரை எப்படியோ அப்படி க்ருஷ்ணவதாரத்திற்குப் பலராமாவதாரம் என்கின்ருர் ஸ்வாமி.

'निकटेषु निशामयामि नित्यम्' 'अखिलानवलोकयामि कालान्' 'हृदि मुग्धशिखण्डमण्डनो लिखितः' 'अनन्यमनसा' என்று பலபடியாகப்பேசிஸ்வாமி தனது திருவுள்ளத்தில் எப்பொழுதும் க்ருஷ்ணரூபமே ப்ரகாசித்துக்கொண்டிருக்குமென்பதைவெளியிட்டிருக்கின்ருர். ஆகையால் பத்து அவதாரங்களையும் பேசவேண்டியவிடத்தில் மற்ற அவதாரங்களை க்ரமமாகக் கூறிய பிறகு க்ருஷ்ணவதாரத்திற்கு வந்தவுடன் 'இது நமது ஸொந்த அவதாரமாயிற்றே' என்று மனது ஒருவித விசேஷ உறவோடு பற்றேடு அதில் இறங்குகின்றது. இதை நாதாயைவ என்று ஏவகாரம் போட்டு ஸ்வாமி காட்டுகின்ருர். மற்ற அவதாரங்களைக்காட்டிலும் இந்த அவதாரத்தில் எம்பெருமான் நடித்த நாடகம் பலவிதமானதென்றும் மிகப் பெரிதென்றும் குறிப்பிடுகின்ருர். காளியமர்தனத்தில் ஸாக்ஷாத் நாட்யமே நடந்தது என்கிருர்.

வேறுவிதமாகத் திருத்தமுடியாதபடி மிகவும் க்ரூரமான நிலையை யடைந்த கலியின் கொடுமையை நிவ்ருத்தி செய்வதற்காக எம்பெருமான் கல்கவாஹநனுய் கையில் தீக்ஷ்ணமான பெருங்கத்தியோடு வெகு பயங்கரனுய்த் தோன்றுவான். ஆயினும் அப்போது அந்தக் கத்தியைக்கொண்டு செய்யும் கார்யமும் தயாகார்யந்தானென்பதை விளக்குவதற்காக அந்தக் கத்தியை க்ருதயுக தர்மம் மறுபடியும் முளைப்பதற்கேற்ப மழையைப் பொழியும் மேகமாக ஸ்வாமி வர்ணிக்கின்ருர். இந்த ரூபகம் தயாசதகத்தில் மேலும் விஸ்தரிக்கப்படுகின்றது.

கடைசியான பதின்மூன்ருவது ச்லோகம் பலச்ருதி. இது பல அவதாரங்களைப்பற்றிய ஸ்தோத்ரமாகையால் இதைப் படிப்பவர்களுக்கு உண்டாகும் பலன்களும் பலவாயிருக்கும். மனே வாக் காயங்கள் என்ற மூன்று **கரணங்கள்** நமக்கு உள்ளன. இவற்றில் வாக்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

ஆதிதேசிகனும் ஆதிவண்சடகோபதேசிகனும்

[ஸ்ரீ. உப. வித்வான், உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, சென்னை.]

சிறந்த ஆசிரியர்களின் ப்ரபாவத்தைச் சிறிய தனியன் ச்லோகங்களைக் கொண்டு அனுஸந்திப்பது ஸம்ப்ரதாயம்போலும். ஸ்ரீதேசிகனுக்குப் போலே ஆதிவண்சடகோப தேசிகனுக்கும் தனியன் அநுஷ்டுப் ச்லோகத்தில் அமைந்துள்ளது. அஷ்டாக்ஷரமந்த்ரம்போலே அஷ்டாக்ஷரபாதமான இத்தனியன் ச்லோகமும் அநந்தார்த்தகர்ப்பமாய் திகழ்கின்றது.

ஸ்ரீ தேசிகனுக்குப் பல பிருதங்கள் இருக்கின்றன. அவற்றில் சிறந்தது ஸ்ரீ வேதாந்த தேசிக பிருதமே. ப்ரம்ம வித்யையானது ஸர்வவித்யாப்ரதிஷ்டையாம். ப்ரம்மத்தை அறிந்தால் எல்லாம் அறிந்ததாம். ப்ரம்மத்தையறியாதபோது எவ்வளவு அறிந்திருந்தாலும் அவ்வறிவெல்லாம் அறிவிற்சேரா. எல்லாம் ப்ரம்மஜ்ஞானத்தினால் பயன் படும். ஸகல சாஸ்த்ரங்களும் ஸகல வித்யாஸ்தானங்களும் ஸகல கலைகளும் வேதார்த்தத்தை வெளியிட வந்தன. வேதார்த்தங்களிற் சிறந்தது ப்ரம்மம். ப்ரம்மத்திற்கு உலகெல்லாம் சேஷபூதமாயிருப்பது போல் வேதத்திற்கு ஸகல வித்யைகளும் சேஷபூதங்கள். உலகிலுள்ள பதார்த்தங்களையெல்லாம் எம்பெருமானின் கைங்கர்யத்தில் எவ்வாறுவது அந்வயிப்பிக்க ப்ரயத்னம் செய்வது போல் எல்லா வித்யைகளையும் ப்ரம்ம வித்யையில் அந்வயம் பெறுவித்தல் அவசியம். இதர வித்யைகளில் வல்லமைக்கேற்ப வேதாந்த வித்யையில் அற்புதமான தெளிவு பிறக்கிறது. ஸ்ரீதேசிகன் கவிதார்க்கிக ஸிம்மமாய் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ருமானமையால் வேதாந்தாசார்யவர்யராய் விளங்கினார். தமக்கு இது ஸ்ரீ பாஷ்யகாரரின் அனுக்ரஹத்தினால் கிடைத்ததென்று வைத்து 'ஜயதி ஸகலவித்யாவாஹினீஜந்மசைல:' என்று அவரை வேதாந்த வித்யைக்குத் தக்கபடி எல்லா வித்யாஸ்தானங்களையும் அவற்றின் பிறப்பு எந்த நோக்கத்துடனே அந்த நோக்கத்திற்கு அழிவிராதபடி அதற்கேற்பட்ட வரம்பை மீறாதவாறு அவையிருக்கும் வண்ணம் செய்தவராய் அவ்வித்யைகளுக்கு ஸ்ரீபாஷ்யகாரரே ஆவிர்ப்பாவஸ்தானமென்றார். அப்படிச்சீர்திருந்தின வித்யைகளெல்லாம் தம்மிடம்சேர்ந்துவிளங்குவது அவர் தம்மாலேயே 'வித்யோதந்வதி வேங்கடேச்வரகவௌ' என அநுஸந்திக்கப்பெற்றது. மலையினின்று பெருகி ப்ரவஹிக்கும் ஆறுகள் கடலிற் புகுமாறு எம்பெருமானிடம் பிறந்த எல்லா வித்யைகளும் இவரிடம் புகுந்து விளங்கினமை இதனின்று அறியலாகும். நம் ஸம்ப்

குக்கு, வேதங்களை மீட்டு உபதேசித்தும் புராணங்களிலுள்ள அரிய உபதேசங்களைச் செய்தும் அநுக்ரஹித்த மத்ஸ்ய கூர்ம வராஹாவதாரங்களுடைய அநுஸந்தானத்தாலே விசேஷமுண்டாம். ந்ருஸிம்ஹ த்ரிவிக்ரம உபாஸநத்தினால் ப்ரஹ்லாதனுக்கும் பலி சக்ரவர்த்திக்கும்போல் மனஸ்ஸு மிகுந்த பக்தி உள்ளதாம். த்ரிவிக்ரமாவதாரத்திலுண்டான கங்கை, பரசுராமனுடைய புண்யகர்ம, ஸ்ரீராகவன் கட்டின ஸேது, ஸ்ரீக்ருஷ்ணன் உபதேசித்த கீதை, கல்கியின் க்ருதயுக தர்மப்ரவர்த்தனம் இவற்றை அநுஸந்திப்பதனால் காயம் சுத்திபெறும். ஆக மூன்று கரணங்களுக்கும் சிறப்பை உண்டாக்கக்கூடியது இந்த ஸ்தோத்ரம். இது தவிர பத்து அவதாரங்களை அநுஸந்தானம் செய்வதால் படிப்பவனுக்குப் பத்துத் திசைகளிலும் புகழ் உண்டாய் ஓங்கி நிற்கும். க்ஷீர ஸமுத்ரத்தில் பிராட்டி உண்டானாள். தேசிகனென்கிற வித்யா ஸமுத்ரத்தில் இந்த ஸ்தோத்ரம் உண்டாயிற்று. ஆகவே பிராட்டி. தரும் பலன்களை யெல்லாம் இந்த ஸ்தோத்ரமும் தரும்.

ரதாய பாம்பரையில் எல்லா வாசார்யர்களும்
வேதாந்தாசிரியர்களாயிருக்க இவருக்கே இதை
பிருதமாக எம்பெருமான் அளித்ததிலிருந்து
இம்மஹானின் சிறப்பு நன்கறியப் பெறும்.
ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ தேசிகன் எழுந்தருளி
யிருந்த காலத்திலே சிறந்த அபியுக்தர்கள்
பலர் இருக்க அவர்களையும் உபேக்ஷித்து இவ்
வாசார்யவள்ளலுக்கே இந்த வேதாந்தாசார்ய
பிருதத்தை அவர்களனைவரும் கொண்டாட
ஸ்ரீரங்கநாதனே அளித்தருளினனென்றால்
ஒப்புயர்வற்றன இவருடைய ஜ்ஞானவைராக்யா
நுஷ்டானங்களென்பது சொல்லாமலே விளங்
கும். எம்பெருமானாரை வேதாந்தாசார்ய
ரென்று அரங்கன் ஏன் அழைக்கவில்லையோ
என வினா எழலாம். இதற்குப் பரிஹாரமும்
பலவாறாகலாம். எம்பெருமானார் இந்த தர்சநத்
திற்கு ப்ரவர்த்தகர், ஸ்ரீ தேசிகன் ஆசார்ய
ரென பேதமுளது. ஸ்ரீமந்நாதமுனிகள் ஆள
வந்தார் எல்லோரும் ப்ரவர்த்தகராயிருக்க எம்
பெருமானாரை ப்ரவர்த்தகரென்பது ஏனெ
னில், இந்த ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தம் தர்ச
நமானது எம்பெருமானாராலென்னல் வேண்
டும். வேதாந்ததர்சநமென்பது வேத வ்யாஸ
பகவான் அருளிச் செய்த சாரீரகதர்சநமே.
நம் ஸித்தாந்தப்படி அதற்கு பாஷ்யமிட்ட
வர் எம்பெருமானாரே. அது முதல் இது தர்
சநமானதாலே எம்பெருமானார் தர்சநமென்
னப்படுகிறது. அவர் மூலம் தோன்றின தர்
சனத்தை ச்ரவணம் பண்ணுகிறவர்களுக்கு ச்ர
வணம் மனனம் இரண்டையும் சிறந்தபடியிலே
நடத்தி வைத்ததாலே தூப்புல் திருவேங்கட
முடையானே வேதாந்தாசார்யரானார். உபய
வேதாந்தங்களையும் ப்ரவசனம் செய்து ப்ர
திஷ்டை செய்த ருளினவர் இவரே. ஸ்ரீஹயக்ரீ
வனின் அவதாரமாகிப் பிறருடைய யுக்திகளை
யெல்லாம் போக்கி இந்த தர்சனத்திற்கு ஸாத
கமான ஸத்யுக்திகளைக் குறைவற எடுத்துக்
கூறி மனனம் செய்யும் முறையை நன்கு
விளக்கிப் பல ப்ரகரண க்ரந்தங்களையும் பல
உரைகளையும் வரைந்தருளின வள்ளல் இவரே.
அதிகரண ஸாராவளியின் முதல் ச்லோகத்தி
லிருந்தும் இந்த பிருதம் இவருக்கு அளித்தரு
ளினதும் அதனை இவர் பயன்படுத்தியருளின
தும் பெறப்படும். 'ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்
தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி। ஸ்வயமாசரதே
யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே' இத்யாதி
ஸ்ம்ருதிகளிலும், 'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே'
இத்யாதி ஸம்ப்ரதாயக்ரந்தங்களிலும் கூறப்
பட்ட ஆசார்ய லக்ஷணம் பரிபூர்ணமாகக் காண்
பது இவ்வாசார்யரிடமே என்று 'வேதாந்தா
சார்யவர்ய:' என்ற சொல்லால் ஸ்ரீகுமார
வேதாந்தாசார்யர் வெளியிட்டருளினர்.

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த க்ரந்தங்களை
யும் எம்பெருமானார் முதலானார் க்ரந்தங்களைப்
போலே எல்லோருக்கும் விளங்க உபதேசித்து
உபய வேதாந்தங்களிலும் ஆசார்யராய் விளங்
கின மஹாப்ராஜ்ஞர் ஆதிவண்சடகோப
யதீந்த்ர மஹாதேசிகன். ஸம்ப்ரதாயம் தழைத்
தோங்கி வளர்ந்தது இவராலேயே. ஸம்ஸ்க்ருத
க்ரந்தங்களைப்போலே திவ்யப்ரபந்த வ்யாக்யா
னங்களான ஈடு முதலானவற்றிற்கும் விசேஷ
ப்ரசாரம் செய்வித்து ஸாராஸார விவேசனத்
தில் ஸத்துக்களை இழியும்படி அனுக்ரஹித்த
வரும் இவரே. நம்மாழ்வாருக்குத் திருப்புளிய
மரத்தினருகிலேயே திவ்ய தேசத்தெம்பெரு
மான்கள் ஸேவைபளித்து அவர் மூலம் தங்
கள் விஷயமான அருளிச்செயல்களைப் பெற்று
கந்தனர் என்பது ப்ரஸித்தம். அவ்வளவு மட்
டுமின்றி வாசிகமான குற்றேவலோடு நிற்காமல்
சாயிகமான கைங்கர்யத்தையும் இந்த மஹா
னிடம் பெற்றுகக்க அஹோபிலம் அழகிய சிங்
கப் பெருமான் முன் வந்து, யதீச்வரரான
இவர் ஓரிடத்தில் நிற்காமல் ஸஞ்சாரம் செய்
பவராயிருப்பதால் இவரோடு கூடவே தானும்
ஸஞ்சாரம் செய்யத் திருவுளம் கொண்டு
அஹோபிலத்தை விட்டுக் கூடவே எழுந்தருளி
விட்டானானதால் இவருக்கு வண்சடகோப
யதீந்த்ரர் என்ற திருநாமங்கூடப்போதா
தென்னலாம். ஸ்ரீ தேசிகன் 'ஸத்துவஸ்தாந்
நிப்ருதம் ப்ரஸாதய ஸதாம் வ்ருத்திம்
ஸமாஸ்த்தாபய த்ரஸ்ய ப்ரம்மவிதாகஸந் த்ரு
ணமிவத்ரைவர்க்கிகாந் பாவய நித்யேசேஷிணி
நிக்ஷிபந்நி ஜபரம்ஸர்வம்ஸஹே ச்ரீஸகே தர்மம்

தாரய சாத்கஸ்ய க்ருதிநோ தாரா தரைகாந்திந:’ என்று ஓரரசனுக்கு உபதேசம் செய்தருளினரென்பர். முகுந்ததேவராயர் போன்றார் இம்மஹானுக்குப் பல்லலக்குச் சுமக்குமளவு தாஸபூதர்களானார்களென்றால் எவ்வளவு ப்ரபாவமிருந்திருக்கவேண்டும். இது இவர் நான்காம் ஆச்ரமத்தை ஸ்வீகரிப்பதற்குப் பூர்வமேயென்பதுமுண்டு. கடிகாசதம் அம்மாளின் அனுக்ரஹமே வடிவுகொண்டாற் போலுள்ள இம்மஹானின் ஜ்ஞானவைராக்யாநுஷ்டானங்களையும், லக்ஷ்மீந்ருஸிம்மனே இவரை விடமாட்டாமல் தொடர்ந்து வரும்படி இவருக்குள்ள பக்திப்ரகர்ஷத்தையும் கண்டே இவரையே ஆச்ரயித்து எல்லோரும் தன்யராயினர். பல க்ரந்தங்களையருளிச் செய்து உலகத்தில் புகழ் பெற்ற இரண்டாம் பட்டம் அழகிய சிங்கரின் பெருமைகளுக்கெல்லாம் இம்மஹானுடைய பரமானுக்ரஹமே ப்ரதான காரணமாகும். பெரியோர்கள் அருளிச் செய்த க்ரந்தங்களும் அவர்களின் சரித்ர விசேஷங்களும் பின்னுள்ளார் ஸரியாகப் பாதுகாப்பதில்லையாகையாலே அறியப்படாதபடியாகிறது. இரண்டாம் பட்டம் அழகிய சிங்கர் பிராட்டியின் புருஷகாரத்வம் உபாயத்வம் என்ற இரண்டையும் கௌரவிக்க விரிவாக க்ரந்தம் அருளிச்செய்திருக்க, புருஷகாரமீமாம்ஸை யென்று அதில் ஏகதேசத்தை ஏகதேசிகள் வெளியிட்டு மேல் ஸித்தாந்தபாகத்தை மறைத்துவிட்டார்களே என்று முன்னொரு கால் ஸ்ரீ இஞ்சிமேடு அழகிய சிங்கர் அருளிய பொன் மொழிகள் இப்போது நினைவுக்கு வருகின்றன. தெரிந்தமட்டுமாவது சரித்ரங்களை ரக்ஷிப்பது நலம். அகிலஹேயப்ரத்யநீகனாய் ஸகலகல்யாண குணநிதியுமான எம்பெருமானின் அவதாரமே ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகனென்பது அவருடைய தனியனின் பூர்வார்த்தத்திலிருந்து விளங்கும். ஶரணம் பவபீதாநாம் என்றது. ஸ்ரீதேசிகனருளிச் செய்தபடி சரணாகதி சாஸ்திரார்த்தத்தை நடத்தி வந்த மேன்மையை நினைப்பிக்கிறது. ஆழ்வார் எம்பெருமானார் இருவர்களின் அவதாரமான தேசிகன் இவரென்பதை யறிவிக்கிறது, ஶடகோபமுநீச்வரம் என்ற நான்காம் பாதம். விரிவுக்கு அவகாசமில்லையாகையால் இத்துடன் நிற்கிறேன்.

மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன் தாள்
தூமலர் சூடிய தொல்லருண் மாறன் துணையடிக்கீழ்
வாழ்வை யுகக்கும் இராமாநுசமுனி வண்மை போற்றும்
சீர்மையனெங்கள் தூப்புற்பிள்ளைபாதமென் சென்னியதே.

[பிள்ளையந்தாதி 20]

மறவாதே மாநிலத்தில் வண்புகழின் வண்மையெண்ணிப்
பிறவாதே பூமிதனிற் பின்னனைத்துமுய்யவெண்ணி
இறையவனே புரட்டாசித் திருக்கேட்டையிற்குருவாய்ப்
பிறந்திட்ட சடகோபன் பொன்னருளுன்பெற்றேனே.

[ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் அடைக்கலப்பத்து 8]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:।

ஸ்ரீசடகோபமாமுனிவன் வாழித்திருநாமம்

[ஸ்ரீ. உப. ரா, பத்மநாபாசார்ய ஸ்வாமி, வேதாந்தசிரோமணி, நெடுந்தெரு.]

மேலே கூறப்படும் ‘செம்பொன் சேர்’ முதலான பாக்களிலுள்ள வாக்யங்களில் ‘வாழியே’ என்கிற சொல், பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு இருப்பதாலும் ஸ்வாமி பல்லாண்டுகள் (உலகை உஜ்ஜீவிப்பிக்க) வாழவேண்டுமென்று ப்ரார்த்திப்பதாலும் அதற்கு வாழித்திருநாமம் எனப்பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

அப்பாட்டுக்களின் முன் அநுஸந்திக்கப்பட்டுவரும் ‘நமோ வரதவிஷ்ண்வார்ய’ என்கிற தனியன் ஸ்ரீமதாதிவண்சடகோப மாமுனியின் ஆசார்யரான கடிகாசதம் அம்மாள் என்கிற வரதாசார்ய ஸ்வாமியின் விஷயமானது. அதன் பின் இருக்கும் ‘கேசவார்யக்ருபாபாத்ரம்’ என்கிற தனியன் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் விஷயமானது. வாழித்திருநாமத்தை ஸேவிக்கும்போது முதலில் வாழ்த்தப்படுபவரின் ஆசார்யனின் தனியனையும், பிறகு வாழ்த்தப்படுபவரின் தனியனையும் ஸேவிப்பதானது, வாழித்திருநாமத்தை அநுஸந்திப்பதற்கு வேண்டிய அந்த:கரண சுத்தியைப் பெறுவதற்காகவும், ஸ்ரீதேசிகனின் வாழித்திருநாமத்தின் ஆரம்பத்தில் அப்புள்ளாரின் தனியனையும் ஸ்ரீதேசிகனின் தனியனையும் அநுஸந்தித்துவரும் வழக்கத்தை யநுஸரித்து இருப்பதற்காகவும் ஸம்ப்ரதாயாகதமாய் இருந்து வருகிறது.

நமோ வரதவிஷ்ண்வார்யநயநாநந்ததாயிநே।
வாத்ஸ்யாய வரதார்யாய வாதிநீஹாரபாஸ்வதே ‖

(பதவுரை) வரதவிஷ்ண்வார்யநயநாநந்ததாயிநே–வரதவிஷ்ணுவாசார் என்கிற திருநாமத்தை யுடைய நடாதூரம்மாள் திருக்கண்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவராயும், வாத்ஸ்யாய– ஸ்ரீவத்ஸகுலத்தில் உதித்தவராயும், வாதிநீஹாரபாஸ்வதே– துர்வாதிகளாகிற பனிக்கு ஸூர்யன் போன்றவராயுமிருக்கிற, வரதார்யாய– வரதாசார்யரின்பொருட்டு, நம: _ ப்ரணமம் (செய்கிறேன்)

(கருத்து) தன் பிதாமஹரான நடாதூரம்மாள் திருவுள்ளம் உகக்கும்படி ஜ்ஞாநசீலஸதாசாரஸம்பன்னராயும், ஸூர்யனைக்கண்ட பனிபோலே கடிகாசதம் அம்மாளைக் கண்டமாத்ரத்திலேயே துர்வாதிகள் உருத்தெரியாமல் மறைந்து போகும்படி பகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணத்தை அநாயாஸமாகச் செய்துகொண்டு ஜ்ஞாநார்ணவமாக எழுந்தருளியிருந்தவருமான வரதாசார்யர் என்கிற கடிகாசதம் அம்மாளை வணங்குகிறேன்.

(குறிப்பு) ஒரு நாழிகைக்குள் நூற்றுக்கணக்கான ச்லோகங்களைக் கவனம் செய்யும்படியான மேதாவிலாஸத்தோடு அம்மாள் எழுந்தருளியிருந்ததாலே ‘கடிகாசதம் அம்மாள்’ என்கிற சிறப்புப் பெயர் பெற்றதாகப் பெரியோர் பணிப்பதைக் கொண்டும் அம்மாள் அங்யாத்ருசமான ஜ்ஞாநம் பெற்றவர் என்பது அறியத்தக்கது.

கேசவார்யக்ருபாபாத்ரம் தீசமாதிகுணார்ணவம் ।
ஸ்ரீசடாரியதீசாநதேசிகேந்த்ரமஹம் பஜே ॥

(ப-ரை) கேசவார்யக்ருபாபாத்ரம்- கேசவாசார்யரின் தயைக்குத் தங்கும் இடமாயும், தீசமாதிகுணார்ணவம்- ஜ்ஞாநம் சாந்தி முதலான குணங்களுக்குக் கடலாயுமிருக்கும், ஸ்ரீசடாரியதீசாநதேசிகேந்த்ரம்- ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனே, அஹம்- நான், பஜே- ஸேவிக்கிறேன்.

(கரு) தன் தகப்பனாரான கிடாம்பி கேசவாசார்யரின் தயைக்குப் பாத்ரமாய் அவராலே பஞ்சஸம்ஸ்காராதிகள் செய்விக்கப்பட்டு 'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே' என்கிறநிலைமையோடும், பிறகு கடிகாசதம் அம்மாள் ஸன்னிதியில் ஆச்ரயித்து ஸகலவேதாந்தசாஸ்த்ரார்த்தவிசேஷஜ்ஞாநமும், புலனடக்கங்களும், ஆத்மகுணங்களும் பெற்று 'ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்' என்கிற நிலைமையோடும் ஆசார்யலக்ஷணபரிபூர்ணராய் ஸ்வாமி எழுந்தருளியிருந்தமை பூர்வார்த்தத்திலநுஸந்தேயம். உத்தரார்த்தத்தில் ஸ்வாமியை ஸ்ரீந்ருஸிம்ஹன் அஹோபிலத்திற்கு வரவழைத்து ஸந்யாஸாச்ரமத்தையும் சடகோபன் என்கிற தாஸ்ய நாமத்தையும் அளித்து ஆசார்யபதத்தில் அபிஷேகம் செய்தருளினது அநுஸந்தேயம்.

(கு-பு) ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய 'ப்ரபத்யே நிரவத்யாநாம்' என்கிற மற்றொரு தனியனை வாழித்திருநாமம் அநுஸந்திக்கும் காலங்களில் அநுஸந்திக்கும் ஸம்ப்ரதாயமில்லை. ஆகையால் அந்தத் தனியனுக்கு இவ்விடத்தில் உரை எழுதாமல் வாழித்திருநாமத்தின் உரை எழுதி முடிந்த பிறகு அதற்கு உரை எழுதப்பட்டிருக்கிறது.

செம்பொன்சேர்சிங்கவெற்புச் செழிக்கவந்தோன் வாழியே
சீர்பெரும்பூதூர் முனிவரனே சகத்துதித்தோன் வாழியே
பண்புடைய வம்மாள்தன் பரிவுடையோன் வாழியே
பாடியத்தைப் பலகாலம் பகுத்துரைப்போன் வாழியே
பொன்பெயரோன் மார்பிடந்தான் புகழுரைப்போன் வாழியே
புரட்டாசிக் கேட்டைதனில் புவியுதித்தோன் வாழியே
தண்புகழ்சேர் மாறனுரை சாற்றிடுவோன் வாழியே
சடகோபமாமுனிவன் தாமரைத்தாள் வாழியே

(ப-ரை) செம்பொன்சேர்சிங்கவெற்பு- அழகிய ஸ்வர்ணரேகைகளோடு கூடிய சிங்கவேழ்குன்றம், செழிக்க- அம்மலையின் பெருமையை நாடுநகரமும் நன்கறியும்படி செய்வதற்காக, வந்தோன்- அவதரித்தவன், வாழியே- வாழ்தலே வேண்டும். இங்கே ஏகாரமானது வாழ்தலுக்கு ஒருபோதும் குறைவு வராதிருத்தலை வேண்டுவதைக் காட்டுகிறது. இவ்விதமே மேலுள்ள வாழியே என்னும் சொற்களுக்கும் பொருள் அறியத்தக்கது. சீர்பெரும்பூதூர்முனிவரனே- சீர்மைகள் வாய்ந்த ஸ்ரீபெரும்பூதூரிலவதரித்த யதிராஜரே, சகத்துதித்தோன்- இவ்வுலகின் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்குவதற்காக மறுபடியும் சடகோபமாமுனியாக அவதரித்தார் என்று பெரியோர்களால் பேசப்படும் ஸ்வாமி வாழியே. பண்புடையவம்மாள்தன்- ஜ்ஞாநாநுஷ்டானவைராக்யாதிகல்யாணகுணங்கள் நிறைந்த கடிகாசதம் அம்மாளுடைய, பரிவுடையோன்- ப்ரீதிபெற்றவரான ஸ்வாமி வாழியே. பாடி-

யத்தை— ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யங்களை, பலகாலும் பகுத்து உரைப்போன்— பல தடவைகள் அர்த்தவிசேஷங்களை விவேசனம் செய்து கொடுத்து காலக்ஷேபம் ஸாதித்த ஸ்வாமி வாழியே. பொன்பெயரோன் மார்பிடந்தான்— ஹிரண்யாஸுரனுடைய மார்பைப்பிளந்து ஸம்ஹரித்தவனான ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய, புகழுரைப்போன்— கீர்த்தியை உலகுக்கு எடுத்துச்சொல்லும் ஸ்வாமி வாழியே. புரட்டாசிக்கேட்டைதனில் புவியுதித்தோன்— புரட்டாசி மாதத்திய திருக்கேட்டை நக்ஷத்திரத்தில் பூமியில் உதயம் செய்த ஸ்வாமி வாழியே. தண்புகழ்சேர்மாறனுரை— குளிர்ச்சியான புகழோடு கூடிய நம்மாழ்வார் பாசுரங்களை, சாற்றிடுவோன்— அருளிச்செய்பவரான ஸ்வாமி வாழியே. சடகோபமாமுனிவன் தாமரைத்தாள்— சடகோபயதீந்த்ரனுடைய தாமரைபோன்ற திருவடிகள் வாழியே.

(கரு) செம்பொன் என்பது வடமொழியில் ஹிரண்யகர்ப்பன் என்றும், திருநெடுந்தாண்டகம் இரண்டாவது பாசுரத்தில் 'ஒன்று பொன்னுருவம்' என்றும் சொல்லப்படுகிற நான்முகனைக் கூறுவதாக ஸ்வாபதேசார்த்தம் கொண்டால் நான்முகன் முதலானோர் வணங்கும் சிங்கவெற்பு என்று பொருள் ஏற்படும். இப்பொருளுக்கு ஆதாரமாக 'நாத்தழும்ப நான்முகனும் ஈசனுமாய் முறையாலேத்த' என்கிற மங்கையர்கோன் மகிழ்ந்து பாடும் சிங்கவேள் குன்றப் பாசுரமிருப்பதால் இவ்வர்த்தம் மிக்கப் பொருத்தமுடையது. இங்கே 'மணியானவாறுயிராமணிமுத்துத்தாழ்வடத்து' என்கிற சடகோபனந்தாதிப் பாசுரத்தின் கருத்து அநுஸந்தேயம். ஸூக்ஷ்மபுத்தி ஸதாசாராதிகுணங்களாலே தன் ஆசார்யரான அம்மாளின் விசேஷப்ரீதியைப் பெற்று கன்றுக்கிரங்கிச் சுரக்கும் ஸுரபிபோல் அம்மாள் அருள் சுரந்தருளிய ஜ்ஞாநாம்ருதத்தைப் பெற்றவர் ஸ்வாமி. ஷஷ்டிப்ரபந்தநிர்மாதாவான நாராயணயதீந்த்ரமஹாதேசிகன் வைதிகஸார்வபௌமரென்னும், நம்பாக்கம் தோழப்பர் முதலான மஹான்களான ஜ்ஞாதாக்கள் தோன்றும்படி ஸ்ரீபாஷ்யத்தையும் கீதாபாஷ்யத்தையும் தாம் எழுந்தருளியிருந்த அறுபது சாதுர்மாஸ்யங்களில் பலதடவை காலக்ஷேபம் ஸாதித்து 'சாரீரகப்ரவசநவ்ரதமாத்ரியேதா:' என்கிறநியமனத்தின்படியே ஸ்வாமி எழுந்தருளியிருந்தார். ஆச்ரிதரக்ஷணைகதீக்ஷிதனான ஸ்ரீந்ருஸிம்ஹனின் பெருமை 'என் சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே' என்று மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வாராலும் ஆராய்ந்து அறியமுடியாததாயுள்ளது என்று ஸ்ரீந்ருஸிம்ஹனின் புகழை எடுத்துரைப்பவர். கேட்டை நக்ஷத்திரம் இந்த்ரனை தேவதையாகவுடையது. இந்த்ரசப்தம் ஸர்வேச்வரனான பரமாத்மாவைத்தான் ப்ரதானமாகக்கூறும் என்று ஸ்ரீபாஷ்யத்தில் இந்த்ரப்ராணாதிகரணத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 'பச்சைமாமலைபோல் மேனி' என்கிற திருமாலைப் பாசுரத்திலும் 'இந்திரலோகமாளும்' என்பதற்கு இவ்விதமே பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது, இவவிதம் இந்த்ர சப்தத்திற்கு உள்ள பொருளையும் இதை தேவதையாகக் கொண்ட கேட்டை நக்ஷத்திரத்தில் ஸ்வாமி அவதரித்ததையும், ஸ்ரீந்ருஸிம்ஹன் ஸ்வாமியிடம் அநுப்ரவேசித்து அதனால் ஸ்வாமிக்கு அழகியசிங்கரென்கிற திருநாமமேற்பட்டதையும், அதற்கு ஒத்தவாறுள்ள ஸ்வாமியின் அதிமாநுஷமான நம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்தல் முதலான சரித்ரங்களையும், 'ப்ரபத்யே நிரவத்யாநாம்' என்கிற தனியனின் விசேஷார்த்தத்தையும் திருவுள்ளத்தில் கொண்டுதான் 'இறையவனே புரட்டாசித் திருக்கேட்டையில் குருவாய்ப் பிறந்திட்ட சடகோபன்' என்று அந்தாதியில் கூறப்பட்டிருக்கிறது. இப்பிரமாணங்கள் கூறுகிறபடி ஸ்ரீந்ருஸிம்ஹனுடைய அம்சமாய் புரட்டாசித் திருக்கேட்டையில் புவியில் அவதரித்த ஸ்வாமி வாழியே. இவ்வாக்யத்தில் புரட்டாசிக் கேட்டையில் அவதரித்த ஸ்வாமி என்கிற ஸமாந்யார்த்தத்தைமாத்திரம் விவக்ஷிக்கும்பக்ஷத்தில் இப்பாட்டின் முதல் வாக்யத்திலுள்ள 'செம்பொன்சேர் சிங்கவெற்புச் செழிக்கவந்தோன்' என்கிற சொல்லுக்கு ஸ்ரீந்ருஸிம்ஹன் என்கிற பொருளை விவக்ஷித்து ஸ்வாமியினுடைய அழகிய

சிங்காவதாரபாவமானது அநுஸந்தேயம். கேட்பவர்களை பரமாத்ம குணாநுபவத்தில் ஆழ்த்தி அத்யாத்ம தாபங்களை மறந்து நிற்கும்படி குளிரச்செய்யும் தன்மை வாய்ந்தது என்கிற கீர்த்தியோடு கூடிய திருவாய்மொழியை ஈடு முதலான வ்யாக்யானங்களுடன் சிஷ்யர்கள் ஆனந்திக்கும்படி காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமி வாழியே. தாமரை முதலான மலர்களைப்போல் சிஷ்யர்களால் பரமபோக்யமாகத் தலைமேல் தரிக்கப்படும் ஸ்வாமியின் திருவடிகள் வாழியே.

இரகஸ்யத்ரயஸாரத்தின் ரஸமுரைப்போன் வாழியே
இரகஸ்யமுப்பத்திரண்டும் ரஸித்துரைப்போன் வாழியே
அகவாயிலுயிர்களுய்ய அருள்படைத்தான் வாழியே
ஆழ்வார்தம் கிருபையான அம்ஸமுத்திரை வாழியே
திகழ்திருநூல் திருவேணுத்திருச்சிகையும் வாழியே
திருவிலச்சினைசேர்ந்த திருத்தோள்கள் வாழியே
அகல்ஞாலத்தவரறிய ஆறளித்தான் வாழியே
அங்கைதன்னில் ஸ்ரீகோசமழகுடனே வாழியே.

(ப-ரை) இரகஸ்யத்ரயஸாரத்தின்ரஸம்– ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்னும் பெரிய ரஹஸ்யத்தின் ஸ்வாரஸ்யத்தை, உரைப்போன்– அருளிச்செய்பவர் வாழியே. இரகஸ்யமுப்பத்திரண்டும்– ஸம்ப்ரதாயபரிசுத்தி முதலான சில்லரைரஹஸ்யங்களை, ரஸித்துரைப்போன்– அநுபவித்து அருளிச்செய்யும் ஸ்வாமி வாழியே. உயிர்களுய்ய– ப்ராணிகள் யாவும் நற்பயன் பெற்று வாழவேண்டு என்று, அகவாயில் அருள்படைத்தோன்– திருவுள்ளத்தில் க்ருபையுடைய ஸ்வாமி வாழியே. ஆழ்வார்தம் க்ருபையான அம்ஸமுத்திரை– நம்மாழ்வாருடைய தயாரூபமான ஹம்ஸமுத்திரை வாழியே. திகழ்திருநூல் திருவேணுத்திருச்சிகையும்– விளங்குகின்ற யஜ்ஞோபவீத த்ரிதண்ட சிகைகள் வாழியே. திருவிலச்சினை சேர்ந்த திருத்தோள்கள்– சிறந்த வைலக்ஷண்யத்துடன் கூடிய அதாவது ‘தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் கோயில் பொறியாலே ஒத்துண்டு’ நிற்குதல் என்கிற ஸ்ரீவைஷ்ணவத்வசிறப்புடன் விளங்கும் தோள்கள் வாழியே. அகல்ஞாலத்தவரறிய– விரிந்த இவ்வுலகத்தினர் யாவருமறியும்படி, ஆறு– உபாயத்தை, அளித்தான்– காட்டிக்கொடுத்தவரான ஸ்வாமி வாழியே. அங்கைதன்னில்– அழகான திருக்கையில், அழகுடனே– சோபையுடன் விளங்கும், ஸ்ரீகோசம்– வேதாந்தசாஸத்ர தாளபத்ரகோசமானது வாழியே.

(கரு) சிறியகண்ணாடி பெரிய உருக்களைக்காட்டுமாப்போலே எட்டெழுத்துக்கொண்ட மந்த்ரமானது அத்யாத்ம சாஸ்த்ரஸாரார்த்தங்களையெல்லாம் அறிவிக்கும் விதத்தை பெரிய ரஹஸ்யத்தில் ஸ்ரீதேசிகன் உபபாதிக்கிற ஸ்வாரஸ்யத்தையும், பெரிய ரஹஸ்யமானது தன்னை யதாவத்தாக அறிந்தவர்களுக்கு உடனே பரமபுருஷ சரணாகதியை அநுஷ்டித்தாலல்லது தரிக்கமாட்டாத ஓர் ஸாத்விக நிலைமையை யுண்டாக்கும் தன்மையதாய் இருக்கும் ஸ்வாரஸ்யத்தையும், அதில் ஸ்ரீதேசிகன் ஒவ்வொரு அதிகாரத்திலும் விரித்து உரைத்த அர்த்தவிசேஷங்களை தாஸஜனங்கள் மனத்தில் ஏற்றிவைத்துக்கொள்வதற்காக ச்லோகரூபமாகவும் பாசுரரூபமாகவும் சுருக்கித் தெரிவித்திருக்கும் ஸ்வாரஸ்யத்தையும் உபதேசிக்கும் ஸ்வாமி வாழியே.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:।

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

நெடுந்தெருவில் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் உத்ஸவம் 14-9-55ல் உபக்ரமிக்கப்பட்டு நாலாயிரம், தேசிகப்ரபந்தம், வேதபாராயணம், க்ரந்தசதுஷ்டய பாராயணங்கள் ஒவ்வொரு நாளும் இரண்டு வேளையும் எல்லா சாற்றுமுறைகளும், காலையில் திருவாய்மொழி முதலாயிரம் சாற்றுமுறையும் ராத்திரி இயற்பா திருமொழி தேசிக ப்ரபந்த சாற்றுமுறையும் மற்ற நித்யசாற்றுமுறைகளும் விமர்சையாக நடந்தது. 23-9-55 புரட்டாசி 7உ சாற்றுமுறை விமர்சையாக நடந்தது.

மறுநாள் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்திற்காக திருவாய்மொழி வேதபாராயணம் உபக்ரமிக்கப்பட்டு முன்மாதிரியாகவே நடந்து 27-9-55ல் சாற்றுமுறை நடந்தது. 29-9-55 காலை ஸ்ரீகீதாபாஷ்யமும், சாற்றுமுறை முடிந்தது. அவ்வூரிலுள்ளவர்களும் மற்றும் வெளியூரிலுள்ளவர்களும், சேர்ந்து ரஹஸ்யத்ரயஸாரம் ஆரம்பித்தபடியால் பதயோஜனாதிகாரம் தவிர மேல் சம்ப்ரதாயப்ரக்ரியாபாகம் துடர்ந்து காலக்ஷேபம் நடந்து பூர்த்தியாயிற்று. கீதா பாஷ்யம் விடாமல் பூர்த்தியாயிற்று.

1-10-55 உத்தானத்திற்கு முன்தினம் திருமுடிவிளக்கம் ஸ்ரீஸங்கல்பத்திற்கு நடந்ததுபோல் நடந்தது. அன்று ததியாராதனம் ஸ்ரீ. உ.வ. நெடுந்தெரு ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் குமாரர் ஸ்ரீ அட்வொகேட் நரஸிம்ஹாச்சாரியார் நடத்திவைத்தார். ஏற்கனவே உத்தானத்திற்கு நரஸிம்ஹபுரம் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றியிருந்தாலும் 3மைலிலுள்ள அய்யம்பேட்டை சாவடி அக்ரஹாரத்திலுள்ளவாகள் ரொம்பவும் ப்ரார்த்தித்தபடியால் அவ்விடம் எழுந்தருளியாயிற்று.

நெடுந்தெருவில் எழுந்தருளியிருக்கும்போதே கபிஸ்தலம் எஸ்டேட் திருசுப்ரமண்ய மூப்பனார் கருப்பய்யாமூப்பனார் வகையறா முன்ஸஞ்சாரத்தின்போது சில அஸௌகர்யத்தால் கபிஸ்தலம் எழுந்தருள முடியாமல் போய்விட்டது. இப்பொழுது அவச்யம் எழுந்தருளவேணுமென்றும், தஞ்சாவூர் சப் ஜட்ஜ் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அடிக்கடி வந்து நெடுந்தெருவில் பெருமாளை ஸேவித்திருக்கிறபடியாலும் அவரும் சாங்க்ஷன் வாங்கியிருக்கிறபடியாலும் அவச்யம் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

பாபநாசம் டாக்டரும் ஷை டிரஸ்டின் டிரஸ்டியும் அவச்யம் எழுந்தருளவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தபடியால் குறுக்கில் 8 மைலிலுள்ள ஷை கபிஸ்தலம் எழுதருளியாயிற்று.

தஞ்சாவூரிலிருந்து ப்ரமுகர்கள் வந்திருந்து மறுநாள் வியாழக்கிழமை 6-10-55 ல் மண்டபத்திலுள்ள எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சனமும் ராத்ரி டோலையும் நடத்திவைத்தார்கள். ஷை தினம் தஞ்சாவூரிலிருந்து வக்கீல்களும் ஜட்ஜ் நரஸிம்ஹ அய்யங்காரும் வந்திருந்தார்கள். தஞ்சாவூர் ஸ்ரீவைஷ்ணவ சபையின் சார்பாக பெருமாளுக்கு உபயமாக நல்ல உயர்ந்த கம்பளியில் இரண்டு திரை ஸமர்ப்பித்தார்கள். மறுநாள் ராத்ரி அவ்விடமிருந்து புறப்பட்டு 5 மைலிலுள்ள நரஸிம்ஹபுரம் எழுந்தருளியாயிற்று. நரஸிம்ஹபுரத்தில் 8-10-55 ல் ரொம்ப காலத்திற்கு முன்னால் பெருமாள் எழுந்தருளி இருந்ததாகவும் சொல்லப்பட்ட கர்ப்ப

க்ருஹத்தை பரிஷ்கரித்து காலாபுரமும் மதிலும் ஏற்படுத்தி நன்ருகப் பரிஷ்கரிக்கப்பட்ட ஸந்நிதியில் பெருமாளுடைய விசேஷ நியமனத்தின் பேரில் பெருமாள் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸ்ரீஅஹோபிலத்தில் மாலோலன் ஸந்நிதியில் எழுந்தருளியிருப்பது போல் எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டை நடத்தப்பட்டது.

இதையும் தக்ஷிண அஹோபிலமென்றும் நரஸிம்ஹபுரம் என்ற பெயருக்கேற்ப, பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியிருப்பது ரொம்பவும் பொருத்தமென்றும் திருவுள்ளம் பற்றி பெருமாளை அந்த ஸந்நிதியில் எழுந்தருளப் பண்ணியாயிற்று. கிழக்கில் ஆதனூர் திவ்ய தேசமும் மேற்கில் புள்ளபூதங்குடியும் மத்தியில் இந்த திவ்யதேசமும், சிங்கவேழ்குன்றத்தெம்பெருமானும் எழுந்தருளியிருந்து அன்று த்ரிதாமாவாக ஸேவை ஸாதித்தார். அந்த ஸேவையில் எல்லோரும் ஈடு பட்டார்கள். காலை அபிகமன ஆராதனம் முடிந்ததும் புள்ளபூதங்குடி பெருமாளையும் ஆதனூர் பெருமாளையும் மங்களாசாஸநம் செய்து கொண்டு எழுந்தருளி ப்ருந்தாவனக்குளத்தில் மாத்யாஹ்நிக ஸ்நாநம் செய்துகொண்டு அவ்விடம் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்ட 8ந் திருநாள் மண்டபத்தில் காலை அநுஷ்டாநம் முடித்துக்கொண்டதுபோல் மத்தியானம் அநுஷ்டாநத்தையும் அவ்விடம் முடித்துக்கொண்டு மங்களஹாரத்திக்கு எழுந்தருளியாயிற்று.

மத்யாஹ்நம் திருக்குடந்தை வாஸிகளான பவுண்டரீகபுரம் ஸ்ரீஆராவமுதய்யங்கார், வக்கீல் ஸ்ரீராகவாச்சாரியார், ஸ்ரீகல்யாணராமய்யங்கார், டாக்டர் ஸ்ரீமஹாலிங்கஐயர் அவர் தகப்பனர், ஸ்ரீராகவாச்சாரி, இவர்கள் மறுபடியும் திருக்குடந்தைக்கு எழுந்தருள வேண்டுமென்று கபிஸ்தலத்தில் பிரார்த்தித்திருந்தார்கள். அதை அநுஸரித்து நரஸிம்ஹபுரத்தில் வந்து அவச்யம் எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். அந்தப்படி எழுந்தருள்வதாக ஸாதித்தாயிற்று. அன்று திருக்குடந்தை ஸ்ரீஅழகியசிங்கர் மாஸதிரு நக்ஷத்ரமாகையால் அன்று ஸ்ரீஅழகியசிங்கரை பெருமாள் ஷெஸந்நிதிக்கு எழுந்தருளப் பண்ணி மங்களாசாஸநம் பண்ணிவைத்தாயிற்று. மத்யானம் நாலு மணிக்கு மறுபடியும் ஷெ ஸ்ரீஅழகியசிங்கரை ப்ருந்தாவனத்திற் கெழுந்தருளப்பண்ணியாயிற்று. அவ்விடமுள்ள எல்லா ஸ்ரீ அழகியசிங்கர்களையும் மங்களாசாஸநம் செய்துவிட்டு, அவ்விடமே காலக்ஷேபம் ஸாதித்துவிட்டு ஸாயங்கால அநுஷ்டாநத்திற்கு ஆச்ரமமெழுந்தருளியாயிற்று. ராத்ரி ஆராதனம் முடிந்து புறப்படும் காலத்தில் ரொம்பட்டமழை பெய்தபடியால் மழைவிட்ட பிறகு 1 மணிக்குப் புறப்பட்டு திருக்குடந்தைக்கு எழுந்தருளியாயிற்று. குறிப்பிட்ட காலத்தில் எழுந்தருள முடியாதபடிக்கு மழை பெய்ததைக்கண்டு திருக்குடந்தை வாஸிகள் ரொம்ப கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். 4-30 மணிக்கு 8மைலுள்ள திருக்குடந்தைக்கு பெருமாள் ஸ்ரீமடத்திற்கு எழுந்தருளினது கேட்டு அவர்களுக்கு ஸந்தோஷம் ஏற்பட்டது. பெருமாள் திருக்குடந்தைக்கு எழுந்தருளின பிறகு மழை பெய்தது. பொழுது விடிந்தவுடன் மழை நின்றது. அன்று 9-10-55ல் காலை விச்வரூபஸேவைக்கு முன் 2 தடவை எழுந்தருளியபோது வந்த கூட்டத்தைவிட ஜாஸ்திவந்திருந்தார்கள். பெருமாள்வடதேசத்திற்கு எழுந்தருள்வதால் ஆஸ்தையுடன் கூடியவண்ணமிருந்தார்கள். விசேஷ ததீயாராதனம் அன்று மடம்நிறைய (ஸேவார்த்திகள் இருந்து) நடந்தது. ராத்ரி புறப்பட்டு 11 மைலிலுள்ள நெடுங்கொல்லை சத்ரத்திற்கு எழுந்தருளியாயிற்று 10-10-55 இரவு ஆராதனம் முடிந்ததும் அவ்விடமிருந்து 12 மைலுள்ள கஞ்சங்கொல்லைக்கு ஷெ கண்ட்ராக்ட் ஸ்ரீவீரராகவ ஐயங்கார் முன் கபிஸ்தலத்திற்கு வந்திருந்து பிரார்த்தித்ததால் அவ்விடம் எழுந்தருளியாயிற்று. 11-10-55 ல் கஞ்சங்கொல்லையில் காலையில் ஸ்ரீ 41 வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வர்ஷாராதனத்தை உத்தேசித்து வேத, திவ்யப்ரபந்த, க்ரந்த சதுஷ்டய பாராயணங்கள் உபக்ரமிக்கப் பட்டன. இங்கிருந்து ஸ்ரீமுஷ்ணம், பாதூர் வழியாக கூடிய சீக்கிரத்தில் திருவஹீந்த்ரபுரம் எழுந்தருளியாகும். நடுவில் எந்தெந்த அக்ரஹாரத்திற்கு அவர்கள் பிரார்த்திக்கிருர்களோ அவ்விடம் எழுந்தருளிக்கொண்டே எழுந்தருளியாகும்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ।

செய்திகள்

மஹாதேசிகர்களின் மஹோத்ஸவங்கள்

திருவுள்ளூர்

ஸ்ரீ அஹோபிலமடம் 33- வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஜகத்விக்யாதகீர்த்திமானுயெழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் வார்ஷிக மஹோத்ஸவம் ஸ்ரீ அழகியசிங்கரது ப்ருந்தாவனத்தில் 2 நாள் முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டு புரட்டாசி விசாகத்திருநாளில் சாற்றுமுறையோடு இனிது முடிந்தது. திருநக்ஷத்திரத்தன்று காலையில் ஸ்ரீ அழகியசிங்கர் சத்ரசாமராதி ஸகலபிருதுகளோடு முன்பு ஸ்தோத்ரபாடகோஷ்டியும், பின்பு வேதபாராயண கோஷ்டியும் சூழ்ந்து வர கோயிலை ப்ரதக்ஷிணமாக நாலு பெரியவீதிகளிலும் எழுந்தருளி ஸந்நிதிவீதியிலெழுந்தருளினர். கோபுரவாயிலில் பாராயணங்கள் முடிக்கப்பெற்று நேராக கச்சேரிமேடைக்கு எழுந்தருளினர். அங்கு கண்ணாடியறை ஸமீபத்தில் ஸிம்ஹாஸனத்தில் 'தயா ஸஹா ஸீநம்'என்றபடி ஸ்ரீ கநகவல்லியுடனும் தேவிமாருடனும் நாநாவித விசித்ர திவ்யாபரணாலங்க்ருதனாய் அந்தரத்தில் வாழ்வானோர் நாயகனையமைந்த இந்திரர்க்கும் தம் பெருமானானை எவ்வுள் கிடந்தான் அஞ்சலைனக் கரம் வைத்து வணங்கி வழிபடவந்த வண் ஶடகோபயதிபதிக்கு தாம் சூடிக் களைந்தவைகளான மாலை பரியட்டங்களை ப்ரஸாதித்துப் போர உகந்தருளினான். பிறகு 'காசையாடை' பதிகத்தாலும், ரகுவீரகத்யம் கிங்க்ருஹேஶ ஸ்துதி, ஸ்ரீஸ்துதி முதலான ஸ்தோத்ரங்களாலும் வழக்கப்படி மங்களாசாஸனம் நடந்தது. பெருமாள் துடங்கி இதாநீந்தன ஸ்ரீ அழகிய சிங்கர்பர்யந்தமான ஸ்ரீஸந்நிதி குருபரம்பரை தனியன்களும் ஸேவிக்கப்பட்டு கோஷ்டிக்கு சர்க்கரை, சந்தன தாம்பூலவிநியோகமாயிற்று. அங்கிருந்து விடைகொண்டு ஸ்ரீமதாதிவண் ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்து மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு. அங்கிருந்தும் விடைபெற்று ப்ருந்தாவனத்திற்கெழுந்தருளினர். அங்கு வாயிலில் பாராயணங்கள் சாற்றுமுறையானதும் உள்ளே எழுந்தருளினர்.

பிறகு திருமஞ்சனமானதும் திருப்பாவை சாற்றுமுறை நடந்து ஸம்பாவனையாகி கோஷ்டிக்கு தீர்த்தவிநியோகாதிகள் நடந்தேறின. மாலையிலும் காலையிற்போலவே ஸகலபிருதுகளோடும் லைட் மத்தாப்புவாணங்களோடும் ஸ்ரீ அழகியசிங்கர் புறப்பாடாகி கோயில் வலமாக ஸந்நிதிக்குள்ளெழுந்தருளி கச்சேரிமேடையிலெழுந்தருளியிருந்து கண்ணாடியறை மண்டபத்தில் ஸேவைஸாதிக்கும் எவ்வுள்பெருமாளையான ஸ்ரீபூமிநீளாகநகவல்லீஸமேத ஸ்ரீவீரராகவப்பெருமானை மங்களாசாஸனம் செய்து, மரியாதைகளைப்பெற்றுக்கொண்டார். பின்பு ஸ்ரீஸந்நிதிவாழித்திருநாமம் தனியன்களும் ஸேவிக்கப்பட்டு, திவ்யதம்பதிகளிடம் நியமனம் பெற்றுக்கொண்டு ஸ்ரீமதாதிவண்ஶடகோபயதீந்த்ரமஹாதேசிகனையும் மங்களாசாஸனம் செய்து மரியாதைகளானதும் ப்ருந்தாவனத்திற்கெழுந்தருளி பாராயணங்கள் சாற்றுமுறையானதும் ஆஸ்தானத்திற்கெழுந்தருளினர். பின்னர் ஸேவையானதும், கோயிலிலிருந்து ஸ்ரீவீரராகவனமுசெய்த திருப்பணியாரங்களும் மாலைகளும் சத்ரசாமராதிகபிருதங்களோடு வீதிவலமாகக் கொண்டு வந்து அமுது செய்விக்கப்பட்டு, சாற்றுமுறையான பிறகு கோஷ்டிக்கு தீர்த்தவிநியோகாதிகள் நடந்து மிகவும் சிறப்பாக இம் மஹோத்ஸவம் நடந்தேறியது.

புரட்டாசித் திருக்கேட்டையிலவதரித்த ஸ்ரீமதஹோபிலமடம் திவ்யாஸ்தானஸ்தாபகரான ஸ்ரீமதாதிவண்ஶடகோப யதீந்த்ரமஹாதேசிகனுடைய வார்ஷிகமஹோத்ஸவம் வழக்

கப்படி 10 தினங்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது. தினந்தோறும் காலையில் திருமஞ்சனமும் மாலையில் வீதியில் புறப்பாடாகி உத்ஸவமும் ராத்திரி ஸேவை சாற்றுமுறைகளும் நடந்தன. திருக்கேட்டையன்று காலையில் திருமஞ்சனமாகி கோயிலுக்குள் எழுந்தருளி ஒவ்வொரு ஸந்நிதியிலும் உபஹாராதி ஸமர்ப்பணபூர்வகம் ஸ்தோத்ராதிகளை அநுஸந்தித்து மங்களாசாஸநமாகி விசேஷமரியாதைகளைப் பெற்றுக்கொண்டு மஹாதேசிகன் கண்ணுடியறைக்கு எழுந்தருளினர். அங்கு அலங்க்ருதமான தங்கப்பல்லக்கில் ஆரோஹணம் செய்து ஸகலபிருதங்களும் புடைசூழ, வாத்யங்கள் முழங்க, ஸ்தோத்ரபாடகர்கள் முன்னும் வேதபாரகர்கள் பின்னும் பாராயணம் செய்து வர நான்கு வீதிகளிலும் உத்ஸவம் கண்டருளி பாராயணங்கள் முடிக்கப்பட்ட பிறகு கண்ணுடியறைக்கெழுந்தருளினர். பின்னர் சாற்றுமுறைக்காக அங்யாத்ருசமாக ஸர்வாபரணபூஷிதனுய் மன்மதமன்மதனுக் கண்டவர் கண்ணையும் மனத்தையும் கொள்ளையிட்டுக்கொண்டு பவனிவர ஸித்தமாயிருந்த திவ்ய தம்பதிகளை எதிர்கொண்டு ப்ரதக்ஷிணமாக கண்ணுடியறை வரையில் எழுந்தருளி, அங்கு கநகவல்லித்தாயாரை நிறுத்தித் தமது மடத்திற்கு எவ்வுள்கிடந்தானை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்று பீதாம்பராதிகளை ஸம்பாவனை பண்ணி உயர்ந்த ஸிம்ஹாஸனத்திலெழுந்தருளப் பண்ணி, அதிவிலக்ஷணமான திருமஞ்சனத்தைக் கண்டருளப்பண்ணி மிக மகிழ்ந்தார். பின்பு ஸேவை, திருவாராதனமாகி திருப்பாவை சாற்றுமுறையும் நடந்து தீர்த்தவிநியோகாதிகள் நடந்தன. ராத்திரி லைட், மத்தாப்பு முதலியவைகளுடன் பெருமாள், ஸ்ரீ நிகமாந்தகுரு, ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஆகியோர் வீதி உத்ஸவம் கண்டருளி கோயிலுக்குள் எழுந்தருளியதும் தாயாரும் எழுந்தருளி தேசிகன் ஸந்நிதிக்கெழுந்தருளினர்கள். அங்கு தேசிகனின் உத்ஸவத்தை முன்னிட்டு ஸேவை சாற்றுமுறைகளானதும் திவ்யதம்பதிகளும் ஆதிவண்சடகோபயதிபதியும் கண்ணுடியறைக்கு எழுந்தருளி ஸேவை திருவாராதனமானதும் மரியாதைகளானதும் சாற்றுமுறை நடந்தது. பிறகு கோஷ்டிவிநியோகாதிகள் நடந்து பெருமாளையும்பிராட்டியையும் ஆஸ்தாநத்திலெழுந்தருளப்பண்ணி, அவர்களிடம் நியமனம் பெற்றுக்கொண்டு தம் மடமேற எழுந்தருளினர்.

ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகனுக்கு இதே மாதிரி 10 தினங்கள் மிக விமரிசையாக உத்ஸவம் நடந்தது. சாற்றுமுறையன்று காலையில் மங்களாசாஸனமும், தங்கப்பல்லக்கில் வீதி உத்ஸவமும், பிறகு பெருமாள், தாயார், ஸ்ரீ தேசிகன் இவர்கள் தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளிய அழகும் வாசாமகோசரமாயிருந்தது. திருமகளூர் ராகவனும் கண்டருளிய திருமஞ்சனம் லோகோத்தரமாயிருந்தது. திருப்பாவை சாற்றுமுறையாகி கோஷ்டியும் வெகு நன்ருக நடந்தது. ராத்திரி வீதிஉத்ஸவம் மிகசேர்த்தியாக, விசேஷமாக வாத்யம் லைட் மத்தாப்பு பாணவேடிக்கைகளுடன் நடந்தது. உபயவேத பாராயணகோஷ்டியானது உத்ஸவத்தின் சோபையைப் பன்மடங்காக்கிற்று. உத்ஸவம் முடிந்து தேசிகன் ஸந்நிதிமண்டபத்தில் பெருமாளும் தாயாரும் எழுந்தருளினர்கள். அங்கு ஸேவையாகி திருவாராதனம் நடந்தது. ஸ்ரீ தேசிகனுக்கு அருளிப்பாடு ஆகி மரியாதைகளானதும் சாற்றுமுறை நடந்து கோஷ்டிக்குத் தீர்த்தவிநியோகாதிகளானதும் பெருமாளும் தாயாரும் ஆஸ்தானத்திற்கெழுந்தருளினர்கள். இம் மஹோத்ஸவங்களைக்கண்டுகளிக்க வெளியிடங்களிலிருந்து பலபக்தர்கள் வந்திருந்து, 'போற்றியுகந்து புந்தியுட்கொண்டு பொங்குபுகழ் சாற்றி வளர்த்து ஆதிகுருவின் திருவருளையும், மஹாதேசிகர்களின் பேரருளையும் பெற்றுப் பேரின்பமெய்தினர்.

பாதூர், தூப்புல், ராமபத்ராசாரியர், சிரோமணி, ஸ்ரீ அஹோபிலமடம், திருவுள்ளூர்.

திருவல்லிக்கேணி

மன்மத ஸூ ஆவணி மீ 26௳ முதல் திருவல்லிக்கேணி தேரடிவீதியிலுள்ள ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் அவதாரமஹோத்ஸவம் மிக விமரிசையாக நடந்தேறியது. ப்ரதிதினம் இரண்டுவேளைகளிலும் விசேஷமான அலங்காராதிகளுடன் சத்ரசாமரமேளவாத்யங்களோடு உபயவேதபாராயணகோஷ்டிகளில் அநேக ஸ்ரீ வைஷ்ணவர்கள் அந்வயித்துப் பாராயணங்களை சீர்மையுடன் செய்துவர, ஸ்ரீ பார்த்தஸாரதி பவனிவரும் வீதிகளில் உத்ஸவம் கண்டருளினார். காலையில் வீதி உத்ஸவமானதும் திருமஞ்சனமும்பாராயணங்களுமா கிசாற்றுமுறை கோஷ்டியானதும் ததீயாராதனமும் விசேஷமாக நடந்தது. ராத்திரியிலும் உத்ஸவமானதும் ஸேவை சாற்றுமுறையாகி, கோஷ்டிவிநியோகமானதும், பாராயணகார ஸ்வாமிகளுக்கு ததீயாராதனம் நடந்து வந்தது. திருக்கேட்டையன்று ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் மங்களாசாஸனமாகி மரியாதைகளாயிற்று. வழக்கப்படி திருவுள்ளூரிலிருந்து வந்திருந்த எவ்வுள்கிடந்த எம்பெருமானின் மாலை பரியட்டங்களை சத்ரசாமரவாத்யங்களுடனும் ஸ்வஸ்திவாசனத்துடனும் தேரடியிலிருந்து எழுந்தருளப்பண்ணி அருளிப்பாடிட்டு மரியாதை நடந்தது. ராத்திரி வீதி உத்ஸவம் முடிந்து ஸேவையாகி சாற்றுமுறை வெகு விலக்ஷணமாக முடிந்தது.

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகனுக்கும் இதேரீதியில் அவதாரதினமான புரட்டாசித்திருவோணத்தில் ஆரம்பித்து வழக்கப்படி பத்து திநங்கள் நடைபெற்றது. சாற்றுமுறை தினத்தில் மங்களாசாஸநம், திருமஞ்சனம், ததீயாராதனம், வீதி உத்ஸவம், சாற்றுமுறை முதலியவையெல்லாம் முன் உத்ஸவத்திற் போலவே மிக நேர்த்தியாக நடைபெற்றன. மறு நாள் பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்குத் ததீயாராதனம் செய்வித்து ஸம்பாவனைகளும் யதாக்ரமம் பண்ணப்பட்டது. இவ் வருஷம் இம் மஹோத்ஸவங்களை ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனப்படி மஹாதேசிகர்கள் உகக்கும்படி பக்திச்ரத்தைகளுடன் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடர்களாவஏஜண்ட், ஸ்ரீ. உப. N. G. கிருஷ்ணய்யங்கார்ஸ்வாமி (அட்வகேட்) சிறப்புற நடத்தி வைத்தார்.

‘தேவமிவாசார்யமுபாஸீத’ என்கிற வசநத்தின்படி மஹாதேசிகர்களின் மஹோத்ஸவங்களில் வைசாகோத்ஸவாதிகளிற்போலே ஆழ்ந்த ஈடுபாட்டுடன் தந்தாம் அதிகாரத்திற்கும் சக்திக்கும் ஏற்ப அந்வயித்து உதவிபுரிந்த அனைவருக்கும் ஆசார்யோத்தமர்களது அநுக்ஹத்தினால் ஐஹிகாமுஷ்மிகங்களான ஸகல ச்ரேயஸ்ஸுக்களும் மேன்மேலும் அபிவ்ருத்தமாகுமென்பது திண்ணம்.

தேசிக பக்தன்

திருவஹீந்திரபுரம்

நம் தூப்புல் வள்ளல் உகந்தருளின திருப்பதியான அயிந்தைமாநகரில் மற்றவிடங்களை விட விலக்ஷணமாக நடந்த அவப்ருதாந்தமான ஸ்ரீ தேசிகனின் ப்ரஹ்மோத்ஸவம் அத்யத்புதமாயிருந்தது. இவ்வுத்ஸவகாலத்தில் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையில் ஓர் வித்வத்ஸதஸ் நடந்தது. ஸதஸ்ஸிற்கு ஸ்ரீ. உப. திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி தலைமை வஹித்து ‘வேதாந்ததேசிகன்’ ‘வேதாந்தாசாரியர்’ என்னும் விஷயங்களைப்பற்றி உபந்யஸித்தார். மற்றும் பல பண்டிதர்கள் ஸ்ரீ தேசிகனின் ஒவ்வொரு திருநாமங்களையும் விஷயமாக்கி உபந்யாஸங்களைச் செய்தனர். ப்ரதிதினமும் ஸதஸ் ஸ்ரீ. உப. இ. தே. ஸ்ரீநிவாஸாசார்யரின் ஸ்ரீ தேசிகப்ரபந்தகானத்துடன் ஆரம்பமாயிற்று. இந்த ஸதஸ் ஸ்ரீ. உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் ஸ்மாரகார்த்தமாக அவருக்கு ஆப்ததமரான ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார் ப்ரப்ருதிகளால் நடத்தப்பட்டது. இம் மாதிரி ஸதஸ் நடத்த வழிகாட்டிய ஸ்ரீ. உப. வி. வி. ஸ்வாமியையும், இப்படி நற்காரியங்களுக்கு ஓர் தனிச்சிறப்புடன் விளங்கும் ஸ்ரீ தேசிகன் திருமாளிகையையும், அத்திருமாளிகைக்குத் தமது அஸாதாரணப் பெருமை பூண்ட திருக்கைகளால் ஸ்திவாரக்கல்நாட்டிய ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி விசேஷணவிசிஷ்டரான ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கரையும் மறக்க முடியுமா? ஒருக்காலும் மறக்கவியலாது!

ஸ்ரீ. உப. இ. தே. ஸ்ரீநிவாஸாசார்யாரால் ஸுசிக்ஷிதர்களான ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ர பாடங்களை ஒப்புவித்த சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஸபையோரால் 'ஸ்ரீ குலசேகராழ்வார்சரித' நாடகம் நன்கு நடிக்கப்பெற்றது.

டி. தேவநாதன்.

திருநாராயணபுரம்

ஸ்ரீ திருவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்ரத்தை உத்தேசித்து அம்மஹானின் அவதாரஸ்தலமான திருநாராயணபுரத்தில் (21-9-55) புதன் கிழமை வேத ப்ரபந்த பாராயணங்கள் உபக்ரமிக்கப்பட்டது. திருக்கேட்டையன்று (23-9-55) (வெள்ளிக்கிழமை) ஸ்ரீஸந்நிதியில் வேதப்ரபந்த சாற்றுமுறையானதும் ஸ்ரீசடாரி மாலை பரியட்டம் முதலியவைகளை ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் ஸ்ரீசடகோபஜீயருக்கு அருளப்பாடுடன் ஸமர்ப்பிக்கப்பட்டன. பிறகு கோஷ்டிக்கு தீர்த்தம் சடாரி ஸ்ரீபாததீர்த்தங்கள் எடுக்கப்பட்டன. அன்று ஸாயங்காலம் ப்ருந்தாவன மண்டபத்திற்கு உபய நாச்சிமாருடன் ஸ்ரீஸம்பத்குமாரனும், ஸ்ரீபாஷ்யகாரரும் எழுந்தருளினர்கள். ப்ருந்தாவனத்திலுள்ள மண்டபத்தில் திருவாராதனம் ஆனதும் நம் ஜீயருக்கு அருளப்பாடுடன் மரியாதையா கோஷ்டிக்கு தீர்த்தம் ப்ரஸாதம் விநியோகிக்கப்பட்டன. பாராயணத்தில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கு யதோசிதம் ஸம்பாவனை செய்யப்பட்டது.

கஸ்தூரி ஸ்ரீநிவாஸாச்சாரியார்
ஆராதகர்

மதுராந்தகம்

இவ்வூரில் 10 தினங்கள் வீதி உத்ஸவத்துடன் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் உத்ஸவம் மிகவும் நன்றாக நடந்தேறியது. இவ்வுத்ஸவத்தை உள்ளூர் ஸ்வாமிகளும், ஸம்ஸ்க்ருத கலாசாலை உபாத்யாயர் ஸ்வாமிகளும், வித்யார்த்திகளும், பாராயண கோஷ்டிகளில் அந்வயித்து மிகச்சிறப்புறச் செய்தார்கள், சாற்றுமுறை திருவீதிப் புறப்பாடாகி ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகன், ஜனகவல்லித்தாயார் முதலியவர்களை மங்களாசாஸனம் பண்ணியாயிற்று ஸாயங்காலம் பத்தி உலாத்தலானதும் திரும்பி எழுந்தருளும்போது ஸம்ஸ்க்ருதகலாசாலையில் மண்டபப்படியாயிற்று. பிறகு மடத்திற்கு எழுந்தருளியானதும் விசேஷமாக சாற்றுமுறை நடந்தேறியது.

ஸ்ரீநிவாஸ தாஸன்

பம்பாய்

ஸ்ரீ தேசிக ஸபையின் ஆதரவில் வழக்கம்போல் இவ்வருஷமும் ஸ்ரீதேசிகன் திருநக்ஷத்ரம் 10 நாள் முன்னதாக உபக்ரமிக்கப்பட்டு மிகவும் நன்றாக நடந்தேறியது. மத்தியில் திருக்கேட்டையன்று ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம் நடைபெற்றது. சென்ற ஸம்வத்ஸரத்தை விட இவ்வருஷம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தி மிக அதிகமாக இருந்தது.

N. சடகோப தாஸன்

மற்றும் மைஸூர், ஸ்ரீவில்லிபுத்தூர், காருக்குறிச்சி, திருக்குறுங்குடி, திருச்சேரை, வில்லூர், வடக்கப்பட்டு முதலியவிடங்களில் ஸ்ரீ ஆசார்யர்களின் உத்ஸவம் 10 தினங்கள் அதி விமரிசையாக நடந்த செய்திகள் வந்துள்ளன. அவகாசமின்மையினால் அவைகளை விரிவாகப்ரசுரிக்க முடியவில்லை (ஸ-ர்)

ஓர் விஜ்ஞாபனம்

நமது ஆசார்ய ஜயந்தி மலருக்கு மேலும் பல பண்டிதர்கள் வ்யாஸங்கள் எழுதி அனுப்பியுள்ளார்கள். அவகாசக்குறைவினால் இம்மலரிலேயே போடமுடியாததற்கு வருந்துகின்றோம். அடுத்துவரும் ஸஞ்சிகைகளில் ப்ரசுரிக்கின்றோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ஸ்ரீ தக்ஷிணாயனம் சரத் ருது - துலா மீ 1955 அக்டோபர் - நவம்பர்]

18-10-55	ஐப்பசிமீ 1உ	செவ்வாய்க்கிழமை	துலாசுக்ல த்ருதீயை திதி.
22-10-55	5உ	சனிக்கிழமை	ஸப்தமிதிதி, பூராடம்; ஸேனைமுதலியார் திருநக்ஷத்ரம்.
23-10-55	6உ	ஞாயிற்றுக்கிழமை	அஷ்டமிதிதி.
24-10-55	7உ	திங்கட்கிழமை	அதிதி.
25-10-55	8உ	செவ்வாய்க்கிழமை	நவமிதிதி; திருவோணம்; பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்; மஹாநவமி.
26-10-55	9உ	புதன்கிழமை	அவிட்டம்; பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்; விஜய தசமி.
27-10-55	10உ	வியாழக்கிழமை	சதயம்; பேயாழ்வார் திருநக்ஷத்ரம்; ஏகாதசி.
30-10-55	13உ	ஞாயிற்றுக்கிழமை	சதுர்தசி - பூர்ணிமை திதித்வயம்.
31-10-55	14உ	திங்கட்கிழமை	ப்ரதமை திதி.
10-11-55	24உ	வியாழக்கிழமை	ஏகாதசி:
12-11-55	26உ	சனிக்கிழமை	ராத்ரி நரகசதுர்தசி ஸ்நாநம்.
13-11-55	27உ	ஞாயிற்றுக்கிழமை	தீபாவளி.
14-11-55	28உ	திங்கட்கிழமை	● அமாவாஸ்யை.
16-11-55	30உ	புதன்கிழமை	வ்ருச்சிக ரவி 32-42; விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; துலா - வ்ருச்சிக சுக்ல த்விதீயை திதி.

[தக்ஷிணாயனம் சரத் ருது - வ்ருச்சிக மீ]

19-11-55	கார்த்திகைமீ 3உ	சனிக்கிழமை	பூராடம்; 43-வது பட்டம் **ஸ்ரீவீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன்** திருநக்ஷத்ரம்.
20-11-55	4உ	ஞாயிற்றுக்கிழமை	உத்திராடம்; 34-வது பட்டம் ஸ்ரீசடகோப ராமாநுஜயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
25-11-55	9உ	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
26-11-55	10உ	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்; கைசிக உத்தாந ஏகாதசி.
29-11-55	13உ	செவ்வாய்க்கிழமை	கிருத்திகை; திருமங்கைமன்னன், நம்பிள்ளை திருநக்ஷத்ரம்; சந்த்ரக்ரஹணம்; பாசஞ்ராத்ர (திருக்கார்த்திகை) தீபம்.
30-11-55	14உ	புதன்கிழமை	ப்ரதமைதிதி; ரோஹிணீ; திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்.

[குறிப்பு:— 1. கார்த்திகை மாதத்தில் சுக்ல த்விதீயை திதியே இல்லாமற்போவதால் ஐப்பசிமீ 30உ புதன்கிழமை யன்றையதினமே வ்ருச்சிக சுக்ல த்விதீயை திதியில் செய்யவேண்டிய ச்ராத்தங்களைச் செய்யவேண்டியது.

2. கார்த்திகைமீ 13உ சந்த்ரக்ரஹணமானதால் அன்று செய்யவேண்டிய பர்வ திதி ச்ராத்தத்தை மறுநாள் 14உ செய்யவேண்டியது.]

பங்காரு வாசல் (திருமலை)



Regd. No. M. 4437